**ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ்**

ஆண்டறிக்கை 2020/21

SriLankan
Airlines





# உள்ளடக்கம்

## மேற்பார்வை

எமது தூரநோக்கு மற்றும் எமது பணி 2
முன்னிலைப்படுத்தல்கள் 4


## முகாமைத்துவ அறிக்கைகள்

தவிசாளரின் செய்தி 5
பிரதம நிறைவேற்று அதிகாரியின் செய்தி 7
பணிப்பாளர்கள் சபை 11
சிரேஷ்ட முகாமைத்துவக் குழு 14
தொழில் முனைவின் இடர்நேர்கை முகாமைத்துவம் 18
கூட்டாண்மை ஆளுகை அறிக்கை 19
முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு 21


## நிதி அறிக்கைகள்

பணிப்பாளர்கள் சபையினுடைய வருடாந்த அறிக்கை 42
சபை கணக்காய்வுக் குழுவின் அறிக்கை 2020/2021 46
பணிப்பாளரின் பொறுப்புகள் பற்றிய கூற்று 47
சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கை 48
நிதி நிலைமைக் கூற்று 52
இலாபம் அல்லது நட்டக் கூற்று 53
விரிவான வருமானக் கூற்று 54
உரித்துவத்தில் ஏற்படும் மாற்றங்களிலான கூற்று 55
காசுப் பாய்ச்சல் கூற்று 56
நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புகள் 57


## இணைப்புக்கள்

அருஞ்சொல் விளக்கக்கோவை 108
பத்து வருட பகுப்பாய்வு 110
விமானப் பயண வரைபடம் 112
மைல்கற்கள் 114
கூட்டாண்மை தகவல்கள் 116

கூட்டம் பற்றிய அறிவித்தல் 117
பதிலாள் படிவம் 119


குறிப்பு:
இந்த தமிழ் ஆண்டறிக்கை, ஆங்கில ஆண்டறிக்கையின் மொழிபெயர்ப்பாகும். மொழிபெயர்ப்பில் குழப்பங்கள் காணப்படுமிடத்து, ஆங்கில அறிக்கையை பார்க்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

## எமது தொலைநோக்கு

ஆசியாவிலேயே மிக உயர்ந்த வாடிக்கையாளர் மையமான விமான நிறுவனமாக வருதல்

## எமது பணிநோக்கு

எமது வாடிக்கையாளர்களை, ஓர் நம்பிக்கையுடைய மற்றும் ரம்மியமான பிரயாண அனுபவத்தினை அரவணைப்பு மற்றும் விருந்தோம்பலுடன், ஸ்ரீலங்கன் முறையில் மகிழ்விப்பதற்கு. நாம் ஓர் தகுதிவாய்ந்த, முன்னியக்கம் மற்றும் விடாமுயற்சியுடனான நிதியியல் ரீதியில் சாத்தியமான நிறுவனமாக, எமது பங்காளிகளின் எதிர்பார்ப்புக்களை சந்திப்பதற்கு கடுமுயற்சி செய்கின்றோம்.





ENG 1
ENG 2
FIRE
FIRE
APU
HYD
HYD
FUEL
FUEL
ELEC
ELEC
AIR
AIR
MAINTENANCE MENU 1/2

# முன்னிலைப்படுத்தல்கள்

| | | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|---|
| | | 2021 | 2020 | 2021 | 2020 |
| **நிதி** | | | | | |
| வருவாய் | ரூ. மில். | 50,928.92 | 183,531.82 | 50,693.85 | 180,151.02 |
| இயக்க செலவு | ரூ. மில். | 82,450.50 | 188,699.06 | 81,405.99 | 190,321.69 |
| வரிக்கு முந்திய நட்டம் | ரூ. மில். | (49,761.57) | (44,104.72) | (45,231.46) | (47,197.86) |
| ஆண்டின் நிகர நட்டம் | ரூ. மில். | (49,704.51) | (44,139.40) | (45,231.46) | (47,197.86) |
| மொத்த சொத்துக்கள் | ரூ. மில். | 157,882.79 | 186,428.56 | 154,381.41 | 181,189.60 |
| பங்குதாரர்களின் நிதி | ரூ. மில். | (281,490.87) | (261,173.54) | (289,265.27) | (273,369.08) |
| **போக்குவரத்து** | | | | | |
| பயணிகள் கொள்திறன் | ASK மில். | | | 3,816.40 | 18,041.41 |
| ஒட்டுமொத்த கொள்திறன் | ATK மில். | | | 794.52 | 2,454.30 |
| கொண்டுசென்ற பயணிகள் | RPK மில். | | | 748.13 | 14,547.97 |
| கொண்டுசென்ற ஒட்டுமொத்த சுமை | RTK மில். | | | 312.26 | 1,664.49 |
| பயணிகள் சுமைக் காரணி | % | | | 19.60 | 80.64 |
| ஒட்டுமொத்த சுமைக் காரணி | % | | | 39.30 | 67.82 |
| சமநிலை சுமைக் காரணி | % | | | 71.65 | 74.95 |
| **பணியாளர் உற்பத்தித்திறன்** | | | | | |
| சராசரி வலிமை | எண்ணிக்கை | 6,981 | 7,709 | 5,965 | 6,693 |
| ஒருவருக்கான வருமானம் | ரூ. மில். | 7.30 | 23.81 | 8.50 | 26.92 |
| **விமானத் தொகுதி** | | | | | |
| A320-200 | எண்ணிக்கை | | | 5 | 5 |
| A321-200 | எண்ணிக்கை | | | 1 | 2 |
| A320 NEO | எண்ணிக்கை | | | 2 | 2 |
| A321 NEO | எண்ணிக்கை | | | 4 | 4 |
| A330-200 | எண்ணிக்கை | | | 5 | 5 |
| A330-300 | எண்ணிக்கை | | | 7 | 7 |
| வருட இறுதியில் சேவையிலுள்ள விமானங்கள் | எண்ணிக்கை | | | 24 | 25 |

# தவிசாளரின் செய்தி

"பெருந்தொற்றினால் தூண்டப்பட்ட குறிப்பிடத்தக்க சவால்கள் இருந்தபோதிலும், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் குடும்ப அங்கத்தினர் கம்பனி மற்றும் தேசத்தின் சார்பாக - பாதுகாப்பான மற்றும் நம்பகமான அத்தியாவசிய விமான போக்குவரத்து சேவைகளை வழங்கியதன் மூலம் மனதில் நிலைத்து நிற்கக் கூடிய பணியினைச் செய்துள்ளனர்..."

ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் வரலாற்றில் 2020/21 நிதியாண்டானது மிகவும் சவால்மிக்க ஆண்டுகளில் ஒன்றாக காணப்பட்டது, இவ்வாண்டில் தொழிற்துறையானது கோவிட்-19 பெருந்தொற்றுக்கு எதிராக மிகவும் போராடியது.

பிரயாணத் துறைக்கான கேள்வியில் பெருந் தொற்றின் தாக்கம் கடுமையாக காணப்பட்டதுடன் பல சந்தைகளில் குறிப்பாக மீளாய்வு ஆண்டின் முற்பகுதியில் பல மாதங்களுக்கு சர்வதேச பிரயாணங்கள் நிறுத்தப்பட்டன. இந்த ஆண்டு காலப் பகுதியில் முன்னொருபோதும் நிகழ்ந்திராத அளவு எல்லை மூடல்கள் மற்றும் பிரயாண கட்டுப்பாடுகள் இலங்கையின் பயணிகளின் கொள்திறனை 79% ஆக குறைக்க நிர்ப்பந்தித்தது. எவ்வாறாயினும், சவாலை எதிர்கொண்டு இலங்கையின் ஏற்றுமதித் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் தனது பயணிகள் விமானங்களின் இயலுமையை பயன்படுத்தி பிரத்தியேகமாக சரக்கினை ஏற்றிச் செல்லும் வலையமைப்பை உடனடியாக அறிமுகப்படுத்தியது. இந்த நடவடிக்கையின் மூலம் இந்த ஆண்டு காலப்பகுதியில் விமான நிறுவனத்தின் சரக்கு வருவாய் 74% ஆல் அதிகரித்து, இலங்கை ரூபாய் 27.3 பில்லியனைக் கொண்டு வந்தது. சரக்குகளின் கேள்வியினைப் பூர்த்தி செய்வதற்காக பல புதிய பயண வழிப் பாதைகள் அறிமுகம் செய்யப்பட்டன, மேலும் இந்த பயண வழிப் பாதைகள் இப்போது பயணிகள் போக்குவரத்திற்கு சேவை செய்ய நிலைமாற்றம் செய்யப்பட்டுள்ளன.

பயணிகள் வணிகத்தின் குறிப்பிடத்தக்க இழப்பை ஈடுகட்ட சரக்கு வருவாயின் அதிகரிப்பு மட்டும் போதுமானதாக காணப்படவில்லை என்பதுடன் குழுமத்தின் வருவாய் 2019/20 கோவிட்-19 க்கு முந்தைய ஆண்டோடு ஒப்பிடும்போது 72% ஆக குறைந்துள்ளது. ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் இருப்பினைக் கொண்ட சில சந்தைகளில் பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதன் விளைவாக 2021 ஆம் ஆண்டின் இறுதியில் ஆரம்பித்த விமான சேவைப் பயணத்தில் குறிப்பிடத்தக்க மீட்சி ஏற்பட்டுள்ள போதிலும், விமான சேவை தொழிற்துறையால் ஏற்பட்ட வருவாய் இழப்புகள் தொடர்கின்றன.

எதிர்மறையான சந்தை நிலைமைகள் எங்களின் அனைத்து வணிக அலகுகளிலும் தாக்கம் செலுத்தின - இவை எமது துணை நிறுவனமான வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங் உள்ளடங்கலாக விமானப் போக்குவரத்துடன் நேரடியாக தொடர்புடைய அலகுகளில் நேரடியான தாக்கத்தினை செலுத்தின. இதன் விளைவாக, வட்டி, வரி, பெறுமானத் தேய்வு மற்றும் பெறுமானக்குறைப்பு என்பவற்றுக்கு முந்தைய குழுமத்தின் வருவாய் (EBITDA) முந்தைய ஆண்டில் நேர்மறை இலங்கை ரூபாய் 14.2 பில்லியனுடன் ஒப்பிடும்போது எதிர்மறையான இலங்கை ரூபாய் 14.8 பில்லியன் ஆக இந்த ஆண்டு காணப்படுகிறது. இந்த நிதியாண்டின் தேறிய நட்டமாக இலங்கை ரூபாய் 49.7 பில்லியன் காணப்பட்டது, பிடித்து வைத்தல் வரியிலிருந்து ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் க்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளதால், முந்தைய ஆண்டுகளில் ஏற்பாடு செய்யப்பட்ட பிடித்து வைத்தல் வரியான இலங்கை ரூபாய் 16.4 பில்லியன் மீள் எழுதுதலை உள்ளடக்கியுள்ளது.

தொற்றுநோய்களின் சவால்களை முறியடித்து நிலையான வளர்ச்சியை அடையும் நோக்குடன், சபையின் விரிவான உள்ளீட்டுடன் எதிர்பாரா நிகழ்வுகளுக்கான திட்டங்களை ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் மேம்படுத்தியது. இந்தத் திட்டங்களின் அடிப்படையில், தொற்றுநோயால் எதிர்கொள்ளப்பட்ட சவால்களில் இருந்து தன்னைத் தானே விடுவித்துக் கொள்வதற்காக, விமான நிறுவனம் தனது செலவுத் தளத்தை வருடத்தில் மேம்படுத்த குறிப்பிடத்தக்க முயற்சிகளை மேற்கொண்டது மற்றும் அதன் அனைத்து ஒப்பந்தங்கள் மற்றும் செயன்முறைகளின் பிரதான மீளாய்வினை மேற்கொண்டது. வழங்குனருடனான ஒப்பந்தங்கள் மற்றும் விமான குத்தகை ஒப்பந்தங்கள் உட்பட அனைத்து செலவுகளையும் பற்றிய மீள் கலந்துரையாடல் ஒன்றினை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட குத்தகை மறுசீரமைப்பானது காசுப் பாய்ச்சலுக்கு உதவுவதற்கான கொடுப்பனவு ஒத்திவைப்புகளுக்கு மேலதிகமாக விமான உரிமைத்துவ செலவில் குறிப்பிடத்தக்க நிரந்தரமான குறைப்பை வழங்கியுள்ளது. மூலோபாய முன்முயற்சிகளுக்குப் பின்னால் உள்ள வினைத்திறன் மேம்பாடுகள் உள்ளார்ந்த அலகுக்கான செலவை கட்டுப்படுத்த குறிப்பிடத்தக்க நன்மைகளை அளித்துள்ளன. மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளில் பல கடினமானவைகள் உள்ளடங்குகின்றன ஆனால் சரியான

# தவிசாளரின் செய்தி

நேரத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸினை மீட்டெடுப்பதற்கு அவசியமானவையாகும். 2021 ஆம் ஆண்டின் இறுதியில் இருந்து சில மாதங்களுக்கு கம்பனி மற்றும் குழுமம் இரண்டும் இலாபமிகுதன்மையினை அடைந்ததன் மூலம், இந்த புதிய முயற்சிகள் இப்போது தனது விளைவுகளை வழங்கத் தொடங்கியுள்ளன என்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் தற்போது அடியெடுத்து வைத்திருக்கும் பாதையின் ஊடாக, கம்பனியானது விரைவில் நிதியியல் ரீதியான உறுதிப்பாட்டினை அடைய உதவும் என்று நான் நம்புகிறேன்.

பெருந்தொற்றினால் தூண்டப்பட்ட குறிப்பிடத்தக்க சவால்கள் இருந்தபோதிலும், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் குடும்ப அங்கத்தினர் கம்பனி மற்றும் தேசத்தின் சார்பாக - பாதுகாப்பான மற்றும் நம்பகமான அத்தியாவசிய விமான போக்குவரத்து சேவைகளை வழங்கியதன் மூலம் மனதில் நிலைத்து நிற்கக் கூடிய பணியினைச் செய்துள்ளனர். இந்த ஆண்டில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், வெளிநாடுகளில் சிக்கித் தவிக்கும் இலங்கைப் பிரஜைகளைத் திருப்பி நாட்டிற்கு அழைத்து வருவதற்காக 259 விமானங்களை இயக்கியதுடன், முக்கியமான கோவிட் தடுப்பூசிப் பொருட்கள் மற்றும் பிற அத்தியாவசிய மருத்துவப் பொருட்களை நாட்டிற்கு பாதுகாப்பாக கொண்டு வருவதற்காக விமானங்களை இயக்கியது. வரலாற்று ரீதியாக, நெருக்கடியான காலங்களில், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் எப்போதும் நாட்டின் கொண்டு செல்லுனராக விமான நிறுவனத்திடமிருந்து எதிர்பார்க்கப்படும் அத்தியாவசிய சேவைகளை முன்னின்று வழங்கியுள்ளது. சுகாதார மற்றும் பாதுகாப்பு தொடர்பான சவால்களால் ஏற்படும் அனைத்து இன்னல்களை சமாளிக்கும் இந்த திறனுக்கு பெருந்தொற்றுக் காலமானது மற்றொரு உதாரணமாகும். இன்றுவரை அவர்களது தொழில்முறை வாழ்க்கையில் மிகவும் கடினமான காலகட்டத்திற்கு முகம் கொடுப்பதன் மத்தியில், எங்களின் பெறுமதி மிக்க ஊழியர்கள் காட்டிய அற்புதமான மீட்டெழுச்சியினை அடையாளம் காண இதை ஒரு வாய்ப்பாக மாற்ற நான் விரும்புகிறேன்.

வணிக விமானசேவை தொழிற் துறையானது அதன் நீண்ட வரலாற்றில் எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவாலுக்கு இந்த பெருந் தொற்று காரணமாக உள்ளது. இந்த நெருக்கடியைத் தொடர்ந்து, உலகளாவிய தடுப்பூசி வெளியீடுகள் மற்றும் பயணக் கட்டுப்பாடுகளின் படிப்படியான தளர்வுகள் என்பன கேள்வியின் மீட்சியினை தொடர்வதற்கு வழிவகுக்கும் என்ற நம்பிக்கையை அளிக்கிறது. இலங்கையின் சுற்றுலாத் தொழிற் துறையில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் பிரதான பங்காற்றுவதுடன், இந்தத் துறை மற்றும் நாட்டினது பொருளாதாரத்தின் மீள் எழுச்சிக்கு ஆதரவளிக்க முழுமையாக அர்ப்பணிப்புடன் உள்ளது.

வரலாற்றில் மிகவும் கடினமான சவால்களை எதிர்கொண்டு ஒரு வருடத்தை கடந்த நிலையில் நிறுவனத்திற்கான அவர்களின் அர்ப்பணிப்பு மற்றும் ஆதரவிற்காக பணிப்பாளர் சபையின் சக உறுப்பினர்களுக்கும், முன்னாள் பிரதம நிறைவேற்று அதிகாரி திரு.விபுல குணதிலக அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். விமான சேவை தொழிற்துறையினுள் தனது அனுபவ முதிர்ச்சியினைத் தன்னுடன் கொண்டு வரும் பதில் பிரதம நிறைவேற்று அதிகாரி திரு. ரிச்சர்ட் நட்டலை வரவேற்கவும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்துகிறேன்.

மிகவும் சவாலான சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் மீது இலங்கை அரசாங்கத்தின் தொடர்ச்சியான ஆதரவு மற்றும் நம்பிக்கைக்கு நான் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன். மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் உரித்துவ நிதியளிப்பின் மூலம் பெறப்பட்ட உதவியாக இலங்கை ரூபாய் 27.7 பில்லியனாகும் என்பதுடன் நடப்பு நிதியாண்டில் மேலும் இலங்கை ரூபாய் 18.0 பில்லியன் இந்த கடினமான காலக்கட்டத்தில் நிறுவனத்தின் செயற்பாடுகளைத் தொடர உதவியது மட்டுமல்லாமல், மற்ற அனைத்து பங்காளிகளும் நிறுவனத்துடன் தொடர்ந்து வணிகம் செய்வதற்கு அவசியமான நம்பிக்கையையும் அளித்தது.

மாண்புமிகு ஜனாதிபதி, கௌரவ சுற்றுலாத்துறை அமைச்சர், கௌரவ விமான போக்குவரத்து மற்றும் ஏற்றுமதி வலையங்கள் அபிவிருத்திக்கான இராஜாங்க அமைச்சர், இரு அமைச்சகங்களின் செயலாளர்கள் மற்றும் அனைத்து அரசு அதிகாரிகளுக்கும் அவர்களின் ஆதரவிற்காக எனது மனமார்ந்த பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்வதற்கு இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துகின்றேன்.
எமது விமான நிறுவனத்தின் சேவையில் எப்போதும் நம்பிக்கை வைத்துள்ள எமது மதிப்புமிக்க மற்றும் விசுவாசமான வாடிக்கையாளர்களுக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

இறுதியாக, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் மற்றும் அதன் துணை நிறுவனங்களின் பணிப்பாளர்கள் சபைக்கு அவர்களது பெறுமதிமிக்க வழிகாட்டலுக்கும், முகாமைத்துவக் குழுக்கள் மற்றும் அனைத்து ஊழியர்களுக்கும் இந்த சவாலான நேரத்தில் அவர்களின் ஆதரவிற்கும் அர்ப்பணிப்பிற்கும் மற்றும் இந்த சவால்மிக்க நேரத்தில் பொறுப்புடன் செயலாற்றியமைக்காக தொழிற்சங்கங்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**அசோக் பதிரகே,**
*தவிசாளர்*

# பிரதம நிறைவேற்று அதிகாரியின் செய்தி

"விமான சேவை நிறுவனத்தின் 41 வருட வரலாற்றில் 2020 ஆண்டானது கோவிட் -19 பெருந் தொற்றால் பாரிய சவால்மிகு ஆண்டாக காணப்பட்டது. பெருந்தொற்று காலத்திலும் வணிகத்தை வழிநடத்துவது கடந்த ஒன்றரை ஆண்டுகளில் எங்கள் பிரதான நோக்கமாக காணப்பட்டது."

### துறைசார் கண்ணோட்டம்

2 ஆம் உலகப் போருக்குப் பிறகு உலகளாவிய விமானத் தொழில்துறை சந்தித்த மிகப்பெரிய அதிர்ச்சியாக, 2020 இல் கோவிட்-19 பெருந் தொற்றின் முன்நிகழ்ந்திராத தாக்கம் உலக வான் இணைப்பை வரலாற்று தாழ் நிலைக்கு கொண்டு சென்றது. ஒட்டுமொத்த வருவாய் பயணிகள் கிலோமீட்டர்கள் (RPKs) 66% க்கும் மேல் குறைந்துவிட்டதுடன் தொழில்துறையின் பெரும்பகுதி பயணிகள் போக்குவரத்துக்கு அற்ற நிலையை அடைந்தது. சர்வதேச பயணிகள் ஊடாக பரவும் கோவிட்-19 பெருந் தொற்றினைக் கட்டுப்படுத்த நாடுகள் தங்கள் எல்லைக் கட்டுப்பாடுகளை கடுமையாக்கியதன் விளைவாக, ஆண்டு முழுவதும் சர்வதேச போக்குவரத்தில் ஒடுக்க நிலை காணப்பட்டது. இதன் விளைவாக ஏப்ரல் 2020 இன் உலகளாவிய நெருக்கடியின் உச்சத்தில் முந்தைய ஆண்டை விட சர்வதேச RPKs களில் 98% வீழ்ச்சி விளைவிக்கப்பட்டது. புதிய தொற்றாளர்களின் அதிகரிப்பு மற்றும் தடுப்பூசி உட்செலுத்துவதில் ஏற்பட்ட தாமதங்களினால், சர்வதேச விமானப் பயணத்தின் எழுச்சி தொடர்ந்து மந்த கதியில் காணப்பட்டது, இதன் விளைவாக 2020 இன் சராசரி வருடாந்த சர்வதேச RPKs 2019 ஆண்டின் 24% ஆக மட்டுமே காணப்பட்டது. இருப்பினும், சீனா மற்றும் அமெரிக்கா போன்ற சில பெரிய உள்நாட்டு சந்தை அமைப்புக்களைக் கொண்ட நாடுகள் மீள் எழுச்சிக்கான ஆரம்ப அறிகுறிகளைக் கொண்டிருந்ததுடன் ஆண்டு முழுவதும் தொடர்ந்து சீர்படுத்தலை மேற்கொண்டன. மேலும் உள்நாட்டு RPKs 2021 ஆம் ஆண்டின் இரண்டாம் பாதியில் முந்தைய 2019 ஆண்டின் ஒப்பிடப்பட்ட நெருக்கடிக்கு நிலைகளிலும் பார்க்க 96% வரை மேம்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பயணிகள் போக்குவரத்துக்கு மாறாக, உலகளாவிய விநியோகச் சங்கிலிகளைப் பேண்தகு நிலையில் வைத்துக் கொள்வதற்கான சரக்கு போக்குவரத்தின் அத்தியாவசியம் மற்றும் முக்கியமான மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்துப் பொருட்களை கொண்டு செல்வதன் காரணமாக உலக விமான சரக்கு தொழிற் துறையின் மீதான கோவிட்-19 இன் தாக்கம் கணிசமாக குறைவாக காணப்பட்டது. சரக்கு தொன் கிலோமீட்டர்ஸ் (CTKs) ஏப்ரல் 2020 க்குள் 66% ஆக குறைந்தாலும், ஆண்டின் இறுதியில் முழு மீள் எழுச்சி நிலையை எட்டியது.

2021 இல் விமானப் போக்குவரத்தில் கோவிட் -19 தாக்கத்தின் தொடர்ச்சியான நிச்சயமற்ற தன்மையைக் கருத்தில் கொண்டு உலகளாவிய RPKs க்கள் 2019 இன் நெருக்கடிக்கு முந்தைய நிலைகளில் 43% ஐ மட்டுமே அடையும் என்று IATA கணித்துள்ளது. அதிக விளைவு மட்டங்களைக் கொண்ட விமானச் சரக்கு போக்குவரத்தானது விமான நிறுவனங்களுக்கு பலமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதுடன் நெருக்கடிக்கு முந்தைய விமானச் சரக்கு போக்குவரத்தின் பங்களிப்பான 10%-15% உடன் ஒப்பிடுகையில் தற்போதைய தொழிற்துறை வருவாயில் மூன்றில் ஒரு பங்கினைப் பெற முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கேள்வியின் படிப்படியான மீட்சியின் காரணமாக ஏற்பட்ட எரிபொருள் விலை அதிகரித்து வரும் போக்கினால், செலவுகளை நிர்வகிப்பது உலகளாவிய விமான சேவை நிறுவனங்களுக்கு தொடர்ந்து சவாலாக இருக்கும் மற்றும் 2021 இல் உடனடி வங்குரோத்து நிலைகளைத் தவிர்ப்பதற்கான பணச் செலவைக் குறைப்பதற்கு மேலதிக நடவடிக்கைகள் தேவைப்படுகிறது.

### விமான சேவை நிறுவனத்தின் செயற்திறன்

விமான சேவை நிறுவனத்தின் 41 வருட வரலாற்றில் 2020 ஆண்டானது கோவிட் -19 பெருந் தொற்றால் பாரிய சவால்மிகு ஆண்டாக காணப்பட்டது. பெருந்தொற்று காலத்திலும் வணிகத்தை வழிநடத்துவது கடந்த ஒன்றரை ஆண்டுகளில் எங்கள் பிரதான நோக்கமாக காணப்பட்டது. தொடர்ச்சியான எல்லைக் கட்டுப்பாடுகள் மற்றும் விமான நிலையங்களின் மூடல்கள் இருந்த போதிலும், அதிகரித்த திருப்பி அனுப்பும் விமானங்கள் மூலம் சிக்கித் தவிக்கும் இலங்கையர்களை நாட்டிற்கு அழைத்து வருதல் மற்றும் திட்டமிடப்பட்ட விமான சரக்கு போக்குவரத்து நடவடிக்கைகளை இயக்குதல் போன்ற நடவடிக்கைகளினால் இலங்கை விமான சேவைகள் நிறுவனமானது உலகளாவிய வர்த்தகத்தை பேண்தகு நிலையில் வைத்துக் கொள்ள நாட்டின் கொண்டு செல்லுநராக தங்கள் கடமைகளை தொடர்ந்து நிறைவேற்றுகிறது.

ஆண்டிற்கான நிதியியல் விளைவுகள் முன்னைய ஆண்டின் நேர்மறையான EBITDA (வட்டி, வரி, பெறுமானத்தேய்வு, பெறுமதிகுறைப்பு என்பவற்றிற்கு முன்னரான வருமானம்) இலங்கை ரூபாய் 14.2 பில்லியனுக்கு எதிரான எதிர்மறையான EBITDA (வட்டி, வரி,பெறுமானத்தேய்வு, பெறுமதிகுறைப்பு என்பவற்றிற்கு முன்னரான வருமானம்) இலங்கை ரூபாய் 14.8 பில்லியனைப் பதிவு செய்தது. நிதிச் செலவினம் மற்றும் பிடித்து வைத்தல் வரியின் பின்னர், குழுமத்தின் நட்டமானது முன்னைய வருடத்தின் இறுதியில் ரூபா 44.1 பில்லியனுக்கு எதிராக இந்த வருட முடிவில் 49.7 பில்லியனைப் பதிவு செய்தது. குழுமமானது 35.9 பில்லியனை நிதியியல் செலவுகளாக செலவழித்தது மற்றும் பிந்தைய பாதியில் சாதகமற்ற நாணயப் பெறுமதி மாற்றமானது ரூபா 19,673 மில்லியன் பரிமாற்றல் நட்டத்தினை ஏற்படுத்தியது, முக்கியமாக கடன்கள் மற்றும் குத்தகைகள் உட்பட வெளிநாட்டு நாணயப் பொறுப்புகளின் பரிமாற்றலில் இருந்து எழுகிறது. இது ஆண்டுக்கான அதன் தேறிய நட்டத்தில் 40% இனை பங்களிப்பு செய்வதன் மூலம்

# பிரதம நிறைவேற்று அதிகாரியின் செய்தி

குழுமத்தின் இலாபத்தினை மோசமாக பாதித்தது.

விமானப் பயணத்திற்கு விதிக்கப்பட்ட கோவிட் -19 தொடர்பான கட்டுப்பாடுகள் காரணமாக மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் விமான சேவை நிறுவனத்தின் சந்தை கொள்திறன் முந்தைய ஆண்டை விட 79% சுருங்கியது அதே போல் ஒட்டுமொத்த பயணியர் அறை காரணியானது 61% குறைக்கப்பட்டது. வருவாயிலான வீழ்ச்சிக்கு பிரதான காரணியாக கோவிட்-19 தொற்றின் பரவல் காணப்பட்டது.

குழுமத்தின் மொத்த செலவீனங்கள் இலங்கை ரூபாய் 118.3 பில்லியனாக இருந்தது, இது கடந்த ஆண்டைக் காட்டிலும் 48% கணிசமான செலவினக் குறைப்பினை பிரதிபலிக்கிறது. இதற்கான பிரதான காரணம் வீழ்ச்சியடைந்த செயற்பாடுகளாகும். குழுமமானது ரூபா 50.9 பில்லியன் வருவாயினைப் பதிவு செய்துள்ளது, இது முன்னைய ஆண்டிலும் பார்க்க 72% குறைவாகும். வருவாயில் ஏற்பட்ட சரிவானது பல முகாமைத்துவ முயற்சிகளால் ஈடுசெய்யப்பட்டு, குழுமத்தின் செயல்பாட்டுச் செலவுகளை 56% ஆல் குறைக்க முடிந்தது. விமானத்தின் எரிபொருள் செலவினம் ரூபாய் 44.8 பில்லியனால் குறைக்கப்பட்டது, இதில் 11% எரிபொருள் விலை குறைப்பு காரணமாகவும் மற்றைய 89% செயற்பாட்டின் குறைப்பு வீதமாகவும் இருந்தது (பரிமாற்ற வீத தாக்கம் உட்பட). என்ஜினியரிங், பயணிகள் சேவைகள் மற்றும் நிலையப் போக்குவரத்து ஆகியவற்றிலிருந்தான கிரயச் சேமிப்பு முயற்சிகள் மற்றும் கோவிட் -19 காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலம் மேலும் சேமிப்பினை அடையமுடிந்தது. வெளிப்படுத்தப்பட்ட ரூபாய் 9.1 பில்லியன் குறைப்பானது என்ஜினியரிங் தொடர்பான செயற்பாட்டு நடவடிக்கைகளின் செலவினக் குறைப்பினைப் பிரதிபலிக்கிறது. ஊழியர் செலவினம் தொடர்பான செயல்படுத்தப்பட்ட முயற்சிகள் மூலம் பெறப்பட்ட சேமிப்பானது இலங்கை ரூபாய் 5.8 பில்லியன் ஆகும். மேலும், பயணிக்கும் விமானங்கள் மற்றும் பயணிகள் எண்ணிக்கையின் குறைவு காரணமாக விமான நிலைய வழிப்பாதை மற்றும் பயணிகள் செலவுகள் மற்றும் விற்பனை, சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பர செலவுகள் முறையே 71% மற்றும் 86% ஆக குறைக்கப்பட்டது.

விமானச் சரக்கு போக்குவரத்து செயற்பாட்டு நடவடிக்கைகளின் விரிவாக்கம் என்பது பயணிகள் பயணத்தில் பாதகமான விளைவைக் குறைக்க விமான சேவைகள் நிறுவனம் எடுத்த மற்றொரு முயற்சியாகும். தற்போதைய விமானச் சரக்கு வலையமைப்பு ஹாங்காங், மிலன், பிராங்பேர்ட், பாரிஸ் மற்றும் சிட்னி போன்ற பல புதிய பயண இடங்களைச் சேர்த்து மொத்தமாக 18 பயண இலக்குகளைக் கொண்டுள்ளது. உலகளாவிய பெருந் தொற்றுக்கு மத்தியிலும் இலங்கை ஏற்றுமதியாளர்களை வலுப்படுத்த மற்றும் இலங்கைக்கு தொடர்ச்சியான வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சலினை உறுதி செய்வதற்காக 70% க்கும் அதிகமான மேம்பாட்டு கொள்திறன் இலங்கை ஏற்றுமதிக்கு ஒதுக்கப்பட்டது. மே 2020 முதல், விமானச் சரக்குப் போக்குவரத்திற்காக தனிப்பயன் கொண்ட விமான அட்டவணை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது, இதனால் பழுதடையக்கூடிய பொருட்களின் ஏற்றுமதியாளர்கள் தங்கள் வணிகங்களை திறம்பட நிர்வகிக்க முடிந்தது.

A330-200 விமானம் சரக்குக் விமானமாக மாற்றப்பட்டு தற்போது சரக்கு நடவடிக்கைகளுக்கு பிரத்தியேகமாக பயன்படுத்தப்படுகிறது. ஸ்ரீலங்கன் சரக்கு பிரிவு குறிப்பிடத்தக்க சரக்கு ஆற்றலின் நன்மைகளைப் பெறுவதற்காக, கிடைக்கும் மற்றும் வணிக சாத்தியக்கூறுகளின் அடிப்படையில் ஈரமான/உலர் குத்தகை மாதிரி மூலம் ஒரு சரக்குக் கப்பல் முயற்சியைச் சேர்ப்பதன் மூலம் தற்போதுள்ள வணிக மாதிரியை மீள் மூலோபாயமாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. வரையறுத்த பரந்த உடல் விமானத்துடன் கூடிய சூழலில் செயல்படும் இந்த முயற்சியானது, ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் இலங்கையின் வளர்ந்து வரும் சர்வதேச வர்த்தகம் மற்றும் ஊர்தி மாற்றம் மற்றும் உலகளாவிய வாய்ப்புகளில் சிறப்பாக பங்கேற்க அனுமதிப்பதன் மூலம் ஸ்ரீலங்கன் சரக்கு வணிக பங்களிப்பை ஏர்லைன்ஸ இன் இலாபம் நோக்கி கணிசமாக விரிவாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது,

தொழிற்துறையின் முன்னணி விமான நிறுவனங்களுக்கு இணையாக தனது அதிகாரப்பூர்வ ஒன்லைன் விற்பனை தளத்தை கொண்டு வரும் முயற்சியில், ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் தனது வலைத்தளமான www.srilankan.com ஐ ஒரு நவீன கண்ணோட்டத்துடன் அறிமுகப்படுத்தியது. தொழில்முறை நியமங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளுக்கு ஏற்ப அனைத்து சாதனங்களிலும் சிறந்த செயல்திறனை உறுதி செய்யும் உள்ளுணர்வு சார் வடிவமைப்பினை வலைத்தளம் கொண்டுள்ளது. Srilankan.com ஆனது கூகுள் அனலிட்டிக்ஸ் மேம்படுத்தப்பட்ட இலத்திரனியல் வர்த்தக தொழிற்பாடுகளுடன் செயற்திறன் பின்தொடர் (tracking) திறன்களை மேம்படுத்தியுள்ளது, இது இணையதள பயனர் அனுபவம் மற்றும் அதன் செயற்திறன் பற்றிய மேலதிக நுண்ணறிவை வழங்குகிறது. WeChat Pay, Alipay (சீனா) மற்றும் POLi (ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து) போன்ற புதிய கொடுப்பனவு முறைகளின் விருப்பத் தேர்வுமுறையுடன், எங்கள் வலைத்தளமான “srilankan.com” இன் மீள் வடிவமைப்பு பதிப்பானது இப்போது ஒன்லைனில் டிக்கெட்டினைக் கொள்வனவு செய்ய சிறந்த தெரிவினையும் நெகிழ்வுத்தன்மையையும் வழங்குகிறது. இது தவிர, ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் ஆனது உள்நாட்டு வங்கிகளுக்கு முன்னுரிமை அளிக்கும் விதத்தில் ஒன்லைன் சேனல்களுக்கான புதிய இணைய கொடுப்பனவு நுழைவாயிலை ஆரம்பித்துள்ளது. கடந்த வருட காலப் பகுதியில், தற்போதைய பெருந்தொற்று சூழ்நிலையின் காரணமாக, ஆன்லைன் கோளத்தில் பயணிகளின் வருகை முந்தைய ஆண்டின் 15.5% விமானத்தின் மொத்த பயணிகள் வருவாயில் இருந்து 4.2% ஆகக் குறைந்து, வருவாயை 2.94 மில்லியன் அமெரிக்க டாலராகக் கொண்டு வந்தது. நீண்ட கால இலக்கின் மேலதிக மேம்பாடுகளுடன், உலகத்தை தங்கள் விரல் நுனியில் ஒரு படி அருகில் கொண்டு வருவதன் மூலம் ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் தனது ஒன்லைன் சேனலின் வாடிக்கையாளர் அனுபவத்தை வலுப்படுத்துவதை நோக்காகக் கொண்டுள்ளது.

செலவீனங்களைக் குறைக்கும் முயற்சியில், ஸ்ரீ லங்கன் ஏர்லைன்ஸானது புதிய விநியோகத் கொள்திறன் (NDC) இயங்கு தளத்தின் மீதான முகவர் முன்பதிவு இயந்திரத்தின் விருத்திப் பணிகளை நிறைவு செய்துள்ளது. இது ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸை இடைநிலை உலகளாவிய விநியோக அமைப்புகளை (GDS) கடந்து பயண முகவர்களை அடைய அனுமதிக்கும், இதனால் விற்பனை செலவீனங்கள் குறையும். ஸ்ரீ லங்கன் ஏர்லைன்ஸிக்கு இந்த தளத்திற்காக IATA ஆல் NDC க்கான நிலை 4 சான்றிதழ் வழங்கப்பட்டது. NDC க்கான மிக உயர்ந்த நிலை சான்றிதழாக நிலை 4 சான்றிதழ் காணப்படுகிறது. ஸ்ரீலங்கன் டிராவல் போர்ட்டுடன் மேற்கொண்ட ஒப்பந்தங்களை மீண்டும் கலந்தாலோசித்தது மற்றும் அமேடியஸ் உலகளாவிய விநியோக அமைப்புகள் வரவிருக்கும் ஆண்டுகளில் செலவு சேமிப்பு மற்றும் தொழில் நடைமுறைகளுக்கு ஏற்ப GDS முன்பதிவு கொள்கையை மீண்டும் தொடங்குகிறது.

ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸின் நிர்வாகம் குத்தகை செலவில் கணிசமான குறைப்பை எட்டியது மற்றும் அனைத்து பராமரிப்பு சேவை வழங்குநர்களுடனும் கடுமையான பணம் செலுத்தும் விதிமுறைகளை மேம்படுத்துவதற்காக விமான குத்தகைதாரர்கள் மற்றும் சேவை வழங்குநர்களுடன் சில தீவிர கலந்துரையாடல்களில் ஈடுபட்டது. அதன் மூன்றாம் தரப்பு வாடிக்கையாளர் பராமரிப்பு வருவாயை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, மேலும் பிரிவு வழங்கப்பட்ட சேவைகளின் தொகுப்பை மேம்படுத்த முன்னணி தொழில் நிறுவனங்களுடன் கூட்டு சேர்ந்து புதிய உத்தியை தொடங்கியது. இதில் போயிங் உடன் சமீபத்தில் பகிர்ந்துகொள்ளப்பட்ட அறிவு பகிர்வு, பராமரிப்பு சேவைகள் மற்றும் பயிற்சி ஆகியவை அடங்கும். பிராந்தியத்தில் வரி பராமரிப்பு, அடிப்படை பராமரிப்பு மற்றும் வேலைத்தள ஆதரவில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களைக் காணும் பல விமான நிறுவனங்கள் மற்றும் பராமரிப்பு திருத்தம் மற்றும் பழுதுபார்த்தல் (MRO)

வழங்குநர்களுடன் கூட்டாண்மை மற்றும் JV உடன் பேச்சுவார்த்தை நடந்து வருகிறது.

இலங்கை மாணவர்கள் விமான சேவைத் துறையில் உலகத்தரம் வாய்ந்த கல்வியை அடைய வழிகளைத் திறக்கும் நோக்கத்துடன், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் தற்போது பட்டப்படிப்பு வழங்கும் உயர்கல்வி நிறுவனமாக (அரசு சாராத) ஒப்புதல் பெறுவதை நோக்கமாகக் கொண்டு செயற்பட்டு வருகிறது. ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனமானது சட்டத்தின் கட்டமைப்போடு பல்கலைக்கழகத்தின் கல்வி நிறுவன அட்டவணையை பூர்த்தி செய்வதற்காக செயற்பட்டு வருவதோடு மட்டுமன்றி இந்த முயற்சியை மேம்படுத்துவதற்காக சுற்றுலா மற்றும் விமான போக்குவரத்து அமைச்சு மற்றும் உயர் கல்வி அமைச்சுடன் கலந்துரையாடி வருகிறது. பட்டப்படிப்பு திட்டங்கள் உயர்கல்வி அமைச்சின்' "மாணவர்களுக்கான வட்டியற்ற கடன்" திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படும், இது நாட்டில் ஆர்வமுள்ள இளைஞர்களுக்கு இந்த திட்டத்தின் மூலமாக கிடைக்கும் தன்மையினை அதிகரிக்க கூடிய வாய்ப்பினைக் கொண்டிருக்கும்.

கோவிட் -19 க்குப் பிந்தைய காலத்தின் செயல்பாட்டுக்கு ஏற்றவாறு இருக்க வேண்டும் என்பதற்காக ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனமானது நிறுவனத்திற்கு அதிக செலவினைக் குறைக்க மற்றும் "சரியான அளவு" கொண்ட ஊழியர்களை கொண்டிருப்பதற்காக ஓர் தன்னார்வ ஓய்வூதிய திட்டத்தை (VRS 2020) அறிமுகப்படுத்தியது. அதன்படி, VRS2020 ஆனது ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் பணிப்பாளர் சபையின் ஒப்புதலுடன் மற்றும் அமைச்சரவையின் ஒப்புதலுடன் அறிமுகப்படுத்தப்பட்டது. தன்னார்வ ஓய்வுக்குக் கோரும் ஊழியர்களிடமிருந்து மொத்தம் 286 விண்ணப்பங்கள் பெறப்பட்டன மற்றும் விண்ணப்ப மதிப்பீட்டினைத் தொடர்ந்து, மொத்தம் 240 விண்ணப்பங்கள் VRS 2020 மூலம் விலக்குவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. இலங்கை ரூபாய் 546 மில்லியன் இழப்பீட்டுக் கொடுப்பனவுத் தொகைக்கான செலவீனமாக காணப்பட்டது.

மேலும், நிறுவனத்தால் செல்லுபடியாகும் CBA க்கள் கொண்ட அனைத்து 5 தொழிற்சங்கங்களுடனும் கூட்டு பேரம் பேசும் ஒப்பந்தங்கள் (CBAs) மார்ச் 2021 வரை நிறுத்தி வைக்கப்பட்டன. CBA கடமைகள் காரணமாக இருக்கும் சூழல் மற்றும் சந்தை நிலைமைகளின் அடிப்படையில் செயற்பாட்டு முடிவுகளை எடுப்பதில் நிறுவனம் கடுமையாக கட்டுப்படுத்தப்பட்டதால் இந்த முடிவு முதன்மையாக எடுக்கப்பட்டது. இதற்கும் மேலாக, CBA களில் புதுப்பிக்கப்பட மற்றும் திருத்தப்பட வேண்டிய காலாவதியான மற்றும் எதிர்-உற்பத்தி ஊதியக் கொள்கைகள் உள்ளன. 2019/20 இல் செயற்பாட்டு நிலை அடிப்படையில் CBA களில் சுட்டிக்காட்டப்பட்ட ஊதியக் கொள்கைகளில் அடையாளம் காணப்பட்ட மாற்றங்களின் மூலம் அண்ணளவாக இலங்கை ரூபாய் 10 மில்லியன் வருடாந்த செலவின சேமிப்பாக பெற முடியும். எவ்வாறாயினும், இந்த சேமிப்பின் ஒரு பகுதி ஊழியர்களின் செயற்திறன் அடிப்படையிலான ஊக்கத்தொகைகள் மற்றும் கொடுப்பனவுகள் மூலம் நிறுவனத்தின் வணிக நோக்கங்களுக்கு ஏற்ப மீண்டும் முதலீடு செய்யப்பட வேண்டும்.

ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் கூட்டாண்மை சமூக பொறுப்பு (CSR) அங்கமானது குழந்தைகள், பூகோளம் மற்றும் திறமை என்ற பிரிவுகளின் கீழ் சமூகத்தின் சமூக, கல்வி மற்றும் ஆரோக்கியம் தொடர்பான நியமங்களை தரமுயர்த்துவதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு, தரமான கல்வி மற்றும் சுத்தமான குடிநீர் மற்றும் துப்புரவு தொடர்பான பல திட்டங்கள் நாட்டின் நீடிப்புத்திறனான அபிவிருத்தி இலக்குகளில் உள்வாங்கப்பட்டுள்ளன.

நிருவாகமானது இந்த காலத்தினை ஆற்றல் மற்றும் செயற்திறன் அடிப்படையில் செயல்முறைகளை மேம்படுத்துவதற்கான ஒரு வாய்ப்பாக எடுத்துக் கொண்டுள்ளது. அதன்படி ஸ்ரீ லங்கன் ஏர்லைன்ஸின் மாற்றத்தை மையமாகக் கொண்ட 5 திட்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன, இது செயல்திறன் அடிப்படையிலான அமைப்பு, வாடிக்கையாளர் மையம், வருவாய் மற்றும் விளிம்பு கட்டமைப்புகள், டிஜிட்டல் மாற்றம் மற்றும் செயல்முறை மேம்படுத்தல் போன்ற பகுதிகளில் கவனம் செலுத்தும்.

ஆசியாவின் பெரும்பாலான வாடிக்கையாளரை மையமாகக் கொண்ட விமான நிறுவனம் என்ற நமது இலக்கினை அடைய , தயாரிப்பு மேம்பாடானது நிறுவனத்திற்குள் எங்கள் பயணிகள் பிரிவுகளின் சிறந்த விவரக்குறிப்பு, முழுமையான புரிதலுக்கான தரவு சேகரிப்பு மற்றும் அதன் மூலம் தனிப்பயனாக்கப்பட்ட பயணிகள் அங்கீகாரம் ஆகியவற்றை மையமாகக் கொண்டு தயாரிப்பு மேம்பாடு "வாடிக்கையாளர் மையம்"என்ற திட்டத்தை வழி நடத்தியது பல-ஒழுங்கு அணுகுமுறையில்,இந்த திட்டமானது முதல் உள்ளக தொகுப்பின் வாடிக்கையாளர் சேவை பயிற்சியாளர்கள் அனைத்து முன்னிலை ஊழியர்களுக்கும் சிறந்த பயிற்சியை வழங்குவதையும், செலவீனங்களை சேமிப்பதையும், சேவை விநியோகத்தின் முதல் அனுபவத்தைப் பற்றிய நுண்ணறிவுகளையும் வழங்குவதைக் கண்டது.

தொழிற் சின்ன விசுவாசத்தின் முதல் மதிப்பீட்டை நாங்கள் மேற்கொண்டோம், எங்கள் பயணிகளின் ஒரு பிரிவுடன் நடத்தப்பட்ட நிகர ஊக்குவிப்பு மதிப்பெண் (NPS) பற்றிய ஒரு ஆய்வில் தொழிற் துறை சராசரி 47% க்கு மேலாக எட்டியது. தொடர்ச்சியான அடிப்படையிலான கண்காணிப்பு மற்றும் இந்த மதிப்பெண்ணை அதிகரிப்பதற்கான தொடர்ச்சியான முயற்சிகள் பல பங்காளிகளுடன் காணப்படுகின்றன.

கோவிட்-19ஆனது தயாரிப்புக்கான புத்தாக்கங்களை சேவைகளுக்கு வரையறுப்பதால், உணவு மற்றும் பானங்கள், விமான நிலைய அனுபவம் மற்றும் இருக்கை வசதிகளின் மீதான பயணிகளின் தேவைகள் குறித்த புதிய முன்னோக்கைப் பெறுவதற்கான பல்வேறு கணக்காய்வுகளுக்கு கவனம் மாறியது. தற்போது பல துறைகளுடன் பணிபுரியும் திட்டங்களில் கண்டுபிடிப்புகள் இணைக்கப்பட்டுள்ளன.

சுகாதாரம் மற்றும் பாதுகாப்பினை மையமாகக் கொண்டு, விமானப் பயணம் பாதுகாப்பானது மற்றும் உலகளாவிய தரநிலையினைக் கொண்டது என்ற பயணிகளின் நம்பிக்கையை மீண்டும் பெறும் நோக்கத்துடன், ஏர்லைன் பயணிகள் அனுபவ சங்கம் (APEX) மற்றும் SimpliFlying உடன் இணைந்து விமான சேவைகளின் சுயாதீன கணக்காய்வினை மேற்கொண்டது. பயணிகளின் பயணம் முழுவதுமான ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு நடைமுறைகளுக்கான துல்லியமான நடவடிக்கைகள், .ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ ினை பிளாட்டினம் ஸ்டாண்டர்ட் தரவரிசைக்கு உயர்த்தியது - தெற்காசியாவின் முதல் விமான சேவை நிறுவனம் என்ற அந்தஸ்தைப் பெற்று, ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பில் உலகளாவிய தலைவராக நம்மை நிலைநிறுத்தியது. ஏர்லைன்ஸானது, தனது சந்தைப்படுத்தல் தொடர்பாடல் பெரு முயற்சிகளின் உலகளாவிய வேண்டுகோளை தொடர்ந்து நிரூபித்து, “சந்தைப்படுத்தல்-கொண்டு செல்லுநர்“ பிரிவில் மதிப்புமிக்க “ PATA தங்க விருதினை வென்றது. ஸ்ரீ லங்கன் ஏர்லைன்ஸ், இந்திய துணை கண்டத்தில் ஒரு முன்னணி விமான நிறுவனமாக அதன் நிலையை மீண்டும் உறுதி செய்து, உலக சுற்றுலா விருதுகள் ஆசியா ரூ ஓசியானியாவில் புகழ்பெற்ற “உலகின் முன்னணி விமான நிறுவனம்” மற்றும் “இந்து சமுத்திரத்தின் ஆசியாவின் முன்னணி விமான சேவை” என்ற பட்டத்தை வென்றது. ITB - பேர்லின் 2020 கோல்டன் சிட்டி கேட் விருதுகளில் 3 வகுப்புகளில் (“சர்வதேச விமான நிறுவனம்”, “சர்வதேச இசை” மற்றும் “பிரச்சாரம்”) முதலாம் நட்சத்திர விருதுகளை வென்று தேசிய வானூர்திக்கு பெருமையைச் சேர்த்தது. ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் புகழ்பெற்ற மற்றும் செல்வாக்குள்ள உலகின் முன்னணி சர்வதேச விமான நிறுவனங்களில் ஆறாவது இடத்தைப் பிடித்தது மற்றும் சிறந்த சர்வதேச விமான சேவை நிறுவனங்களுடன் போட்டியிட்டு காண்டெனாஸ்ட் டிராவலர் “2020 ரீடர்ஸ் சாய்ஸ் விருதுகள்“இனைப் பெற்றது.

IATA, சிவில் வான் பயணவியல் அதிகாரசபை மற்றும் எயார்லைன்ஸ் இன் மருத்துவ மையம் ஆகியவற்றின் ஒருங்கிணைப்புடன் வாடிக்கையாளர் பயணம் முழுவதும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் இடர்நேர்கை மதிப்பீட்டு குழுக்களை உருவாக்கின. இது இடர் நேர்கை வகைக்கு ஏற்ப உற்பத்தி வழங்கல்களைத் தனிப்பயனாக்க உதவியது. இலங்கை

# பிரதம நிறைவேற்று அதிகாரியின் செய்தி

அரசாங்கத்துடன் ஒருங்கிணைந்து முன்னிலை ஊழியர்களுக்கு தடுப்பூசி போடப்பட்டதன் விளைவாக, எங்கள் முன்னணி வரிசையில் உள்ள ஊழியர்களின் 95% க்கும் அதிகமானோர் தடுப்பூசியின் இரண்டு மருந்தளவுகளையும் (doses) பெற்றனர்.

பயணிகள் விமானப் பயணத்திற்கான தேவை குறைந்துவிட்டதால், உலகளாவிய விமானச் சரக்கு நடவடிக்கை 2020 இல் பருமனளவினால் இயக்கப்படும் சந்தைகளின் அதிக நெகிழ்தன்மை மற்றும் நிலையான வளர்ச்சியுடன் செழித்தது. ஏனைய பயணிகள் விமான சேவை நிறுவனங்களைப் போலவே, ஸ்ரீலங்கன் எயார்லைன்சும் சரக்கு நடவடிக்கைகளுக்கான வாய்ப்புகளை ஆராய்ந்தது, அதன் பரந்த உடல் விமானத் திறனைப் பயன்படுத்துவதற்கான நோக்கத்துடன் கிட்டத்தட்ட பயணிகளின் கேள்வியின்மை காரணமாக அது மிகையாக இருந்தது. ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸானது கொண்டு செல்லுநர்களுக்கிடையிலான கடும் போட்டி காரணமாக, வேகமாக செயற்பட வேண்டியுள்ளது மற்றும் தற்போதைய மற்றும் புதிய பயண இலக்குகளை உள்ளடக்கிய சாத்தியமுள்ள சந்தைகளில் தனது திறனைப் பயன்படுத்த வேண்டும். அதன்படி, சிட்னி, சைகோன், பிராங்பேர்ட், ஹொங்காங், மிலன், பாரிஸ் மற்றும் நைரோபி ஆகியவை புதிதாக தொடங்கப்பட்ட பயண இலக்குகளாகும். சியோலானது இலங்கை தொழிலாளர் படை தனது தொழிலாளர் ஒப்பந்தங்களை முடிவுக்குக் கொண்டு வந்த பின் வழக்கமான முறையில் அவர்களைத் திருப்பி அனுப்ப வசதியாக அறிமுகப்படுத்தப்பட்டது. ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் பாதை விரிவாக்க திட்டத்தில் இந்த சந்தைகளில் பெரும்பாலானவை பயணிகள் சந்தைகளாக அடையாளம் காணப்பட்டிருந்தாலும், 2020 மற்றும் 2021 இல் அவர்களின் அறிமுகத்தின் முன்னேற்றம் முற்றிலும் சரக்கு வணிக வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்வதில் அமைந்திருந்தது. பலவீனமான வளர்ச்சி சாத்தியமான வழிகள் சரக்கு தேவை மற்றும் விளைச்சலில் அடுத்தடுத்த வீழ்ச்சியால் சாத்தியமற்றுக் காணப்பட்டவைகளில் சில உண்மையான நிதியியல் முடிவுகளின் அடிப்படையில் நிறுத்தப்பட்டன. ஏர்லைன்ஸ் இன் முழு அகல விமானங்கள் சரக்கு நடவடிக்கைகளுக்கு அதிக அளவில் பயன்படுத்தப்பட்டது. சரக்கு விமானங்கள் பயணிகள் போக்குவரத்துக்கு மட்டுப்படுத்தப்பட்ட திறனை வழங்கின, அவை தேவைக்கு ஏற்றவாறு பயன்படுத்தப்பட்டன. சரக்கு விமானங்களுக்கு மேலதிகமாக, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் சிக்கித் தவிக்கும் இலங்கை பிரஜைகளை நாட்டிற்கு அழைத்து வருவதற்கும், சர்வதேச வாடிக்கையாளர்களின் சார்பாக பட்டய விமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் பல தற்காலிக திருப்பி அனுப்பும் விமானங்களை இயக்கியது.

கோவிட் பிந்தைய பயணிகளின் தேவையை மீட்பதில் நிச்சயமற்ற தன்மை நீடித்ததால், நம்பகமான சந்தை முன்னறிவிப்புகள் இல்லாத நிலையில், IATA (சர்வதேச விமான போக்குவரத்து சங்கம்) 2021/22 க்கான கண்ணோட்டத்தை நியாயமான அனுமானம் செய்ய பயணிகள் போக்குவரத்தை உலகளாவிய தேவை மீட்பு முன்னறிவிப்பை ஏற்றுக்கொண்டது. 2021 ஆம் ஆண்டில், IATA ஒட்டுமொத்த (சர்வதேச மற்றும் உள்நாட்டு) உள்நாட்டு பயணிகள் கோரிக்கையை 2019 கோவிட் முன் நிலைகளில் 45% - 55% வரை மீட்கும் என்று கணித்துள்ளது. அதன்படி, சர்வதேச போக்குவரத்தின் 40% மீட்பினைக் கருத்தில் கொண்டு (இப்பகுதியில் கணிசமான உள்நாட்டு போக்குவரத்தை கருத்தில் கொண்டு) 2021/22 க்கான ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் வலையமைப்பு விமான அட்டவணை உருவாக்கப்பட்டது. இந்த அட்டவணையின்படி, ஏப்ரல் முதல் அக்டோபர் வரையிலான கோடைப் பருவகாலமானது பெரும்பாலும் சரக்கு தேவை திட்டத்தின் அடிப்படையில் அமைந்திருந்தது மற்றும் இந்திய துணைக்கண்டம், மத்திய கிழக்கு மற்றும் தூர கிழக்கில் தேர்ந்தெடுக்கப்பட்ட சந்தைகளுக்கு குறுகிய உடல் அமைப்பினைக் கொண்ட வரையறுக்கப்பட்ட கொள்திறனுடைய விமானங்கள் பயன்படுத்தப்பட வேண்டும். 2021/22இன் குளிர் பருவ காலத்தில் 40% ஆன பெரும் பகுதி கேள்வி மீட்பு ஏற்படும் என்று கருதப்படுகிறது மேலும் கோடைப் பருவ காலத்தில் சரக்கு விமானங்களாக ஆதிக்கம் செலுத்தும் விமானங்கள் குளிர்காலத்திலிருந்து பயணிகள் விமானங்களாக இயக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தற்போதுள்ள விமானங்களுக்கு மேலதிகமாக, சுற்றுலாப் போக்குவரத்தை ஊக்குவிக்கும் முகமாக 2021/22 குளிர்காலத்திலிருந்து பயணிகள் விமானமாக ரஸ்யாவின் மாஸ்கோவிற்கு நேரடி நடவடிக்கைகளை அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இருப்பினும், 2021 இல் பெருந் தொற்று நிலைமைகள் மோசமடைந்ததால் பயணிகளின் தேவையை மீட்டெடுப்பது பாதிக்கப்பட்டது இதன் பொருட்டு ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் ஆனது தற்போதைய சரக்கு அடிப்படையிலான அட்டவணையில் வருவாய் ஈட்டலை அதிகரிக்கவும் மற்றும் பயணிகள் விமானங்களின் சந்தை நடத்தையை தொடர்ந்து ஆய்வு செய்யவும் முடிவு செய்தது. தற்போதைய சரக்கு அடிப்படையிலான விமான அட்டவணை பயணிகளின் தேவை நிதி ரீதியாக நியாயப்படுத்தக்கூடிய ஒரு நிலைக்கு மீட்கப்படும் வரை இது தொடரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது அதன்படி, 2020/21 மற்றும் 2021/22 நிதியாண்டுகளில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் புதிய வழிப்பாதைகளை அறிமுகப்படுத்துவது முற்றிலும் விரைவான சந்தை பதில் தேவைப்படும் விமானச் சரக்கு வணிக வாய்ப்புகளை அடிப்படையாகக் கொண்டது.

கோவிட் தொற்றிலிருந்து நாம் வெளித்தோன்றும் வேளையில் ஓர் இலாபகரமான வணிகத்தினை மீள் கட்டியெழுப்புவதற்கும் மற்றும் இந்த விமான நிறுவனத்தினை உயர்ந்த நிலைக்கு கொண்டுசெல்வதற்காகவும் 1 ஜனவரி 2022 முதல் பதில் பிரதம நிறைவேற்று அதிகாரியாக எனக்கு பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. 2021 ஆம் ஆண்டிதன் இறுதியில் எங்களது பாரிய சந்தைகளுள் சிலவற்றில் துறையானது மீளெழுவதற்கு ஆரம்பித்ததுடன் சிக்கலான சமயங்களில் பொறுப்பேற்ற முன்னெடுப்புக்களில் பலவற்றிலிருந்து கட்டியெழுப்புதல் காரணமாக விமான நிறுவனத்தின் விளைவுகள் திடமான முன்னேற்றமடைந்தன. இது விமான நிறுவனம் 2021 டிசம்பர் மாதத்திற்கு கம்பனியின் இலாபமாக USD 9.25 மில்லியன் மற்றும் குழுமத்தின் இலபமாக USD 10.66 மில்லியன் அடைந்ததிலிருந்து தெளிவாக பிரதிபலிக்கப்படுகின்றது. 2020 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் தொற்றின் பரவலிலிருந்து விமான நிறுவனம் அடைந்த முதலாவது இலாபகரமான மாதம் இதுவாகும். கடந்த வருடத்தின் இதே காலத்துடன் ஒப்பிடும்போது வருவாயானது 200% இனால் அதிகரித்ததுடன் தொற்றின் முன்னரான மட்டத்தின் 80% இனை எட்டியது. மேலும், விமான நிறுவனமானது 2021 டிசம்பர் மாதத்திற்கு விமானப் போக்குவரத்து மட்டத்தில் இலாபமாக ருளுனு 11.43 மில்லியனை அறிக்கையிட்டது. இது கடந்த 20 வருடங்களில் விமானப் போக்குவரத்திலிருந்து அறிக்கையிடப்பட்ட அதி உயர்ந்த இலாபமாகும்.

முன்னோக்கிச் செல்லும்போது, இந்தப் பிராந்தியத்தில் புதிய ஓமிக்ரோன் கோவிட் திரிபுவடிவத்தின் பரவலின் அடிப்படையில் அடுத்து 2 தொடக்கம் 3 மாதங்கள் வரைக்கும் எனக்கு சில அக்கறைகள் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், இதிலிருந்து நாம் விடுபடும்போது பிரயாணங்கள் திடமாக திரும்பும் மற்றும் நாம் எமது மீளெழுச்சியினை தொடரலாம் என நான் நன்னம்பிக்கை கொண்டுள்ளேன்.

எனக்கு முன்னர் பதவியிலிருந்த விலகிச் செல்லும் பிரதம நிறைவேற்று அதிகாரிக்கு அவரது அயரா முயற்சிகளுக்கு நான் நன்றி தெரிவிப்பதுடன், தவிசாளர், பணிப்பாளர்கள் சபை, முகாமைத்துவக் குழு, பணியாட்கள், வணிகப் பங்காளிகள், இலங்கை அரசாங்கம் மற்றும் எமது பங்குதாரர்களுக்கு அவர்களது தொடர்ச்சியான உறுதுணைக்கும் மற்றும் ஆதரவுக்கு நான் மனமார்ந்த நன்றியினைத் தெரிவிக்கின்றேன். ஆசியாவின் உயர்ந்த வாடிக்கையாளர் மையமான விமான நிறுவனமாக வரும் எமது தொலைநோக்கினை அடைவதற்கான எமது முயற்சியில் நாம் தொடர்ந்தும் மீளெழுச்சி மற்றும் தளர்வின்றி இருப்போம் என நான் நம்பிக்கை வைத்துள்ளேன். ஓர் விமான நிறுவனமாக நாம் தொடர்ந்தும் தேசத்திற்கு சேவையாற்றுவோம்.

**ரிச்சட் நட்டால்**
*பதில் பிரதம நிறைவேற்று அதிகாரி*

# பணிப்பாளர்கள் சபை

## திரு. அசோக் பத்திரகே

திரு. அசோக் பத்திரகே அவர்கள் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் பணிப்பாளர் சபைக்கு 2019 டிசம்பர் 16 ஆந் திகதி நியமிக்கப்பட்டு அதன் பின்னர் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங் இன் பணிப்பாளர் சபைக்கும் நியமிக்கப்பட்டார். இவர் சொவ்ட்லொஜிக் ஹோல்டிங்ஸ் பிஎல்சி, ஆசிரி ஹொஸ்பிட்டல் ஹோல்டிங்ஸ் பிஎல்சி, ஆசிரி சர்ஜிக்கல் ஹொஸ்பிட்டல் பிஎல்சி மற்றும் ஒடெல் பிஎல்சி ஆகிய நிறுவனங்களின் தலைவர்/முகாமைத்துவப் பணிப்பாளர் ஆவார். இவர் சொவ்ட்லொஜிக் கெப்பிட்டல் பிஎல்சி மற்றும் சொவ்ட்லொஜிக் லைவ் இன்சூரன்ஸ் பிஎல்சி மற்றும் குழுமத்திலுள்ள ஏனைய கம்பனிகளுக்கும் தலைவராக சேவையாற்றுகின்றார். இவர் என்.டி.பி. கெப்பிட்டல் ஹோல்டிங்ஸ் லிமிட்டட்டின் தலைவருமாவார்.

இவர் இலங்கையின் கூட்டாண்மை உலகத்தின் தொலைநோக்குத் தலைவராவதுடன் இலங்கையின் முன்னணி பன்கூட்டாண்மையின் ஸ்தாபக அங்கத்தவராவார். இவர் 50 கம்பனிகளை நடைமுறை நோக்கோடு முகாமைப்படுத்துவதடன் 10,000 க்கும் அதிகமான பணியாட்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கியுள்ளார். திரு. பத்திரகே அவர்கள் நான்கு செங்குத்துத் துறைகளான, சில்லறை மற்றும் தொலைத்தொடர்பு, சுகாதாரச் சேவைகள், நிதியியல் சேவைகள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஓய்வு மற்றும் வாகனம் ஆகியவற்றின் முன்னணி சந்தை பிரசன்னத்தைக் கொண்டு குழுமத்திற்கு மூலோபாய வழிகாட்டலை வழங்குகின்றார்.

## திரு. மலிக் ஜே பர்னாந்து

திரு. மலிக் பர்னாந்து அவர்கள் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் பணிப்பாளர் சபைக்கு 2020 ஜனவரி 08 ஆம் திகதி நியமிக்கப்பட்டு அதன் பின்னர் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங் இன் பணிப்பாளர் சபைக்கும் நியமிக்கப்பட்டார்.

திரு. பர்னாந்து அவர்கள் டில்மா டீ இன் பணிப்பாளர் மற்றும் ரெஸ்பிளென்டென்ட் சிலோன் இன் முகாமைத்துவ பணிப்பாளாரும் ஆவார். இது முதலாவது ஆடம்பர உல்லாசப்போக்கிட வணிக நாமமாகும். இது நாடுபூராவுமான குறிப்பிடத்தக்க சுற்றுலா தளங்களை விருத்திசெய்து அத்துடன் நம்பத்தக்க பல அனுபவங்களையும் வழங்குகின்றது. எம்.ஜே.எவ். ஸ்தாபனம் மற்றும் டில்மா பாதுகாப்பினூடாக உள்ளூர் சமூகத்திற்கும் சூழலுக்கும் பங்களிப்பு செய்கின்றது. ஈஸ்டர் ஞாயிறு அட்டூழியத்தின் பின்னர், திரு. பர்னாந்து அவர்கள் இலங்கை உல்லாசத்துறை கூட்டமைப்பிற்கு தலைமைதாங்கி "Love Sri Lanka" பதாகையின் கீழ் ஒற்றைக் குரலுடன் தனியார்துறை உல்லாசத் துறையினை ஒன்றுதிரட்டினார்.

திரு. பர்னாந்து அவர்கள் அமெரிக்காவின் பெப்சன் கல்லூரியில் வணிக முகாமைத்துவத்தில் இளமானி விஞ்ஞானப் பட்டத்தினைப் பெற்றுள்ளார்.

## திரு. மனோஹர ஆர் டி சில்வா ஜ.ச.

திரு. மனோஹர ஆர் டி சில்வா ஜ.ச. அவர்கள் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் பணிப்பாளர் சபைக்கு 2020 ஜனவரி 08 ஆம் திகதி நியமிக்கப்பட்டு அதன் பின்னர் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங் இன் பணிப்பாளர் சபைக்கும் நியமிக்கப்பட்டார்.

திரு. மனோஹர ஆர் டி சில்வா அவர்கள் இலங்கையின் உயர் நீதிமன்றத்தில் கடமையாற்றும் ஜனாதிபதி சட்டத்தரணியாவார். இவர் 1988 ஆம் ஆண்டு சட்டத்துறைக்குள் வந்து 2006 ஆம் ஆண்டில் ஜனாதிபதி சட்டத்தரணியாக நியமிக்கப்பட்டார். இவர் சட்ட ஆணைக்குழு மற்றும் சட்ட உதவி ஆணைக்குழுவின் அங்கத்தவராவார். இவர் சட்ட கல்வியின் ஒன்றிணைக்கப்பட்ட சபையின் அங்கத்தவராக பல வருடங்கள் சேவையாற்றியுள்ளார். 2006 இல் அரசியலமைப்பிலான அனைத்து கட்சி பிரதிநிதிகள் குழுவின் நிபுணர் குழுவிற்கு அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டார்.

திரு. டி சில்வா ஜ.ச. அவர்கள் மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் பல்கலைக்கழக சபையின் அங்கத்தவருமாவார். இதற்கு முன்னர் அதே பல்கலைக்கழகத்தில் வருகை தரும் விரிவுரையாளராக சேவையாற்றினார். இவர் இலங்கை வழக்குரைஞர்கள் சங்கத்தின் நிறைவேற்றுக் குழுவில் சேவையாற்றியதுடன் சட்ட சபையின் அங்கத்தவராகவும் கடமையாற்றினார். அதேபோன்று பல வருடங்களுக்கு முன்னர் SAARC LAW எனும் அமைப்பிலும் சேவையாற்றியுள்ளார். திரு. டி சில்வா ஜ.ச. அவர்கள் அரசியலமைப்பில் பல புத்தகங்கள் மற்றும் கட்டுரைகளை எழுதியுள்ளார்.

# பணிப்பாளர் சபை

## திரு. சமந்த ரத்வத்த

திரு. சமந்த ரத்வத்த அவர்கள் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் பணிப்பாளர் சபைக்கு 2020 ஜனவரி 08 ஆம் திகதி நியமிக்கப்பட்டார்.

இவர் குடியியல் சட்டத்தில் விரிவான பயிற்சியினைக் கொண்ட ஓர் ஜனாதிபதி சட்டத்தரணியாவார். இவர் பேராதனை பல்கலைக்கழகத்தின் ஆளுமைச் சபையின் அங்கத்தவராவதுடன் அதே பல்கலைக்கழகத்தின் சட்டத் திணைக்களத்தில் வருகை தரும் விரிவுரையாளராகச் சேவையாற்றியுள்ளார். இவர் இலங்கை சட்ட ஆணைக்குழுவின் அங்கத்தவருமாவார்.

ஆட்கள் பற்றிய சட்டம், காணிச் சட்டம் மற்றும் வணிகப் பிணக்குகள் தொடர்பான விடயங்கள் போன்ற துறைகளில் பரவலான வாடிக்கையாளர்கள் இவரது சேவையினைப் பெற்றுள்ளார்கள். இலங்கையின் நீளம் மற்றும் அகலம் முழுக்க வியாபித்திருக்கும் ஆரம்ப நீதிமன்றங்கள் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றங்களில் பரவலான தொழில் பயிற்சியினை உடையவராவார்.

குடியியல் விடயங்கள் தொடர்பான சிக்கலான சட்டப் பிரச்சனைகளில் இவரது குறிப்பிட்ட திறமைகள் காரணமாக பல்வேறு நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் இவரது சேவையினை பெற்றுக்கொள்வதனை விளைவித்துள்ளன. இவர் அவரது முதன்மை மற்றும் இரண்டாம் நிலை கல்வியினை கண்டி திரித்துவக் கல்லூரியில் பெற்றுள்ளார்.

## கலாநிதி. ஸ்ரீதிர் சரிபுட்ட ஹன்ச விஜயசூரிய

கலாநிதி. ஹன்ச விஜயசூரிய அவர்கள் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் பணிப்பாளர் சபைக்கு 2020 ஜனவரி 23 ஆம் திகதி நியமிக்கப்பட்டார்.

இவர் தற்போது Axiata குழுமத்தின் தொலைத்தொடர்பு வணிகத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியாவதுடன் மலேஷியா, இந்தோனேஷியா, பங்களாதேஷ், நேபாளம், இலங்கை மற்றும் கம்போடியா போன்ற பிராந்தியங்களின் சந்தைகளிற்கான குழுமத்தின் தொலைதொடர்பு செயற்பாட்டிற்கு தலைமை தாங்குகின்றார். Axiata என்பது ஆசியாவின் இரண்டாவது பெரிய தொலைத்தொடர்பு குழுமமாகும்.

கலாநிதி விஜயசூரிய அவர்கள் Dialog Axiata பிஎல்சி இன் பணிப்பாளர் சபையில் சேவையாற்றுவதுடன் Axiata குழுமத்தின் ஏனைய பல பிராந்திய துணைக்கம்பனிகளிலும் சபை அங்கத்தவராவார். 2016 ஆம் ஆண்டு வரை கலாநிதி. விஜயசூரிய அவர்கள் Dialog Axiata பிஎல்சி குழுமத்தின் (டயலொக்) குழும பிரதம நிறைவேற்று அதிகாரியாக கடமையாற்றியுள்ளார். கலாநிதி. விஜயசூரிய அவர்கள் ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பிஎல்சி இன் பணிப்பாளர் சபையின் ஓர் சுயாதீன பணிப்பாளராக சேவையாற்றுகின்றார்.

2016 ஆம் ஆண்டில், கலாநிதி. விஜயசூரிய அவர்கள் ஆசிய கையடக்கத்தொலைபேசி துறைக்கான முதன்மையான பங்களிப்பு விருதினை முதல் முறையாக பெற்றதையிட்டு GSM சங்கத்தினால் கௌரவிக்கப்பட்டார். கலாநிதி. விஜயசூரிய அவர்கள் GSM ஆசிய பசிபிக்கின் முன்னாள் தலைவருமாவார். இது GSM சங்கத்தின் பிராந்திய நலனையுடைய குழுவாகும். கலாநிதி. விஜயசூரிய அவர்கள் 2008 இல் இலங்கையின் முன்னணி வணிக சஞ்சிகையான LMD இனால் "வருடத்திற்கான இலங்கையர்"என்று பெயரிடப்பட்டார். கலாநிதி. விஜயசூரிய அவர்கள் இலங்கையின் முன்னணி வணிகச் சம்மேளனமான இலங்கை வர்த்தகச் சம்மேளனத்தின் தற்போதைய தலைவராவார்.

## திரு. சன்ஜய மொஹொட்டால

திரு. சன்ஜய மொஹொட்டால அவர்கள் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் பணிப்பாளர் சபைக்கு 2020 பெப்ரவரி 01 ஆம் திகதி நியமிக்கப்பட்டு அதன் பின்னர் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங் இன் பணிப்பாளர் சபைக்கும் நியமிக்கப்பட்டார். ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் மற்றும் ஸ்ரீலங்கன் கேட்டரிங் ஆகிய இரு நிறுவனங்களதும் கணக்காய்வுக் குழுவின் சார்பு காலத் தலைவராவார்.

ஸ்ரீலங்கனில் ஒரு குழு உறுப்பினராக பணியாற்றுவதோடு மட்டுமல்லாமல், திரு. மொஹட்டலா BOI இன் தலைவர், ஏற்றுமதி மேம்பாட்டு வாரியம் மற்றும் சஹஸ்யா ஆகியவற்றின் குழு உறுப்பினராக பணியாற்றுகிறார். அவர் பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி பணிக்குழுவின் உறுப்பினராகவும் உள்ளார்.

திரு. சன்ஜய மொஹொட்டால அவர்கள் பொஸ்டன் கொன்சல்டிங் குழுமத்தின் போக்குவரத்து மற்றும் ஏற்பாட்டியல் துறைகளுக்கான ஆசிய-பசிபிக் முனையமாவார். இவர் தென்கிழக்கு ஆசியாவின் கூட்டாண்மை அபிவிருத்தி மற்றும் பிரதான முதலீட்டாளர்கள் மற்றும் தனிப்பட்ட உரித்துடைமை நடைமுறைகளின் முக்கிய அங்கத்தவருமாவார்.

இவர் மூலோபாயம், கொடுக்கல் வாங்கல்கள், மீள்கட்டமைப்பு, செயற்பாட்டு மேம்படுத்தல், விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல், மேம்பட்ட பகுப்பாய்வுகள் மற்றும் நிறுவன வடிவமைப்பு ஆகியவற்றில பரவலான அனுபவத்தைக் கொண்டுள்ளார். திரு. மொஹொட்டால அவர்கள் பலதரப்பட்ட இணைப்புகளது கலந்துரையாடல்கள் மற்றும் இணைப்பின் பின்னரான ஒன்றிணைப்பு முயற்சிகளை வழிநடத்தியுள்ளார். இவர் பாரிய அளவிலான உலகளாவிய உருமாற்றங்களில் செயலாற்றியுள்ளார்.

இவர் மொரட்டுவ பல்கலைக்கழகத்திலிருந்து இளமானி விஞ்ஞான (கௌரவ) பட்டத்தையும் அமெரிக்காவின் UCLA இன் அன்டர்சன் ஸ்கூல் ஒவ் மெனேஜ்மன்ட் இலிருந்து வணிக நிருவாகத்தில் ஒரு முதுமானி பட்டத்தையும், CIMA, சந்தைப்படுத்தலில் டிப்ளோமா என்பவற்றைக் கொண்டுள்ளதுடன் ஒரு வுல்பிரைட் பண்டிதருமாவார்.

## திரு. ஜோசப் ஜயந்த் மைக்கல் பெரேரா

பிரபல வங்கியாளர் திரு. ஜே.எம். ஜயந்த் பெரேராவை ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸின் இயக்குநர்கள் குழுவிற்கு நிதி அமைச்சகம் 2021 மார்ச் 27 பரிந்துரைத்து 2021 மே 21 முதல் ஸ்ரீலங்கன் கேட்டரிங் லிமிடெட் வாரியத்தின் பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட்டார் .

திரு. பெரேராவுக்கு நிதித்துறையில் 40 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம் உள்ளது, அந்த ஆண்டுகளில் பெரும்பாலானவை மூத்த மேலாண்மை மற்றும் பணிப்பாளர் சபை மட்டங்களில் உள்ளன.

திரு. பெரேரா பட்டய வங்கியாளர்களின் (லண்டன்) உறுப்பினராக உள்ளார், மேலும் லண்டன், நியூயார்க், சான் பிரான்சிஸ்கோ, ஹாங்காங் மற்றும் சிங்கப்பூர் போன்ற சர்வதேச நிதி மையங்களில் விரிவான பயிற்சி பெற்றுள்ளார்.

தற்போது, திரு. பெரேரா மெக்லாரன்ஸ் குழும நிறுவனங்கள் மற்றும் இன்டர் ஓன் எனர்ஜி (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தின் சுயாதீன நிறைவேற்றுநரல்லா இயக்குநராகவும், பிரீமியர் மருத்துவர்கள் மருத்துவக் குழு (பி.வி.டி) லிமிடெட் இயக்குநராகவும் பணியாற்றுகிறார். அவர் சிங்கர் பைனான்ஸின் மூத்த இயக்குநராகவும் உள்ளதோடு அவர் இடர் மேலாண்மைக் குழுவின் தலைவராகவும் கணக்காய்வுக் குழுவின் உறுப்பினராகவும் செயல்படுகிறார். ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் உள்ள பல கப்பல் நிறுவனங்கள் மற்றும் சுற்றுலா அமைப்புகளை பிரதிநிதித்துவப்படுத்தும் ஓய்வு துறையில் நன்கு அறியப்பட்ட நிறுவனமான குவெஸ்ட் இலக்குகளின் இயக்குநராக உள்ளார்.

திரு. பெரேரா, ஹட்டன் நேஷனல் வங்கி பி.எல்.சி (HNB) இல் சிறந்த தொழில் வாழ்க்கையை கணக்கிடுகிறார், அங்கு அவர் மூத்த துணை பொது மேலாளராக பணியாற்றினார் - சர்வதேச, வணிக மேம்பாடு மற்றும் கருவூல செயல்பாடுகள் உட்பட கார்ப்பரேட் கடன். எச்.என்.பி அஷ்யூரன்ஸ் பி.எல்.சியின் நிறுவன இயக்குநராகவும் இருந்தார். எச்.என்.பி மற்றும் டி.எ/ப்.சி.சி வங்கியின் கூட்டாக சொந்தமான அக்யூட்டி செக்யூரிட்டீஸ் மற்றும் அக்யூட்டி பார்ட்னர்ஸ் உள்ளிட்ட அக்யூட்டி ஸ்டாக் ப்ரோக்கர்ஸ் (பிரைவேட்) லிமிடெட் நிர்வாக இயக்குநராகவும் இருந்தார். இந்த பதவிகளில் அவர் வணிக வளர்ச்சிக்கு மகத்தான பங்களிப்பை வழங்கினார். லங்கா வென்ச்சர்ஸ் (பிரைவேட்) லிமிடெட் எல்.வி.எல் எனர்ஜியின் இயக்குநராகவும் பணியாற்றினார். திரு. பெரேரா இலங்கையின் கடன் தகவல் பணியகத்தின் வாரிய உறுப்பினராக இருந்தபோது, இலங்கை மத்திய வங்கியுடன் ஒருங்கிணைப்பதன் மூலம் சீர்திருத்தங்களை கொண்டு வர முடிந்தது.

# சிரேஷ்ட முகாமைத்துவக் குழு

## திரு.ரிச்சர்ட் நட்டல்

*பிரதம நிர்வாக அதிகாரி (பதில் கடமை) மற்றும் பிரதம வணிக அதிகாரி*

திரு. ரிச்சர்ட் நட்டல் 2021ஆம் ஆண்டு நவம்பர் மாத தொடக்கத்தில் விமான நிறுவனத்தில் பிரதம வணிக அதிகாரியாக சேர்ந்ததுடன் 2022 ஜனவரி 01 முதல் பிரதம நிர்வாக அதிகாரியாக (பதில் கடமை) ஆனார்.

இவருக்கு விமானப் போக்குவரத்து துறையில் 25 ஆண்டுகள் அனுபவம் உள்ளது. அத்துடன், இவர் வெவ்வேறு துறைகளில் உயர் பதவிகளை வகித்ததுடன் உலகெங்கிலும் உள்ள பல்வேறு கட்டுப்பாட்டு மையங்களில் பல்வேறு விதமான வகிபாகங்களை வகித்துள்ளார். அவற்றுள் அடங்குவன,

- சவுதி ஏர்லையினில் வகித்த பல்வேறு பதவிகள் வருமாறு. ஆரம்பத்தில் வணிக மாற்றத்திற்குப் (VP Commercial Transformation) பொறுப்பான அதிகாரியாக நியமிக்கப்பட்டார், பின்னர் விற்பனைக்கு (VP Sales) பொறுப்பானவராக முன்னேறியதுடன் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துதலுக்கான கூடுதல் பொறுப்புகளையும் ஏற்றுக்கொண்டார். 6 பில்லியன் டாலர் வருடாந்திர வருமானத்தினை விமான நிறுவனத்திற்கான வணிக மூலோபாயமாக உரிமைபங்காக பகிர்ந்து கொண்டதுடன் உலகளவில் 2,700 ஊழியர்களையும் வழிநடத்தினார். 03 ஆண்டுகளில் 30% சர்வதேச பயணிகளின் வளர்ச்சியை வழங்கியுள்ளதுடான், பிராந்திய சராசரியை விட, விநியோக செலவில் 25% குறைப்பையும் அடையச் செய்தார். மேலும் விமானத் துறையில் சிறந்த சேவைகள் வழங்குனராக, வ் விமான நிறுவனத்தை உயர்த்தியதுடன் விமான நிறுவனத்தின் NPS மதிப்பெண்களையும் உயர்ச்சி செய்தார்.
- ராயல் ஜோர்தானியனில் பிரதம வணிக மற்றும் மூலோபாய அதிகாரியாக, இருந்ததுடன், அங்கு அவர் வணிகத் தலைவர்கள் மற்றும் சர்வதேச அளவில் புகழ்பெற்ற ஆலோசகர்கள் குழுவை வழிநடத்தி ஒரு திருப்புமுனை உத்தியை வழங்கியதுடன், 70 முன்முயற்சிகளைக் கண்டறிந்து செயல்திறனைக் கண்காணிக்கவும் அளவிடவும் ஒரு கட்டமைப்பை உருவாக்கினார். கீழ்மட்டத்திலேயே 80 மில்லியன் டொலர்கள் லாபத்துடன் 12% வளர்ச்சியுடன் விமான நிறுவனத்தை முன்னேற்றினார்.
- Skyteam மேற்பார்வைச் சபையின் சவுதியா ஏர்லைன்ஸின் பிரதிநிதியாக, இருந்ததுடன், பின்னர் அவர் புதிய ஆளுகை கட்டமைப்பு மாதிரின் ஒன்றின் கீழ் நிறைவேற்று அதிகாரிகளின் சபையில் சேர்ந்தார்.
- இவர் வகித்த பிற பதவிகளில் பஹ்ரைன் ஏர் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி (CEO), கென்யா ஏர்வேஸில் வணிக இயக்குநர், பிலிப்பைன்ஸ் ஏர்லைன்ஸின் மூத்த வணிக ஆலோசகர், அமெரிக்காவுக்கான போலார் ஏர் கார்கோவில் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் அதிகாரி (VP Sales & Marketing) மற்றும் கேத்தே பசிபிக் ஏர்வேஸில் பல்வேறுபட்ட நிர்வாகப் பணிகளில் பணிபுரிந்தமை ஆகியவை அடங்கும்.

திரு. நட்டல் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் கணிதப் பட்டமும், லண்டன் பிசினஸ் ஸ்கூலில் ஸ்லோன் முதுகலைப் பட்டமும் பெற்றுள்ளார்.

## திருமதி. டெல்ரீன் திருக்குமார்

*கம்பனிச் செயலாளர்/கூட்டாண்மை செயலகச் சேவைகளின் தலைவர்*

திருமதி. டெல்ரீன் திருக்குமார் அவர்கள் 2013 இல் கம்பனியில் சேர்ந்தார். இவர் கம்பனியின் செயலாளர் மற்றும் கூட்டாண்மை செயலகச் சேவைகளின் தலைவரும் ஆவார். இப்பிரிவானது வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் மற்றும் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங்கிற்கு கூட்டாண்மை செயலகச் சேவைகளை வழங்குகின்றது. இதற்கும் மேலாக, சிரேஷ்ட முகாமைத்துவத்தினது சம்பளப்பட்டியலுக்கு வசதியளிக்கின்றது. இவர் ஸ்ரீலங்கன் கெயார்ஸ் நம்பிக்கை பொறுப்பிற்கு நம்பிக்கை பொறுப்பாளரும் ஆவார்.

இவர் 20 வருடங்களுக்கும் மேலான தகமையின் பின்னரான அனுபவத்தினைக் கொண்டுள்ளார். இவர் இலங்கையில் பொது பட்டியலிடப்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட பன்கூட்டுக் கம்பனிகளில் மிகவும் சிரேஷ்ட மற்றும் பொறுப்பான பதவிகளை வைத்துள்ளார்.

இவர் ஐக்கிய இராச்சியத்தின் பட்டய செயலாளர்கள் மற்றும் நிர்வாகத்தர்கள் நிருவகத்தின் இணை அங்கத்தவராவார். இவர் அவுஸ்திரேலியாவிலிருந்து வணிக நிர்வாகத்தில் முதுமானி பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் இலங்கை பணிப்பாளர்கள் நிருவகத்தின் அங்கத்தவருமாவார்.

## திரு. யசந்த திசாநாயக்க

*நிதியியல் முகாமைத்துவத்தின் தலைவர்*

திரு. யசந்த திசாநாயக்க அவர்கள் 2004 இல் கம்பனியில் இணைந்தார். இவர் தற்போது நிதியியல் முகாமைத்துவத்தின் தலைமைத்துவ பதவியினை வகிக்கின்றார். கம்பனியின் நிதியியல் மற்றும் வணிகக் கொள்முதல் செயற்பாடுகள் இவருக்கு அறிக்கையிடுகின்றன.

இவர் முதலாவது சர்வதேச முறிகள் வழங்கல் மற்றும் இஸ்லாமிய நிதியளித்தல் உள்ளடங்களான கம்பனியின் பல முன்னோடி நிதியியல் கொடுக்கல் வாங்கல்களுக்கு தலைமைதாங்கினார். இவ்விரண்டு நிதியளிப்புகளும் இரண்டு ஆசிய பிராந்திய விருதுகளால் அங்கீகரிக்கப்பட்டன.

இவர் புதிய A330-300 விமானங்களுக்கான முன்-விநியோக நிதியளித்தலை (PDP) உருவாக்குவதற்கு காரணகர்த்தாவாயிருந்ததுடன், இக்கொடுக்கல் வாங்கலானது 2014 இல் ஏயார் பைனான்ஸ் சஞ்சிகையினால் வருடத்திற்கான PDP நிதியளித்தல் வாணிபமாக அங்கீகரிக்கப்பட்டது. திரு. திசாநாயக்கா அவர்கள் முதலீட்டு வங்கியியல் மற்றும் தொலைத்தொடர்புத் துறைகளில் சிரேஷ்ட பதவிகளை வகித்துள்ளார். இவர் தொழில்ரீதியாக ஓர் கணக்காளர் ஆவார் (ஐக்கிய இராச்சியத்தின் பட்டய முகாமைத்துவ கணக்காளர்கள் நிருவகத்தின் சமூக அங்கத்தவர்) மற்றும் கார்டிவ்விலுள்ள வேல்ஸ் பல்கலைக்கழகத்தில் வணிக நிர்வாகத்தில் முதுமானி பட்டத்தையும் பெற்றுள்ளார்.

## திரு. சாமர பெரேரா

*தகவல் தொழில்நுட்பத்தின் குழுமத்தின் தலைமை*

திரு. சாமர பெரேரா அவர்கள் விமான நிறுவனத்துறையில் அனுபவம் நிறைந்த தொழில்வல்லுனராவார். இவருக்கு விமானப் பயணவியல் தொழில்நுட்பம் மறறும் வணிக செயல்முறை, தகவல் தொழில்நுட்பத்திற்கு தன்னியக்கமாக்கப்பட்ட மூலோபாய விநியோக தலைமைத்துவம் மற்றும் ஸ்ரீலங்கன் குழுமத்தின் டிஜிட்டல் உருமாற்றல் ஆகியவற்றில் அனுபவம் காணப்படுகின்றது.

திரு. சாமர பெரேரா அவர்கள் 1999 இல் விமான நிறுவனத்துறையில் நுழைந்து தேசிய வானூர்தியில் இரண்டு தசாப்தங்களுக்கும் அதிகமான அனுபவத்தினை கொணடுள்ளார். இவர் பல்வேறு வகையான முகாமைத்துவம் மறறும் சிரேஷ்ட முகாமைத்து பதவிகளில் விமான நிறுவனதத்தில் சேவையாற்றியுள்ளதுடன் 2012 இல் தகவல் தொழிலநுட்பத்தின் தலைமையாக நியமிக்கப்பட்டார். 2021 இல் ஸ்ரீலங்கன் குழுமத்தின் தகவல் தொழில்நுட்பத்தினை மேற்பார்வை செய்வதற்கு பொறுப்பாளியாக்கப்பட்டார்.

இவர் விமான நிறுவனம் மற்றும் குழுமத்தினது வான்வழிப் பயண தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சூழல் முறைகளுக்குப் பொறுப்பாயுள்ளார். இவர் அடிமட்டத்திலான தகவல் தொழில்நுட்ப செயற்பாடுகளிலிருந்து விமானத்தினுள்ளான இணைப்பு வரையான தகவல் தொழில்நுட்ப முறைகள் மற்றும் விமான நிறுவன வணிக மற்றும் செயற்பாடுகளை கவனிக்கின்றார். திரு. பெரேரா அவர்கள் பல தொழில்நுட்ப புத்தாக்கங்களது ஆரம்ப அமுலாக்கல்களுக்கு தலைமை தாங்கியுள்ளார். இவை பயணிகளை மையப்படுத்திய சேவைகளை நிறுவுவதற்கு, இவற்றுள் சில சர்வதேச விமானப் போக்குவரத்துச் சங்கத்தின் வணிக எளிமையாக்கல் திட்டம், விமான போக்குவரத்திற்கான விரைவான பிரயாண புத்தாக்கத் தீர்வுகள் என்பவையாகும். இவர் விமானநிறுவனத்தின் முற்றுமுழுதான தகவல் தொழில்நுட்ப மேடையினை உறுதிப்படுத்துவதற்காக உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்ப நியமங்களுடன் இணங்கியொழுகுதலை இயக்கினார். ஸ்ரீலங்கன் தொழில் நுட்பமானது தகவல் பாதுகாப்பு முகாமைத்துவத்திற்கு ISO/IEC 27001:2013, மென்பொருள் தர முகாமைத்துவத்திற்கு ISO 9001:2015 மற்றும் தகவல் தொழில்நுட்ப சேவை முகாமைத்துவத்திற்கு ISO/IEC 20000:2018 சான்றிதழ்களைப் பெற்றுள்ளது. திரு. பெரேரா அவர்கள் விலையுயர்ந்த மரபுரீதியான விமான நிறுவன முறைகளை மலிவான கிரயமுடைய பிரயோக தொகுப்புக்கு மாற்றி மாற்றீடு செய்வதற்கு தொழில்நுட்ப குழுக்களை வெற்றிகரமாக வழிநடத்தினார். மேலும், உள்வாரியாக விருத்தி செய்யப்பட்ட பிரயோகங்கள் இவரது வழிகாட்டல் மற்றும் தலைமைத்துவத்தின் கீழ் தேசிய மற்றும் சர்வதேச பாராட்டுக்களைப் பெற்றுள்ளன.

திரு. பெரேரா அவர்கள் ஐக்கிய இராச்சியத்தின் லெஸ்டர் பல்கலைக்கழகத்திலிருந்து, தகவல் தொழில்நுட்பத்தில் விசேடத்துவத்துடன் வணிக நிர்வாகத்தில் முதுமானி பட்டத்தினை வைத்துள்ளார். இவர் தொழில்ரீதியாக ஓர் பொறியியலாளர் என்பதுடன் இலங்கையின் மொரட்டுவ பல்கலைக்கழகத்திலிருந்து இலத்திரணியல் மற்றும் தொலைத்தொடர்பு பொறியியலில் இளமானி விஞ்ஞான பட்டதாரியாவார். இவர் பல தகவல் தொழிநுட்ப விசேடத்துவங்கள் மற்றும் சர்வதேச அளவில் சான்றளிக்கப்பட்ட அங்கங்களிலிருந்து தொழில்சார் தகமைகளையும் சான்றிதழ்களையும் கொண்டுள்ளார்.

## திரு. சாமர ரணசிங்க

*சரக்குச் சேவைகளின் தலைவர்*

திரு. சாமர ரணசிங்க் அவர்கள் 2013 இல் சரக்கு சேவைகளின் தலைவராக கம்பனியில் இணைந்தார். இவர் வாடிக்கையாளர் சேவைகள், சரக்கு இட ஒதுக்கீடுகள், சரக்கு விற்பனைகள் மற்றும் சந்தைப்படுத்தல் மற்றும் விமான நிலைய சரக்குச் செயிற்பாடுகள் எனப்வற்றில் 20 வருடங்களுக்கும் மேலான அனுபவத்தினைக் கொண்டுள்ளார்.

கம்பனியில் இணைவதற்கு முன்னர் இவர் இலங்கைக்குச் செயற்பட்ட சர்வதேச விமான நிறுவனங்களில் சிரேஷ்ட முகாமைத்துவ பதவிகளை வகித்தார்.

## திரு. திமுத்து தென்னக்கோன்

*உலகளாவிய விற்பனைகள் மற்றும் விநியோகத்தின் தலைவர்*

திரு. திமுத்து தென்னக்கோன் அவர்கள் தற்போது விமான நிறுவனத்தின் உலகளாவிய பயணிகள் விற்பனைகள், விநியோக வழி முகாமைத்துவம் மற்றும் அனைத்து விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் செயற்பாடுகளுக்கு தலைமையாக சேவையாற்றுகின்றார். இவர் இப்பதவிக்கு ஏப்ரல் 2017 இல் நியமிக்கப்பட்டார். திரு தென்னகோன் விமான விற்பனை, நிதி மேலாண்மை, வருவாய் மேலாண்மை மற்றும் வணிகத் திட்டமிடல் ஆகியவற்றில் 25 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம் பெற்றவர்.

திரு.தென்னக்கோன் 1992 இல் ஸ்ரீலங்கன் குடும்பத்தில் சேர்ந்தார் மற்றும் ஆரம்ப நாட்களில் வருவாய் திட்டமிடல், அட்டவணை திட்டமிடல், பாதை மேலாண்மை மற்றும் விலை நிர்ணய துறைகளில் பணியாற்றியுள்ளார். அவரது வெளிநாட்டு பணிகளில் துபாய், கனடா மற்றும் இந்தியாவில் உள்ள தேச மேலாளர் மற்றும் ஆசியா பசிபிக் மற்றும் மத்திய கிழக்கு பிராந்தியங்களுக்கான பிராந்திய மேலாளரின் பொறுப்புக்கள் அடங்கும். மேலும், அவர் ஓமான் விமான நிறுவனத்திற்கு வட இந்திய நாட்டின் மேலாளராக பணியாற்றியுள்ளார்.

உலகளாவிய விற்பனை தொழிற்பாட்டிற்கு தலைமை வகிக்கும் முன், திரு. தென்னகோன் பொது முகாமையாளராக வணிக நடவடிக்கைகளில் பங்களித்தார், அங்கு அவர் பிராந்திய விற்பனை, விற்பனை மேம்பாடு, தயாரிப்பு மேம்பாடு, வாடிக்கையாளர் விவகாரங்கள், தொழில்துறை விவகாரங்கள், ஸ்ரீலங்கன் விடுமுறை வணிகம், இலத்திரனியல் வணிகம், உலகலாவிய விநியோக வழிகள் மற்றும் வாடிக்கையாளர் தொடர்பு முகாமைத்துவம் ஆகியவற்றைக் கவனிக்கின்றார். சர்வதேச விமான வணிகம் மற்றும் சந்தைப்படுத்தல் கட்டமைப்புகளில் அவரது பரந்த அளவிலான அறிவு மற்றும் அனுபவம் விளங்குகிறது.

திரு.தென்னகோன் தனது எதிர்கால விற்பனை உத்திகளுக்காக கடுமையான தொழில் போட்டியை வெற்றிகரமாக சமாளிக்க நன்கு அங்கீகரிக்கப்பட்டவர், இது விலை நிர்ணயம், பாதை மேலாண்மை, அட்டவணை திட்டமிடல் மற்றும் வருவாய் திட்டமிடல் பாடத் துறைகளில் தனது நிபுணத்துவத்தை வெளிப்படுத்துகிறது.

செயல்திறன் மிக்க மற்றும் முடிவு சார்ந்த வணிக நடைமுறைகளின் வழக்கறிஞர், திரு. தென்னக்கோன் தனது மூலோபாய திட்டமிடல் மற்றும் புதுமையான செயல்முறை மேம்பாட்டு திட்டங்களுக்கு நன்கு அறியப்பட்டவர். அவர் நிறுவன வளர்ச்சி மற்றும் நீண்ட கால நிலையான சந்தை நடைமுறைகளைக் கற்பிக்கும் ஒரு அர்ப்பணிப்புள்ள தலைவர்.

இவர் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்ட பீடத்தில் பட்டம் பெற்றவர் மற்றும் தற்போது இலங்கை விமான நிறுவனங்களின் சபையின் தலைவராகவும் இருக்கின்றார். அத்துடன் இலங்கை மாநாட்டு பணியகத்தின் சபை அங்கத்தவருமாவார்.

## திருமதி. புத்திக மானகே

*மனித வளங்கள் மற்றும் வானறைச் சேவைகள்*

திருமதி, புத்திக மானகே அவர்கள் 2003 இல் கம்பனியில் முகாமைப் பயிற்சியாளராக இணைந்து அவரது தொழிலை 2004 இல் வர்த்தகக் கொள்முதல் திணைக்களத்தில் நிறைவேற்று உத்தியோகத்தராக ஆரம்பித்தார். இவர் 17 வருடங்கள் அனுபவத்தினை பின்வரும் பிரிவுகளில் கொண்டுள்ளார். வர்த்தக கொள்முதல் நிறைவேற்றுநர் (திட்டங்கள்), சிரேஷ்ட விமானத்தினுள்ளான சேவைகள் நிறைவேற்றுநர் (நிர்வாகம் மற்றும் வானறைப் பணியாள் சேவைகள்), விமானத்தினுள்ளான சேவைகள் முகாமையாளர் ( நிர்வாகம் வானறை பணியாள் அட்டவணைப்படுத்தல்), முகாமையாளர் மனித வளங்கள் அபிவிருத்தி மற்றும் வணிகப் பங்குடைமைகள், மற்றும் வானறைச் சேவைகளின் தலைமை போன்றவையாகும். வானறைச் சேவைகள் தலைமைப் பதவிக்கும் மேலாக ஜனவரி 2020 இல் இவர் மனித வளங்களின் மாற்றாள் தலைமையாக நியமிக்கப்பட்டார். ஜூலை 2020 முதல் இவர் மனித வளங்கள் மற்றும் வானறை சேவைகளின் தலைமைப் பதவியினை வகிக்கின்றார்.

# சிரேஷ்ட முகாமைத்துவக் குழு

செப்டம்பர் 2020 இல், அவர் விமான நிறுவனம் தனது கடமைகளுக்கு மேலதிகமாக ஸ்ரீலங்கன் கேட்டரிங் மனித வள மேம்பாட்டுத்துறையினை கவனிப்பதற்காக "மனிதவள மேம்பாடு மற்றும் கேபின் சேவைகள் குழு தலைவர்" ஆக நியமிக்கப்பட்டார்.

விமான நிறுவனத்தின் முழு மனித வள தொழிற்பாடு மற்றும் ஸ்ரீலங்கன் கேட்டரிங் செயற்பாடு மற்றும் விமான நிறுவனத்தின் நிர்வாகம் மற்றும் இயக்குதல் போன்றவற்றை இவரது அதிகார வரம்பின் கீழ் உள்ளன.

அவர் ஸ்ரீலங்கன் விமான சேவை மற்றும் ஸ்ரீலங்கன் கேட்டரிங் ஆகியவற்றுக்கான சபையின் "மனித வள மற்றும் ஊதியக் குழு" (HRRC) செயலாளராகவும் செயல்படுகிறார்.

இவர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் புள்ளிவிபரவியல் இளமானி விசேட விஞ்ஞான(கௌரவ) பட்டத்தையும் மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவ முதுமானி விஞ்ஞான பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் IPM நிர்வாகத்திலிருந்து மனித வளங்கள் முகாமைத்துவத்தில் தொழில்சார் தகைமையினைப் பெற்றுள்ளார். இவர் தொழிலாளர் சட்டம், வழங்கல் சங்கிலி முகாமைத்துவம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் என்பவற்றில் தகமையினைப் பெற்றுள்ளார்.

## கேப்டன் பேட்ரிக் பெர்னாண்டோ

***விமான சேவைகளின் செயற்பாட்டு தலைவர் (விமானக்குழு )***

L1011 கடற்படையில் ஏர் லங்கா கேடட் விமானியாக என்று அறியப்பட்டபோது 1992 இல் ஸ்ரீலங்கனில் இணைந்தார். L1011, A320,330 மற்றும் A340 விமானங்கள் செலுத்தப்பட்டன. 20 ஆண்டுகளுக்கும் மேலாக கேப்டனாகவும், 15 ஆண்டுகளுக்கும் மேலாக பயிற்றுவிப்பாளராகவும் இருந்தார். 2011 இல் துணை தலைமை விமானி பயிற்சி மற்றும் தரநிலைகள் மற்றும் தலைமை விமானி பயிற்சி மற்றும் தரங்களாக நிர்வாகத்தில் சேர்ந்தார்.

A320/330 கடற்படையில் தற்போதைய தளபதி, சிமுலேட்டர் மற்றும் லைன் பயிற்றுவிப்பாளர் மற்றும் CAASL க்கான நியமிக்கப்பட்ட சோதனை விமானி.

## சமிந்த பெரேரா

***சந்தைப்படுத்தல் தலைவரின் சுயவிவரம்***

திரு. சமிந்த பெரேரா 2015 ஆம் ஆண்டு ஜுன் மாதம் முதல் இலங்கையின் சந்தைப்படுத்தல் மற்றும் கூட்டாண்மை தொடர்பாடல் மூலோபாயத்திற்கு தலைமை தாங்குகிறார். அவர் விமான போக்குவரத்து துறையில் இரண்டு தசாப்தங்களாக இருக்கிறார்., மூலோபாய சந்தைப்படுத்தல் மற்றும் உலகளாவிய வர்த்தகத்தில் நிபுணத்துவம் பெற்றவர்.

திரு. பெரேரா, எமிரேட்ஸ் காலத்தில் இலங்கையில் வர்த்தக நிறைவேற்று அதிகாரியாக இணைந்தார், மேலும் விமான நிறுவனங்களின் இயக்குநர்- நெருக்கடித் தொடர்புகள், முகாமையாளர்- நிறுவன நிகழ்வுகள் மற்றும் பதவி உயர்வுகள், நிறுவனத் தொடர்பாடல்களின் தலைவர் (பதில் கடமை), பிரான்சுக்கான வர்த்தக முகாமையாளர், இலங்கை மற்றும் மாலத்தீவுகளுக்கான பிராந்திய முகாமையாளர், ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸின் உலகளாவிய விற்பனை மற்றும் கூட்டுத் தொடர்பாடல்களின் பொது முகாமையாளர் போன்ற பல முக்கிய முன்னணி நிலை பதவிகளை வகித்தார்..மேலும் ஓமன் ஏர் நிறுவனத்தின் மூத்த சந்தைப்படுத்தல் தொடர்பாடல் முகாமையாளராகவும் பிரான்சுக்கான யுனெஸ்கோவின் ஆலோசகர்/மதிப்பீட்டாளராகவும் இருந்தார்.

ஏர்லைன்ஸ் விற்பனையில் அவர் கடமையாற்றிய காலத்தில், ஏர்லைன்ஸ் எல்லை குறுக்குச் சந்தை நிலைக்கு முக்கியத்துவம் கொடுத்து உலகளாவிய விற்பனை மூலோபாயத்தை மேம்படுத்துவதில் முக்கிய பங்காற்றினார், மேலும் வணிக நுண்ணறிவைப் பயன்படுத்தி விற்பனை குழுக்களை மறுசீரமைப்பதில் இலங்கை வலையமைப்பில் உள்ள பிராந்திய முகாமையாளர்கள் மற்றும் உள்ளூர் முகாமையாளர்களை வழிநடத்தினார். விற்பனையை அதிகரிக்க வணிக நுண்ணறிவு மற்றும் பகுப்பாய்வுகளைப் பயன்படுத்தக்கூடிய ஒரு உள் கலாச்சாரத்தை உருவாக்கினார். விற்பனையில் அவர் கடமையாற்றிய காலத்தில் முக்கிய மைல்கல் ஆக 780 மில்லியன் அமெரிக்க டொலர்களின் ஒட்டுமொத்த பயணிகளின் நெட்வொர்க் வருமான இலக்கை பதிவு செய்ததுடன் இலங்கையில் சந்தைப் பங்கை 23% இலிருந்து 33% ஆக விரிவுபடுத்னார்.

திரு. பெரேரா விமான நிறுவன நன்மதிப்பினைக் கட்டியெழுப்புவதில் குறிப்பிடத்தக்க சாதனை படைத்துள்ளதுடன், புதுமையான விற்பனை மற்றும் குறித்து வைக்கும் முறைகள் ஆகியவற்றினால் விமானசேவை சந்தைப்படுத்தலை திடமான அடிப்படைகளில் கட்டமைத்து பயணிகளின் வரவினையும் அதிகரித்தார். அவரது நிபுணத்துவம் ஆனது, புதிதாக நிறுவப்பட்ட சந்தைகள்/இலக்குகளில் வியாபார நாமத்தினை (brand) உறுதிப்படுத்துதல், புதிய சந்தைப்படுத்தல் அணுகுமுறைகளைக் கண்டுபிடித்தல் மற்றும் வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட முழுமையான தகவல்தொடர்பு போன்ற பகுதிகளுக்கும் விரிவடைகிறது. சர்வதேச மன்றங்களில் அங்கீகரிக்கப்பட்ட பல உலகளவில் பாராட்டப்பட்ட சந்தைப்படுத்தல் தொடர்பு முயற்சிகளில் கலந்து கொள்ள அவர் ஏர்லைன்ஸ் சந்தைப்படுத்தல் குழுவை வழிநடத்தியுள்ளார்.

அவர் ஒரு ஆற்றல்மிக்க மற்றும் முன்மாதிரியான தலைவர், புதுமையான முறைகளை ஆராய்வதிலும் வணிக விமான உலகில் சவால்களை சமாளிக்கும் ஆர்வமும் கொண்டவர்.அவரது பொறுப்புணர்வு, செயலூக்கம் , உறுதியான அணுகுமுறை மற்றும் விதிவிலக்கான தனிப்பட்ட திறன்கள் ஆகியவை ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் நன்மதிப்பினை உயர்மட்டத்திற்கு உயர்த்தியுள்ளது.

அவர் ஆங்கிலம், பிரஞ்சு மற்றும் சிங்களம் ஆகிய மும்மொழிகளையும் அறிந்தவர்.

## சஞ்சீவ ஜயதிலக்க

***சிரேஷ்ட முகாமையாளர் விமான நிலையம் தரை சேவைகள்***

ரவி சஞ்சீவ ஜயதிலக்க விமான நிலையம் மற்றும் தரை சேவைகள் பிரிவின் தலைவராக டிசம்பர் 2020 இல் நியமிக்கப்பட்டார், கடந்த 15 வருடங்களாக ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் உடன் இருந்தார் ஸ்ரீலங்கனில் அவர் மனித வள மேம்பாட்டு முகாமையாளராக பணியினை தொடங்கினார், அதன் பிறகு அவர் உலகளாவிய விற்பனைப் பிரிவுக்குச் செல்வதற்கு முன் தயாரிப்பு மேம்பாட்டுத் துறையை நிர்வகிக்கத் தொடங்கினார். இலங்கை மற்றும் ஆஸ்திரேலியாவின் நாட்டு முகாமையாளர். ஸ்ரீலங்கனில் சேருவதற்கு முன்பு அவர் ஆடை உற்பத்தி தொழில் மற்றும் பகுதி அரசு அதிகார சபையில் பணியாற்றியுள்ளார்.

அவர் தெற்கு குயின்ஸ்லாந்து பல்கலைக்கழகத்தில் மனித வளத்தில் முதுகலைப் பட்டமும், அமெரிக்காவின் வாஷிங்டன் கல்லூரியில் வணிக நிர்வாகத்தில் இளங்கலைப் பட்டமும் பெற்றார்.

## திரு. பிரிமால் டி சில்வா

***பொது முகாமையாளர், ஸ்ரீலங்கன் வான்வழிப் பயணக் கல்லூரி***

திரு. பிரிமால் டி சில்வா அவர்கள் 1988 இல் வானறை பணியாள் அங்கத்தவராக கம்பனியில் இணைந்து 2006 வரை ஓர் விமானக் கணக்கராக இருந்தார். தற்போது இவர் ஸ்ரீலங்கன் வான்வழிப் பயணக் கல்லூரியின் பொது

முகாமையாளர் பதவியினையும் பொறுப்பான முகாமையாளர் (பகுதி 147), விமான பராமரிப்பு பயிற்றுவித்தல் ஒழுங்கமைப்பு என்பவற்றுக்கான பொறுப்பினையும் வகிக்கின்றார். இந்நியமனத்திற்கு முன்னர், வானறை பாதுகாப்பு முகாமையாளர் மற்றும் முகாமையாளர் விமானத்தினுள்ளான செயற்பாடுகள் மற்றும் பயிற்சி போன்ற முன்னைய பதவிகளையும் வகித்துள்ளார்.

இவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து வணிக நிர்வாகத்தில் நிறைவேற்று முதுமானி பட்டத்தினையும் இலங்கை பயிற்றுவித்தல் மற்றும் அபிவிருத்தி நிருவகத்திலிருந்து பயிற்றுவித்தல் மற்றும் அபிவிருத்தியில் தேசிய டிப்ளோமாவினையும் பெற்றுள்ளார். அவர் தற்போது கொழும்பு பல்கலைக்கழகத்தில் தொழிலாளர் உறவுகள் மற்றும் மனிதவள மேலாண்மை முதுகலை பட்டதாரிக் கல்வியை கற்கிறார்.

## லெப்டினன்ட் கெர்னல் பந்துல வேரகம பொது முகாமையாளர்

*குழு பாதுகாப்பு*

லெப்டினன்ட் கெர்னல் பந்துல வேரகம அவர்கள் இலங்கை தரைப்படையின் கறைபடாத 23 வருடங்கள் சேவையுடன் 2012 இல் கம்பனியில் இணைந்தார். முப்படைச் சேவைகள் சூழலிலான கட்டளை மற்றும் பயிற்சிகளின் விரிவான அனுபவத்திற்கு அப்பால் இவர் ஐக்கிய நாடுகள் திணைக்களத்தினது அமைதி காத்தல் செயற்பாடுகளிலிலும் சேவையாற்றியுள்ளார். மனித வளங்கள், விமானத்தினுள் மற்றும் பாதுகாப்பு பிரிவுகள் என்பவற்றில் தொழில்புரிந்ததன் பின்னர் பெப்ரவரி 2016 இல் விமான நிலையம் மற்றும் தரைச் சேவைகள் பிரிவினை வழிநடத்துவதற்காக நியமிக்கப்பட்ட பின் பந்துல அவர்கள் ஏப்ரல் 2020 இல் குழுப் பாதுகாப்புப் பிரிவுக்கு தலைமை பொறுப்பேற்றார்.

இவர் களணி பல்கலைக்கழகத்தில் பாதுகாப்பு கற்கையில் ஓர் முதுமானி பட்டத்தினையும் பாஸ்தானின் குவேட்டா பல்கலைக்கழகத்திலிருந்து விஞ்ஞான முதுமானி பட்டத்தினையும் பெற்றுள்ளார்.

## அர்ஜுன கபுகீக்கியன

*சிரேஷ்ட முகாமையாளர் - வானூர்தி பராமரிப்பு*

திரு அர்ஜுன கபுகீக்கியன அப்போது எயர்லங்கா என அழைக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் நிறுவனத்தின் இயந்திரவியல் பகுதியில் ஒரு பயிலுனராக 1984 ஆம் ஆண்டு இணைந்து கொண்டார். 2018 மே மாதம் அவர் வானூர்தி பராமரிப்பு பிரிவின் சிரேஷ்ட முகாமையாளராக நியமிக்கப்பட்டதுடன் தற்போது அவர் கம்பனியின் வானூர்தி பொறியியல் பிரிவை மேற்பார்வை செய்து வருகின்றார். அவர் ஒரு உத்தரவுப் பத்திரம் பெற்ற வானூர்தி பராமரிப்பு பொறியியலாளர் என்பதுடன் எயார்பஸ் A320/330/340 வானூர்திகளை பராமரிக்கும் தகுதி மிக்கவராவார். கம்பனியின் பொறியியல் மற்றும் பராமரிப்பு பிரிவில் அவர் பல முகாமைத்துவ பதவிகளை வகித்துள்ளார். 1988 - 1991 காலப்பகுதியில் அவர் கல்ப் வானூர்தி பராமரிப்பு கம்பனியல் பல் கலாச்சார சூழலில் பணிபுரிந்த அனுபவத்தையும் அர்ஜுன கொண்டுள்ளார்.

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் பராமரிப்பு உத்தரவுப்பத்திரம் பெற்ற திரு. கபுகீக்கியன ஐக்கிய இராச்சியத்தின் கம்பிரியா பல்கலைக் கழகத்தில் வியாபார நிருவாக முதுமானி கற்கையையும் பூர்த்தி செய்தவராவார்.

## திரு. ஷானக்க சபரமது

*முகாமையாளர், வருமான முகாமைத்துவம்*

2000 ஆம் ஆண்டு முகாமைத்துவ பயிலுனராக கம்பனியுடன் இணைந்து கொண்ட திரு. ஷானக்க சபரமது தனது பணிப்பயணத்தை கம்பனியின் வர்த்தகப் பிரிவில் ஆரம்பித்தார். இத்தொழிற்துறையில் 20 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டுள்ள அவர் 15 வருடங்கள் முகாமைத்துவ பொறுப்புக்களை வகித்துள்ளார். தற்பொழுது ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் வருமான முகாமைத்துவம், வலையமைப்பு திட்டமிடல் மற்றும் சர்வதேச உறவுகள் பிரிவுகளை மேற்பார்வை செய்து வருகின்றார்.

தனது இளமானி பட்டப்படிப்பை கொழும்பு பல்கலைக்கழகத்தின் வர்த்தகம் தொடர்பான விசேட கற்கையில் பூர்த்தி செய்துள்ள இவர் விமானப் பயணத்துறை பற்றிய IATA டிப்ளோமா கற்கையை (மொன்டாறியல், கனடா) பூர்த்தி செய்துள்ளார். மேலும், இவர் ஐக்கிய இராச்சியத்தின் பட்டயக் கணக்காளர் அமைப்பின் இறுதிப் பரீட்சையிலும் சித்தியடைந்துள்ளார்.

## திருமதி. துஷாரி பெரேரா

*குழுமத்தின் சட்ட விவகாரங்களுக்கான முகாமையாளர்*

திருமதி துஷாரி பெரேரா ஸ்ரீலங்கன் குழுமத்தின் சட்ட விவகாரங்களுக்கான குழும முகாமையாளர் என்ற பதவியை வகிக்கின்றார். ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிடட் நிறுவணத்தின் மனித வளப் பிரிவில் தனது பணிப்பயணத்தை ஆரம்பித்த அவர் மனித வள முகாமைத்துவத்தின் பல அம்சங்களில் பணி புரிந்த ஒருவராவார். தொழிற்துறை மற்றும் தொழிலாளர் உறவுகள் அத்துடன் தொழிலாளர்கள் தொடர்பு பட்ட வழக்கு நடவடிக்கைகள் போன்ற விடயங்களில் சிறந்த அனுபவம் மிக்கவராவார். 2013 ஆம் ஆண்டு சட்ட விவகாரங்கள் பிரிவில் இணைந்த இவர் குழுமத்தின் அனைத்து மட்டங்களிலும் வர்த்தக மற்றும் விமானத்துறை ஒப்பந்தங்களை கையாளல், குழும மற்றும் கட்டுப்பாட்டு விடயங்கள், பிணக்குத் தீர்த்தல், பல் நியாயாதிக்க எல்லைகள் கொண்ட வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சட்ட நடவடிக்கைகள், புலமைச் சொத்து, தொழிற்துறை மற்றும் தொழிலாளர் உறவுகள் மற்றும் குழுமத்தின் நொத்தாரிசுப் பணிகள் போன்ற பல விடயங்ளைக் கையாண்டு வருகின்றார்.

தொழில்முறை சட்டத்தரணியான திருமதி பெரேரா சிங்கள மற்றும் ஆங்கில மொழிகளில் நொத்தாரிசு அனுமதிப்பத்திரம் கொண்டவராவார். தனது சட்டக் கல்விக்கு மேலதிகமாக நபர்கள் முகாமைத்துவ நிலையத்தில் மனித வள முகாமைத்துவ டிப்ளோமா கற்கையையும் பூர்த்தி செய்தவராக இவர் உள்ளார்.

## சுதத் மடபத்த

*குழுமப் பாதுகாப்பின் சிரேஷ்ட முகாமையாளர்*

கம்பனியின் தளக் கையாள்கை பிரிவின் சுமைக் கட்டுப்பாட்டாளராக முதலில் இணைந்து கொண்ட கப்டன். சுதத் மடபத்த் விமானத் தொழிற்துறையில் 27 வருட அனுபவத்தைக் கொண்டவராவார். 1998 ஆம் ஆண்டு விமான இயக்கத் துறை பிரிவின் விமான அனுமதிப் பத்திரம் பெற்ற பொருட்கள் அனுப்பும் அலுவலராக பணிபுரிந்த அப்பிரிவின் A330/A340 விமானங்களின் முதலாவது அதிகாரியாக பதவி முன்னேற்றம் அடைந்தார். 2006 இல் எத்திஹாத் எயார்வேய்ஸ் நிறுவனத்தில் இணைந்து கொண்ட இவர் 2010 தனது முதலாவது கட்டளையை பெற்றார்.

2019 இல் அவர் ஸ்ரீலங்கன் நிறுவனத்தில் மீண்டும் ஒரு கப்டனாக இணைந்து கொண்ட அவர் 2020 ஆம் ஆண்டின் IOSA சான்றிதழைப் பெறுவதற்கான தயாரிப்புகளின் ஒரு IOSA ஆலோசகர் கணக்காய்வாளராக ஒப்பந்தம் செய்யப்பட்டார். 2021 இல் முகாமைத்துவ அணியுடன் இணைந்து கொண்டதுடன் குழுமப் பாதுகாப்பின் சிரேஷ்ட முகாமையாளராக பதவியுயர்வு பெற்றார்.

கப்டன் மடபத்த பாதுகாப்பு மற்றும் தர முகாமைத்துவம் என்பவற்றில் மிகுந்த பயிற்சி பெற்றவராகும். இப்பயிற்சிகளை அவர் EASA, IATA, எயார்பஸ் மற்றும் போயிங் போன்ற அமைப்புகளிடம் இருந்து பெற்றுள்ளதுடன் இவற்றில் உள்ளக பயிற்சிகளுகம் உள்ளடங்குகின்றன. தற்பொழுது அவர் MBA கற்கையை மேற்கொண்டு வருகின்றார்.

# தொழில் முனைவின் இடர்நேர்கை முகாமைத்துவம்

### இடர்நேர்கை ஆட்சி முறை

ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் இடர் நேர்கை முகாமைத்துவ நியமங்கள் மற்றும் தொழில் தேவைகளின் அடிப்படையில் நிறுவன இடர் முகாமைத்துவ செயல்முறைக்கான கட்டமைப்பை நிறுவியுள்ளது. ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸின் நிறுவன இடர்நேர்கை முகாமைத்துவ கட்டமைப்பிற்கு பணிப்பாளர் சபை ஒப்புதல் அளித்துள்ளது, மேலும் இது இலங்கையில் உள்ள ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸின் அனைத்து பிரிவுகளிலும் செயல்படுத்தப்படுகிறது.

வணிக இடர் நேர்கைகளை அடையாளம் காணுதல், மதிப்பீடு செய்தல் மற்றும் நிர்வகித்தல் மற்றும் பயனுள்ள இடர் நேர்கை முகாமைத்துவ முறையை நிறுவுதல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றில் நிர்வாக செயல்திறனை மதிப்பாய்வு செய்தல் மற்றும் நிர்வாக மட்டத்தில் நிறுவப்பட்ட நடைமுறைகளை மீளாய்வு செய்வதன் மூலம் கணக்காய்வுக் குழுவானது அவர்களின் மேற்பார்வை பொறுப்புகளில் இருந்து சபைக்கு உதவுகிறது.

மூத்த முகாமைத்துவ குழுவானது சாத்தியமான இடர் நேர்கைகளை மதிப்பாய்வு செய்கிறது மற்றும் மூலோபாய நிலை இடர் நேர்கைகளை திறம்பட நிர்வகிப்பதற்கான உத்திகளை உருவாக்குகிறது. துறை சார்ந்த / பிரிவு சார்ந்த முகாமையாளர்கள் தங்கள் பொறுப்பில் உள்ள இடர் நேர்கைகளை கண்டறிந்து அவற்றை நிர்வகிக்க செயல் திட்டங்களை வகுப்பது அவர்களின் பொறுப்பாகும்.

ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவன இடர் நேர்கை முகாமைத்துவ செயற்படுத்தலானது குழு உத்தரவாதம் மற்றும் ஆலோசனை சேவைகளால் வசதி/எளிதாக்கம் செய்யப்படுகிறது.







### இடர்நேர்கை முகாமைத்துவ செயன்முறை

ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் ஆனது இடர் முகாமைத்துவ கொள்கைகளின் கட்டமைப்பினை அடையாளம் காணுதல், மதிப்பீடு செய்தல், முகாமை செய்தல், அறிக்கையிடல் மற்றும் இடர் நேர்கைகளினை கண்காணித்தல் ஆகியவற்றுக்கான அனைத்து பிரிவுகளிலும் தரப்படுத்தப்பட்ட நடைமுறைகள் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்காக செயல்படுத்தியுள்ளது.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் இடர்நேர்கை முகாமைத்துவ செயல்முறையானது இடர்நேர்கை இனங்காணுதல், இடர்நேர்கை பகுப்பாய்வு, இடர்நேர்கை செய்கைமுறை மற்றும் இடர்நேர்கை அறிக்கையிடல் மற்றும் கண்காணித்தல் என்பனவற்றை உள்ளடக்கியுள்ளது.

ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் உள்ளக மற்றும் வெளிப்புற காரணிகளை எதிர்பார்க்கிறது மற்றும் செயல்பாட்டு மற்றும் கூட்டாண்மை நோக்கங்களை அடைவதில் எந்தவொரு இடையூறும் ஏற்படக்கூடிய சாத்தியமான இடர் நேர்கைகளை அபாயங்களை அடையாளம் காண்கிறது. அடையாளம் காணப்பட்ட இடர் நேர்கைகளானது இடர் நேர்கையின் நிகழ்வியல்பு மற்றும் தாக்கத்தின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன மற்றும் இடர் நேர்கை மதிப்பெண் அடிப்படையில் குறிப்பிடத்தக்க, உயர், நடுத்தர அல்லது குறைந்தவை என மதிப்பிடப்படுகின்றன. இடர் நேர்கை மதிப்பெண்ணிணை நிகழ்வியல்பு மதிப்பீட்டோடு பெருக்கி ஆபத்து மதிப்பெண் கணக்கிடப்படுகிறது.

மூத்த முகாமைத்துவக் குழு மற்றும் துறைசார்/ பிரிவுசார் முகாமையாளர்கள் இடர் நேர்கை மதிப்பீடுகள் மற்றும் இடர்நேர்கை மதிப்பெண் ஆகியவற்றின் அடிப்படையில் செயல் திட்டங்களை வகுப்பதில் பொறுப்பினைக் கொண்டுள்ளனர். குறிப்பிடத்தக்க இடர்நேர்கை சிகிச்சை நடவடிக்கைகள் தலைமை நிர்வாக அதிகாரி/அந்தந்த மூத்த முகாமைத்துவ குழு உறுப்பினர்களால் மதிப்பாய்வு செய்யப்படுகின்றன.

அனைத்து இடர்நேர்கை தோற்ற வடிவங்களும் ஒரு மைய தரவுத்தளத்தில் பராமரிக்கப்படுகின்றன மற்றும் இடர்நேர்கைகள் நிகழ் நிலையில் இருப்பதை உறுதிசெய்து தற்போதைய இயக்க சூழலை பிரதிபலிப்பதற்கு இடர்நேர்கை உரிமையாளர்கள் நேரடியாக ERM அமைப்பைப் புதுப்பிக்க (update) முடியும்.

# கூட்டாண்மை ஆளுகை அறிக்கை

கம்பனியின் செயற்திறனின் பேண்தகுநிலைக்கு சிறந்த கூட்டாண்மை ஆளுகை அவசியமானது என ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸின் நிர்வாகம் மற்றும் சபை நம்புகிறது மற்றும் பணிப்பாளர்கள் சபையானது அடிப்படையில் கண்காணிக்கும் பணியினை ஆற்றுவதால் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களில் சிறந்த ஆளுகை நடைமுறைகளை ஏற்றுக்கொள்வது இன்றியமையாத தேவையாகும்.

நேர்மை, பொறுப்பு, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றில் ஆரோக்கியமான சமநிலையை பேணுவதற்கும் மற்றும் பராமரிப்பதற்கும் கூட்டாண்மை ஆளுகைக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளின் நியமங்களை தொடர்ந்து மேம்படுத்துவதற்கும் கம்பனியானது திடசங்கற்பம் பூண்டுள்ளது.

ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸானது பணிப்பாளர் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அதன் கூட்டாண்மை ஆளுகையின் ஒரு பகுதியாக பின்வரும் தன்னார்வ நடைமுறைகள் மற்றும் சட்டவாக்கங்கள், சட்டக்கோவைகளின் கட்டமைப்பிற்குள் இணங்கியொழுகுகின்றது.

- உள்ளக கம்பனி விதிகள் மற்றும் செயற்பாடுகள் மற்றும் தொழிற்துறை குறித்த விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகள்.
- கம்பனியின் அமைப்பு அகவிதிகள்
- 2007ம் ஆண்டு 7ம் இலக்க கம்பனிச் சட்டம்
- கூட்டாண்மை ஆளுகை குறித்த வழிகாட்டுதல்கள் மற்றும் நவம்பர் 16, 2021 திகதியிடப்பட்டு பொது நிறுவனங்கள் சுற்றறிக்கை இலக்கம் 01/2021 இன் கீழ் வெளியிடப்பட்ட அரசுக்கு சொந்தமான நிறுவனங்களுக்கான செயன்முறைக் கையேடு.

### பணிப்பாளர்கள் சபை

#### *சபையினது தொகுப்பு*

கம்பனியின் அமைப்பு அகவிதிகளின் உறுப்புரைக்கமைய, கம்பனியின் பங்குகளில் 50 சதவீதத்திற்கு மேல் அரசு வைத்திருக்கும் வரையில் திறைசேரியின் செயலாளரின் ஊடாக இலங்கை அரசானது பணிப்பாளர் சபையினை நியமிக்கிறது அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களை வெற்றிகரமான தொழிற்துறைகளாக மாற்றும் திறன் கொண்ட தகுதியான மற்றும் திறமையான நபர்கள் உள்வாங்கப்படுவதை உறுதி செய்வதற்காக, தெரிவுக் குழு மூலம் சபைக்கு பணிப்பாளர்களை அரசாங்கமானது நியமிக்கிறது. நிறுவனங்களின் பொது உரிமைத்துவம் அரசாங்கத்தின் உடைமையாக இருப்பதால், பணிப்பாளர் சபையானது நேரடியாக அரசாங்கத்திற்கு பொறுப்புக் கூறவேண்டியுள்ளது.

#### *சபையின் பங்களிப்பு*

சபையானது கம்பனியின் நோக்கத்தினை அடைவதற்கு மூலோபாய வழிகாட்டுதலை வழங்குகிறது மற்றும் மூலோபாய திட்டமானது தேசிய கொள்கைகள் மற்றும் முன்னுரிமைகளுடன் இணைந்திருப்பதை உறுதி செய்கிறது.

சபையானது சமநிலை மற்றும் சக்தி மற்றும் அதிகாரத்தை எளிதாக்கும் நிர்வாகத்தினருக்கு மத்தியில் பொறுப்புகளின் ஒரு தெளிவான பிரிவின் எல்லையினை நிர்ணயிக்கின்றது. மூலோபாய வழிகாட்டுதல்களின் வினைத்திறன்மிக்க பிரயோகத்திற்கு வசதியாக செயன்முறை சார் முடிவுகளை எடுப்பதில், நிர்வாகத்திற்கு போதுமான அதிகாரப் பிரதிநிதித்துவத்தை சபை உறுதி செய்கிறது.

சபையின் பிரதான பொறுப்புக்களாக

- மூலோபாய வழிகாட்டுதல்களின் வினைத்திறன்மிக்க பிரயோகத்திற்கு வசதியாக செயன்முறை சார் முடிவுகளை எடுப்பதில், நிர்வாகத்திற்கு போதுமான அதிகாரப் பிரதிநிதித்துவத்தை சபை உறுதி செய்தல்
- தீர்மானம் மேற்கொள்ளும் மற்றும் பொறுப்புக்கூறலை எளிதாக்கும் உறுதியான மற்றும் நம்பகமான நிர்வாக தகவல் முறைமையினை கம்பனி கொண்டிருப்பதனை உறுதிசெய்தல்
- கணக்கீடு மற்றும் நிதி அறிக்கையிடல் முறைமைகள், இடர்நேர்கை முகாமைத்துவம் மற்றும் செயன்முறைசார் கட்டுப்பாடு போன்ற கட்டுப்பாட்டு முறைமைகளின் ஒருமைப்பாட்டினை உறுதி செய்தல்,சட்டங்கள், ஒழுங்குமுறைகள் மற்றும் பொருத்தமான நியமங்களுடன் இணங்குவதை நிலைநிறுத்துதல்
- செயன்முறை, நிர்வாக மற்றும் நிதியியல் நடைமுறைகள் உள்ளிட்ட முக்கிய செயன்முறைகள் மற்றும் நடைமுறைகள் முறையாக ஆவணப்படுத்தப்பட்டு மற்றும் காலத்துக்கு ஏற்ப புதுப்பிக்கப்படுவதை உறுதிசெய்தல்.
- கம்பனி இணையதளம் மூலம் எந்தவொரு நியதிச் சட்ட அல்லது செயன்முறை சார் தேவைகளையும் சமரசம் செய்யாமல் அதன் பங்குதாரர்களுக்கு நிதி மற்றும் நிதி சாரா தன்மையின் அதிகபட்ச தகவல்களை வெளிப்படுத்துவதை உறுதிசெய்தல்.

பணிப்பாளர்கள் தங்கள் பொறுப்புகளை நிறைவேற்ற சரியான நேரத்தில் மற்றும் துல்லியமான தகவல்களை வழங்குவதற்காக பின்வரும் செயன்முறைகள் ஒழுங்குமுறைப்படி உள்ளன

- அனைத்து பணிப்பாளர்களும் துல்லியமான, பொருத்தமான, சரியான நேரத்தில், தெளிவான மற்றும் சமநிலைப்பட்ட தகவல்களைப் பெறுகிறார்கள்
- குழுமங்கள், சபை மற்றும் பணிப்பாளர்கள் மற்றும் பிற முக்கிய நிர்வாகத்திற்கிடையிலான தகவல் பரிமாற்றத்திற்கான தொடர்புப் புள்ளியாக கம்பனியின் செயலாளர் செயற்படுகிறார்.
- பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் அந்தந்த பிரிவுகளின் தலைமைகள் தங்கள் சமர்ப்பிப்புகளை சபைகளிடம் சமர்ப்பிக்கின்றனர் மற்றும் சபையினால் கோரப்படும் அவசியமான தெளிவுகளை வழங்குகிறார்கள்.
- கூடுதலாக, கம்பனியின் பேண்தகுநிலை முன்முயற்சிகளுக்கு அமைய, அனைத்து சபை ஆவணங்களும் மின்னணு வடிவத்தில் கிடைக்கக் கூடியதாக உள்ளன.

சபையினது தொழிற்பாடுகள் பலமான தகவல் தொழில்நுட்பத்தால் ஆதரிக்கப்படுகின்றன, சபை உறுப்பினர்கள் தங்கள் சபை ஆவணங்களை பாதுகாப்பான இணைப்பு வழியாக அணுகுவதற்கு உதவுகிறது மற்றும் தொலைவில்

# கூட்டாண்மை ஆளுகை அறிக்கை

இருந்தாலும் இணையவழி மூலம் கூட்டங்களில் பங்கேற்க முடிகிறது.

### *சபையின் துணைக்குழுமங்களுக்கான கையளிப்பு*

மேம்பட்ட ஆளுகை மற்றும் சிறந்த நடைமுறைகளை நிறைவேற்றுவதற்கு விமான சேவையானது சபையின் துணைக்குழுமங்களைக் கொண்டுள்ளது.. இந்தக் குழுமங்கள் தங்கள் நிபுணத்துவத்தையும் அனுபவத்தையும் ஒதுக்கப்பட்ட குழுக்களுக்குக் கொண்டு வரக்கூடிய பணிப்பாளர்களை உள்ளடக்கியிருக்கிறது. பணிகள் முறையான குறிப்புரையின் நியதிகளில் அமைக்கப்பட்டுள்ளன. கம்பனியின் செயலாளரே சபையின் துணைக்குழுமங்களுக்கான செயலாளராக காணப்படுவார்.

குறிப்புரைகளின் நியதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள தங்கள் அதிகாரம் மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பான விடயங்களை பரிசீலிக்க மற்றும் கலந்துரையாட குழுமங்கள் தவறாமல் ஒழுங்குமுறையாக கூடுகின்றன. அவர்களின் நோக்கீடுகள் மற்றும் பரிந்துரைகள் ஒழுங்குமுறையாக சபைக்கு அறிக்கையிடப்படுகின்றன.

### *பணிப்பாளர்களுக்கான நட்டோத்தரவாதம்*

கம்பனியின் அமைப்பு அகவிதிகளுக்கு இணங்க, கம்பனியின் பணிப்பாளர்கள் என்ற நிலையில் தங்கள் கடமைகளைச் செய்ததன் விளைவாக ஏற்படும் பொறுப்புகள் தொடர்பாக சட்டத்தால் அனுமதிக்கப்படும் அளவிற்கு கம்பனியிடமிருந்து பணிப்பாளர்களுக்கு நட்டோத்தரவாதம் வழங்கப்படுகிறது. பணிப்பாளர் மோசடியாக அல்லது நேர்மையற்ற விதத்தில் நடந்து கொண்டதாக நிரூபிக்கப்பட்டால் நட்டோத்தரவமானது எந்தளவு அளவிற்கும் எந்தப் பாதுகாப்பினையும் அளிக்காது. கம்பனியானது ஆண்டு முழுவதும் பணிப்பாளர்கள் மற்றும் அதிகாரிகளின் பொறுப்புக் காப்புறுதியினை பராமரித்து வருகிறது.

### *தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியின் பங்களிப்புகள்*

மூலோபாய மற்றும் செயன்முறை விடயங்களுக்கிடையேயான வேறுபாடு தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியின் பொறுப்பைப் பிரிப்பதன் அடிப்படையில் தெளிவாக நிறுவப்பட்டுள்ளது. பணிப்பாளர்கள் சபையின் தலைவர் என்பது ஒரு நிறைவேற்று அதிகாரமற்ற நியமனமாகும் மேலும் மூலோபாய பிரச்சனைகளில் கவனம் செலுத்துதல் மற்றும் மூத்த நிர்வாகக் குழு மற்றும் வணிகத்தினைக் கண்காணிக்கிறார். சபை நடைமுறைகள் பின்பற்றப்படுவதனையும் அனைத்து சபை உறுப்பினர்களும் கூட்டங்களில் வினைத்திறனுடன் பங்கேற்பதையும் அவர் உறுதி செய்கிறார்.

குழுவின் மூலோபாய மற்றும் செயற்பாட்டுத் திட்டங்கள் மற்றும் மூத்த நிர்வாகக் குழுவின் தலைமைத்துவம் மற்றும் வணிகத்தின் நாளாந்த நிர்வாகத்தினை கண்காணித்தல் பிரதம நிறைவேற்று அதிகாரியின் பொறுப்பாகும். தலைவர் கம்பனியின் செயற்திறன், செயன்முறைசார் விடயங்கள் மற்றும் மனித வளங்கள் தொடர்பான ஏதேனும் பிரச்சனைகளைப் பற்றி கலந்துரையாட பிரதம நிறைவேற்று அதிகாரியை தவறாமல் சந்திப்பார்.

### *உள்ளக கட்டுப்பாடு மற்றும் இடர் நேர்கை முகாமைத்துவம்*

இடர்நேர்கை முகாமைத்துவ கட்டமைப்பு, நிதியியல் கட்டுப்பாடு, உள்ளக கணக்காய்வு மற்றும் ஆதரவுக் கொள்கைகளால் தற்போது உள்ள உள்ளக கட்டுப்பாட்டு கட்டமைப்பு அமைக்கப்பட்டுள்ளது. கம்பனியின் உள்ளக கட்டுப்பாட்டு கட்டமைப்பின் நோக்கமானது, செயற்பாடுகள் வினைத்திறனாகவும் மற்றும் மூலோபாய இலக்குகளுடன் நன்கு இணைந்திருப்பதனையும் உறுதி செய்வதாகும். உள்ளக கட்டுப்பாட்டு கட்டமைப்பானது சரியான, நம்பகமான முழுமையான மற்றும் சரியான நேரத்தில் நிதியியல் அறிக்கையிடல் மற்றும் நிர்வாக தகவலை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. கட்டமைப்பானது நெறிமுறைசார் விழுமியங்கள், சிறந்த கூட்டாண்மை ஆளுகை மற்றும் இடர் நேர்கை முகாமைத்துவ நடைமுறைகளை அங்கீகரிக்கிறது.

### *நியதிச் சட்ட இணக்கப்பாடு*

பணிப்பாளர்கள் சபை, அவர்களது சிறந்த அறிவு மற்றும் நம்பிக்கைக்கமைய, அரசு, பிற ஒழுங்குமுறை தரப்புகள் மற்றும் விமான சேவை நிறுவனத்துடன் தொடர்புடைய அனைத்து ஊழியர்களுக்கும் அனைத்து நியதிச்சட்ட கொடுப்பனவுகளும் சரியான நேரத்தில் செலுத்தப்பட்டுள்ளன என்பதில் திருப்தியடைகின்றார்கள்.



# முகாமைத்துவ
# கலந்துரையாடல்
# மற்றும்
# பகுப்பாய்வு

# முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு

## நிதியியல் மீளாய்வு

தற்போதைய கோவிட்-19 பெருந் தொற்றானது விமான சேவைத் துறையில் பாரிய தீங்கினை விளைவிக்கின்ற தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது, இது தப்பிப் பிழைக்கும் நிலைக்கு கொண்டு வந்துள்ளது மற்றும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸானது காப்பாற்றப்படவில்லை. உலகின் பல பகுதிகளில் உள்நாட்டு விமானப் பயணம் திரும்பியவுடன் பயணிகள் போக்குவரத்தை மீட்டெடுப்பது தொடங்கினாலும், இலங்கையானது புறக்கணிக்கப்பட்ட உள்நாட்டுச் சந்தையைக் கொண்ட ஒரு சிறிய நாடென்பதால் இந்த சந்தையின் மூலம் ஸ்ரீலங்கன் எயார்லைன்சுக்கு எந்தவிதமான முன்னேற்றங்களும் எட்டப்படவில்லை. இந்த சூழமைவுகளில், 2020/21 நிதியாண்டானது விமான சேவை நிறுவன வரலாற்றில் மிகவும் கடினமான ஆண்டாக காணப்பட்டது.

விமான போக்குவரத்து கேள்வியில் வியத்தகு சரிவு மற்றும் அதிகரித்து வரும் கோவிட்-19 தொற்றின் முதல், இரண்டாவது மற்றும் இப்போது மூன்றாவது அலையின் காரணமான சர்வதேச எல்லை மூடல்கள் ஆகியவற்றுடன், விமான சேவை நிறுவனத்தின் மீட்பு நடவடிக்கைகள் எதிர்பார்த்ததை விட மெதுவாக நடைபெற்றது. ஆயினும்கூட, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸானது செலவு சேமிப்பு நடவடிக்கைகள், பண எரிப்பு குறைப்பு, இலங்கை அரசாங்கத்தின் ஆதரவுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட முக்கியமான வருவாய் வாய்ப்புகள் நிலவிய சரக்கு பறத்தல் நடவடிக்கைகளில் கவனம் செலுத்துவதன் மூலம் ஒடுக்கப்பட்ட வருவாயைக் கடந்து செல்ல முடிந்தது.

சரக்கு கப்பல் வருவாயானது, பயணிகள் எண்ணிக்கை கணிசமாகக் குறைக்கப்பட்டதன் விளைவாக பெரிதும் குறைக்கப்பட்ட பயணிகள் விமான அட்டவணையை இயங்க செய்வதன் மூலம் விமான நிறுவனத்திற்கு ஒரு உயிர்நாடியை வழங்கியது. இதன் விளைவாக, மதிப்புமிக்க ஆண்டில் பயணி விமானங்களின் உடல் பகுதியில் கணிசமான பகுதி சரக்குகளைக் கொண்டு சென்றன, இதனால் சரக்கு வருவாய் முதன்முறையாக பயணிகள் வருவாயை விட அதிகமாக இருந்தது.

இருப்பினும், மீளாய்வு ஆண்டானது ஒப்பீட்டளவில் தீங்கு விளைவிக்கும் ஜெட் எரிபொருள் விலைகள் மற்றும் சாதகமான நாணய அசைவுகள் போன்ற ஒப்பீட்டளவில் தீங்கற்ற மேக்ரோ-பொருளாதார நிலைமைகளுடன் தொடங்கிய போதிலும், விமானப் போக்குவரத்து வீழ்ச்சியின் மத்தியில் இத்தகைய ஆதாயங்களால் பெறப்பட்ட நன்மைகள் புறக்கணிக்க முடியாதவை.

இதன் விளைவாக, குழுமமானது 2020/21 நிதியாண்டில் இலங்கை நாணயம் 49,705 மில்லியன் தேறிய இழப்பைப் பதிவு செய்தது, இது முந்தைய நிதி ஆண்டை விட 12.6% அதிகமாகும்.

மேற்கூறிய குழு இழப்புக்கு பங்களித்த முக்கிய செயல்படாத பொருட்கள் பின்வருமாறு.

| | ரூ.மில். |
|---|---|
| நிதிச் செலவு | -35,864 |
| பரிமாற்றல் நட்டம் (செயற்பாட்டு) | -6,339 |
| பிடித்து வைத்தல் வரி (WHT) திருப்பியெழுதப்பட்டவை | +16,433 |

2021 ஆம் ஆண்டின் உள்நாட்டு வருவாய் (திருத்தம்) சட்ட இலக்கம் 10 இயற்றப்பட்டவுடன், 01 ஏப்ரல் 2018 முதல் 31 மார்ச் 2020 வரை பின்னோக்கிய வெளிநாட்டு வழங்குனர்களுக்கான கொடுப்பனவுகளுக்கான பிடித்து வைத்தல் வரி பொறுப்புகளுக்கான நிபந்தனையானது நிதியாண்டு மீளாய்வில் மீள் ஏற்பாடு செய்யப்பட்டது.

**ஜெட் எரிபொருள் விலை அசைவின் தாக்கம்**




*அசைவு:* மந்தமான விமானப் பயணக் கேள்விக்கு மத்தியில் நிதியாண்டின் தொடக்கத்தில் ஜெட் எரிபொருள் விலைகள் கேலன் ஒன்றுக்கு 61 அமெரிக்க டொலரைக் கொண்டிருந்தது. இருப்பினும், விநியோக நடவடிக்கைகளில் ஏற்பட்ட இடையூறுகள் காரணமாக ஜெட் எரிபொருள் விலைகள் உயர்ந்தது, இது ஆண்டு முழுவதும் 172% செங்குத்தான அதிகரிப்புடன் உயர்ந்தது. 2020/21 ஆம் ஆண்டின் இறுதியில், ஜெட் எரிபொருள் விலைகள் கிட்டத்தட்ட கோவிட்-க்கு முந்தைய நிலைகளை எட்டியுள்ளன மற்றும் ஒரு கேலனுக்கு அமெரிக்க டொலர் 166 ஆக இருந்தது (ஆதாரம்: IndexMundi).

*தாக்கம்:* எரிபொருள் முந்தைய ஆண்டின் இயக்கச் செலவில் 29.3% இலிருந்து குறைக்கப்பட்ட ஆண்டின் போது 12.8% ஆகக் குறைக்கப்பட்டதால், பெருந்தொற்றின் ஆரம்ப கட்டங்களில் குறைந்த ஜெட் எரிபொருள் விலைகளின் நன்மையை குழுமம் பெற முடியவில்லை, கணிசமாக குறைந்த எரிபொருள் நுகர்வு மூலம் இயக்கப்படுகிறது, இது ஆண்டுக்கு 72% குறைப்பினைக் கண்டது. இந்த ஆண்டின் இறுதியில் அதிகரித்து வரும் விமான எரிபொருள் விலை விமான நிறுவனத்திற்கு மேலும் சுமையாக இருந்தது.

### பரிமாற்ற வீத அசைவின் தாக்கம்




*அசைவு:* 2020/21 நிதியாண்டின் முதல் பாதியில் அமெரிக்க டொலருக்கு எதிராகப் பாராட்டப்பட்ட இலங்கை ரூபாய், இரண்டாம் பாதிப் பகுதியில் கோவிட்-19 தொற்றால் ஏற்றுமதி மற்றும் சுற்றுலாத் துறைகளில் ஏற்பட்ட அந்நிய செலாவணி வருவாய் சரிவு காரணமாக விரைவான தேய்மானத்தைப் பதிவு செய்தது.. முந்தைய ஆண்டின் 8% தேய்மானத்துடன் ஒப்பிடுகையில், ஆண்டின் விளைவாக தேய்மானம் 6% ஆக காணப்பட்டது.

*தாக்கம்:* பிந்தைய பாதியில் முக்கியமாக கடன் மற்றும் குத்தகைகள் உட்பட வெளிநாட்டு நாணயப் பொறுப்புகளின் பரிமாற்றத்திலிருந்து எழுந்த சாதகமற்ற நாணய அசைவானது இலங்கை ரூபாய் 19,673 மில்லியன் பரிமாற்ற இழப்பை ஏற்படுத்தியது, இது குழுவின் அடிமட்டத்தை 40% வரை ஆண்டுக்கான அதன் தேறிய நட்டமாக மோசமாக பாதித்தது

### குழுமத்தின் உழைப்புக்கள்

ஒரு வருடத்திற்குப் பிறகு, அதன் மிகக் குறுகிய உடல் அமைப்பினைக் கொண்ட விமானமானது, அதே நேரத்தில் பரந்த உடல் அமைப்பினைக் கொண்ட விமானம் மிகக் குறைந்த பயணிகள் சுமை காரணி மூலம் இயங்குகிறது, இந்த குழு 50,929 மில்லியன் வருவாயைப் பதிவு செய்தது, இது ஆண்டுதோறும் 72.3% வீழ்ச்சியை பிரதிபலிக்கிறது. சரக்கு வருவாய், குழு வருவாயில் 53.9% ஆகும், இது குழுமத்தின் வருவாயில் முக்கிய பங்களிப்பாளராக உள்ள வரலாற்றைக் குறிக்கின்றது.

### வருவாய் போக்கு இலங்கை ரூபா மில்லியனில்




### தொகுப்பு




### ஆக்க அமைவு




பயணிகள் விமானப் போக்குவரத்திற்கான தேவை வியத்தகு வீழ்ச்சியைச் சமாளிக்க பல மூலோபாயங்கள் அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும், 2020 ஆம் ஆண்டிலிருந்து ஒட்டுமொத்த பயணிகளின் எண்ணிக்கை 96.8% ஆல் குறைந்துள்ளது.

இருப்பினும், ஆண்டுக்கு ஆண்டு குறைப்பு 50.5% குறைக்கப்பட்ட சரக்கு டன்களில் பிரதிபலித்தது, குறைந்த எண்ணிக்கையிலான விமானங்களின் மத்தியில் குறைந்த கொள்ளளவு காரணமாக, சரக்குகளின் பங்களிப்பு 78% ஆக இருந்தது. முந்தைய நிதியாண்டில், ஒரு விமானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்ட சராசரி சரக்கு டன், 2020/21 இல் 23.3% குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் கண்டுள்ளது, இது 2019/20 இல் 7.2% ஆக இருந்தது. இதன் விளைவாக, சரக்கு வருவாய் முந்தைய நிதியாண்டின் 15,905 மில்லியன் ரூபாயிலிருந்து 27,454 மில்லியன் ரூபாயை எட்டியது.

# முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு

ஏற்றிச்செல்லப்பட்ட பயணிகள் '000




ஏற்றிச்செல்லப்பட்ட சரக்கு டொன்களில்




**செலவினம்**

2021 ஆம் ஆண்டில், குழுமத்தின் செலவுகள் இலங்கை ரூபாய் 118,314 மில்லியன் ஆகும், இது 2020 ஆம் ஆண்டிற்கான இலங்கை ரூபாய் 229,368 மில்லியன் செலவுகளிலிருந்து 48.4% குறிப்பிடத்தக்க குறைவை பிரதிபலிக்கிறது, கோவிட் -19 தொடர்பான கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் விமான பயண செயற்பாட்டு அளவில் 68% வீழ்ச்சி ஏற்பட்டது. குழுமத்தின் செலவுகளின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது

| | 2021 | | 2020 | | வேறுபாடு | |
|---|---|---|---|---|---|---|
| | பெறுமதி (இ.ரூபாய் மில்லியனில்) | பங்களிப்பு % | பெறுமதி (இ.ரூபாய் மில்லியனில்) | பங்களிப்பு % | பெறுமதி (இ.ரூபாய் மில்லியனில்) | % |
| விமான எரிபொருள் செலவு | 10,569 | 12.8 | 55,328 | 29.3 | 44,759 | 80.9 |
| பணியாட்கள் செலவு | 17,112 | 20.8 | 22,903 | 12.1 | 5,791 | 25.3 |
| விமான நிலையம் வழியாக மற்றும் பயணிகள் செலவுகள் | 7,308 | 8.9 | 25,277 | 13.4 | 17,969 | 71.1 |
| விமானப் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் செலவுகள் | 13,695 | 16.6 | 22,820 | 12.1 | 9,125 | 40.0 |
| பெறுமானத்தேய்வு/ பெறுமானக்குறைப்பு | 16,745 | 20.3 | 19,392 | 10.3 | 2,647 | 13.6 |
| குறுங்கால குத்தகை மீதான வாடகை (விமானவூர்தி மற்றும் உதிரி இயந்திரங்கள்) | 2,265 | 2.7 | 1,394 | 0.7 | (871) | (62.5) |
| விற்பனை சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பரச் செலவுகள் | 2,065 | 2.5 | 14,550 | 7.7 | 12,485 | 85.8 |
| விமானப் பணிக்குழு செலவினங்கள் | 1,680 | 2.0 | 6,557 | 3.5 | 4,877 | 74.4 |
| பரிமாற்றல் நட்டம் - செயற்பாட்டு | 6,339 | 7.7 | 5,270 | 2.8 | (1,069) | (20.3) |
| ஏனைய செயற்பாட்டுச் செலவினங்கள் | 4,671 | 5.7 | 15,209 | 8.1 | 10,538 | 69.3 |
| **மொத்த செயற்பாட்டுச் செலவினங்கள்** | **82,450** | **100.0** | **188,700** | **100.0** | **106,251** | **56.3** |
| நிதிச் செலவு (ஏனையவை) | 35,864 | | 40,667 | | 4,803 | 11.8 |
| **மொத்த செலவினங்கள்** | **118,314** | | **229,368** | | **111,054** | **48.4** |

குறைக்கப்பட்ட செயற்பாடுகளால் இயக்கப்படும் எரிபொருள் அளவின் 72% வீழ்ச்சியானது எரிபொருள் விலை இலங்கை ரூபாய் 39,859 மில்லியனால் குறைக்கப்பட்டாலும், எரிபொருள் விலை சராசரியாக 2019/20 ல் USC 203 இலிருந்து 2020/21 இல் USC 131 ஆக குறைந்துள்ளது. இலங்கை ரூபாய் 5,814 மில்லியன் எரிபொருள் செலவில் மேலும் குறைவு ஏற்பட்டது. எவ்வாறாயினும், அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் வீழ்ச்சியினால் எரிபொருளின் பாதகமான தாக்கம் இலங்கை ரூபாய் 914 மில்லியன் ஆகும்.

விமான எண்ணிக்கை மற்றும் பயணிகளின் எண்ணிக்கை குறைந்து, விமான நிலையம் மற்றும் பயணிகளின் செலவுகள் மற்றும் விற்பனை, சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பர செலவுகள் முறையே 71.1% மற்றும் 85.8% குறைந்துள்ளது.

பணியாளர் செலவுகள் 74.4% குறைக்கப்பட்டன, முக்கியமாக செயல்பாடுகள் குறைக்கப்பட்டதால். மேலும், முக்கியமாக குறைந்த பயன்பாடு காரணமாக 2020 இல் இலங்கை ரூபாய் 22,820 மில்லியன் உடன் ஒப்பிடும்போது விமானப் பராமரிப்பு மற்றும் பழுதுபார்க்கும் செலவுகள் 2021 ஆம் ஆண்டில் இலங்கை ரூபாய் 13,695 மில்லியனாகக் குறைந்தது.

விமானப் போக்குவரத்து வருவாய் குறைவதால் ஏற்படும் இழப்பைக் குறைக்க, குத்தகைதாரர்களுடனான விரிவான பேச்சுவார்த்தை மூலம் குத்தகை ஒப்பந்தங்களை மறுசீரமைப்பதன் மூலம் விமான குத்தகை வாடகைகளைக் குறைக்க ஸ்ரீ.எ நடவடிக்கை எடுத்துள்ளது, இதன்

விளைவாக 2020/21 நிதி ஆண்டுக்கான சேமிப்பு இலங்கை ரூபாய் 3,454 மில்லியன் ஆக காணப்பட்டது. (அமெரிக்க டொலர் 18 மில்லியன்) எதிர்பார்த்த வருடாந்திர சேமிப்பு அமெரிக்க டொலர் 27.5 மில்லியன் ஆகும்.

ஏனைய செலவுகள் முந்தைய நிதியாண்டுடன் ஒப்பிடும்போது 69.3% ஆல் குறைந்துள்ளது, முக்கியமாக 2019/20 இல் வழங்கப்பட்ட இலங்கை ரூபாய் 8 மில்லியன் (54%) இன் பிடித்து வைத்தல் வரி செலவு இல்லாததால். கூடுதலாக, தகவல் தொழில் நுட்ப, உற்பத்தி மேம்பாடு, ஆதனங்கள் மற்றும் தளவாடங்கள், விமான சேவை செயற்பாடுகள் மற்றும் வருவாய் நிர்வாக பகுதிகள் தொடர்பான மூன்றாம் தரப்பு ஒப்பந்தங்களின் மீள் பேச்சுவார்த்தையின் விளைவாக, 2020/21 நிதி ஆண்டில் இலங்கை ரூபாய் 1,510 மில்லியன் (அமெரிக்க டொலர் 8 மில்லியன) சேமிக்கப்பட்டது.

மீளாய்வு ஆண்டு ஊழியர்களின் செலவானது 25.3% குறைந்து சம்பளம்/கொடுப்பனவுகள் மற்றும் ஒப்பந்த ஊழியர்களை ஊதியமற்ற விடுப்பில் வைப்பது மற்றும் வெளிநாட்டு ஊழியர்களின் சேவைகளை நிறுத்துதல் போன்ற முயற்சிகள் குறைக்கப்பட்டன. இந்த பயிற்சிகளின் மொத்த சேமிப்பு இலங்கை ரூபாய் 5,791 மில்லியன் (அமெரிக்க டொலர் 30 மில்லியன்) ஆகும். மேலும், ஒரு தன்னார்வ ஓய்வூதிய திட்டம் (VRS) அறிமுகப்படுத்தப்பட்டது, இது இலங்கை ரூபாய் 432 மில்லியன் (அமெரிக்க டொலர் 2.3 மில்லியன்) இன் தோராயமான வருடாந்திர சேமிப்பை வழங்கும்.

### காசு நிலைமை

நிச்சயமற்ற சூழல் மற்றும் காசு உட்பாய்ச்சலுடன் தொடர்புடைய தாமதங்களின் பின்னணியில், குழுமத்தில் நிதி ஆண்டு முழுவதும் காசு எதிர்மறையாக இருந்தது, அங்கு செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து தேறிய காசு உட்பாய்ச்சல்கள் நேர்மறை இலங்கை ரூபாய் 26,130 மில்லியனிலிருந்து எதிர்மறை இலங்கை ரூபாய் 30,685 மில்லியன் ஆக குறைந்தது, மேலும் இது 217.4% சரிவை பிரதிபலிக்கிறது.

விமான குத்தகை நிறுவனங்களுடனான பேச்சுவார்த்தைகள் 18-24 மாதங்கள் வரை திருப்பிச் செலுத்தும் காலத்துடன் 80.24 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புள்ள குத்தகை மற்றும் பராமரிப்பு இருப்பு கொடுப்பனவுகளை ஒத்திவைக்க ஸ்ரீ.எ க்கு உதவியது. இது, ஒத்திவைக்கப்பட்ட கட்டணத் திட்டங்கள் மற்றும் நிதியாண்டில் மற்ற முக்கிய வழங்குனர்களுடனான தள்ளுபடிகள் ஆகியவற்றுடன் 35 மில்லியன் அமெரிக்க டொலர்கள், நிதித் திட்டமிடலில் ஒரு உறுதியை அளித்தது.

ஆண்டின் போது ஏற்றுக்கொள்ளப்பட்ட மேலதிக காசு உட்பாய்ச்சல் நிர்வாக மூலோபாயம் கிரெடிட் சூயிஸ் வங்கி AG யிலிருந்து பெறப்பட்ட கடனை மறு சீரமைப்பதாகும். மூலதனத் தொகையான 16.67 மில்லியன் அமெரிக்க டொலர் ஏப்ரல் முதல் செப்டம்பர் 2020 வரை 06 மாதங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இலங்கை அரசாங்கம் வழங்கிய பெரும் ஆதரவாக அமெரிக்க டொலர் 75 மில்லியன் கடன் வசதிகள் மற்றும் சமபங்கு முதலீடு அமெரிக்க டொலர் 27.73 மில்லியனை வழங்கியது. (இலங்கை ரூபாய் 150 மில்லியனுக்கு சமம்),மீளாய்வு செய்யப்பட்ட நிதியாண்டில் விமான நிறுவனத்தின் உடனடி சுமையை குறைத்தது. மேலும், அமெரிக்க டொலர் 18 மில்லியனின் சமபங்கு முதலீடு (இலங்கை ரூபாய் 90.5 ரூபாய்க்கு சமம்) ஏப்ரல் 2021 இல் பெறப்பட்டது, இலங்கை அரசாங்கத்தின் மூலம் மொத்த அங்கீகரிக்கப்பட்ட மீள் மூலதனமயமாக்கலின் இரண்டாவது தவணையாக ஸ்ரீ.ஏக்கு 500 மில்லியன் கிட்டியது.

### நிதியியல் நிலைமை.

குழுமத்தின் மொத்த சொத்துக்கள் 31 மார்ச் 2021 நிலவரப்படி இலங்கை ரூபாய் 157,883 மில்லியனாக இருந்தது, முக்கியமாக இலங்கை ரூபாய் 11,554 மில்லியன் மதிப்புள்ள குத்தகைகளை மறுசீரமைத்தல் மற்றும் இலங்கை ரூபாய் 16,745 மில்லியனை தேய்மானம் மற்றும் தள்ளுபடி செய்தல்.

**சொத்துக்கள் இலங்கை ரூபாயில்**




## செயற்பாட்டு மீளாய்வு

### வருவாய் முகாமைத்துவம்

முன்னோடியில்லாத வகையில் தொற்றுநோய் பரவல் மற்றும் அதன் விளைவாக விமானப் போக்குவரத்திற்கான கேள்வியில் விரிவான வீழ்ச்சி 2020/21 நிதியாண்டை விமான நிறுவனத்திற்கு மிகவும் சவாலான கட்டமாக மாற்றியது. 2020/21 நிதியாண்டின் இறுதியில், நாட்டின் சர்வதேச எல்லைகள் மூடப்பட்டதன் விளைவில் ஏற்பட்ட தாக்கம் காரணமாக, 2019/20 நிதியாண்டில் 5.5 மில்லியனுக்கும் அதிகமான பயணிகளுடன் ஒப்பிடும்போது ஸ்ரீ.எ இன் மொத்த பயணிகள் கொண்டு செல்லல் 167,000 ஆக மட்டுமே காணப்பட்டது. அதன்படி வழங்கப்படும் பயணிகள் கொள் திறன் 79% வரை குறைக்கப்பட்டது..

2020/21 இன் போது ஸ்ரீ.எ அதன் பரந்த விமான திறனைப் பயன்படுத்தும் நோக்கத்துடன் விமானப் சரக்குகளுக்கான வளர்ந்து வரும் சந்தை வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ள முயன்றது, இது பெரும்பாலும் பயணிகள் சேவைகளுக்கான கேள்வி இல்லாததால் பெருமளவில் தேவையற்றதாக இருந்தது. இதேபோன்ற சந்தை நோக்கங்களைக் கொண்ட கொண்டு செல்லுனர்களுக்கிடையிலான கடும் போட்டி காரணமாக, ஸ்ரீ.எ விரைவாகச் செயற்பட வேண்டியிருந்தது மற்றும் சரக்கு செயற்பாடுகளுக்கான தேவை ஏற்பட்ட சந்தைகளில் திறனைப் பயன்படுத்த வேண்டும். இந்த சந்தைகள் ஏற்கனவே இருக்கும் மற்றும் புதிய இடங்களை உள்ளடக்கியது. சிட்னி, சைகான், பிராங்பேர்ட், ஹாங்காங், மிலன் மற்றும் பாரிஸ் ஆகியவற்றில் சரக்கு வணிக வாய்ப்புகளுக்கான திறனை அடிப்படையாகக் கொண்டு புதிய செயல்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டன. அத்தியாவசிய பயணிகள் இயக்கங்களுக்கு சேவை செய்வதற்காக, சரக்கு நோக்கங்களுக்காக இயக்கப்படும் பெரும்பாலான விமானங்களில் பயணிகள் நடவடிக்கைகளுக்கான மட்டுப்படுத்தப்பட்ட திறன் வழங்கப்பட்டது. கூடுதலாக, சியோல் ஆனது இலங்கை தொழிலாளர் படையினை வழக்கமான திருப்பி அனுப்ப வசதியாக அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்த வருடத்தில், சிக்கித் தவிக்கும் இலங்கை பிரஜைகளைக் கொண்டுவருவதற்காக விமான நிறுவனம் பல தற்காலிகமாகத் திருப்பி பெறும் விமானங்களை இயக்கியதுடன், சர்வதேச

# முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு

வாடிக்கையாளர்களின் சார்பாக பட்டயச் செயற்பாடுகளையும் நடத்தியது. கூடுதலாக, ஐக்கிய இராச்சியம் (சீன நாட்டவர்கள்) மற்றும் ஆஸ்திரேலியா (இந்தியர்கள்) ஆகியவற்றிலிருந்து வெளிநாட்டினரை அந்தந்த நாட்டுக்கு திருப்பி அனுப்ப சிறப்பு விமானங்கள் இயக்கப்பட்டன.

இந்த சூழ்நிலையில், விமான நிறுவனம் 2020/21 நிதியாண்டில் 96.6 மில்லியன் அமெரிக்க டொலர் (இலங்கை ரூபாய் 18.4 பில்லியன்) பயணிகள் வருவாயை அறிவித்தது, அதே நேரத்தில் மொத்த விமான போக்குவரத்து வருவாய் 2019/20 ல் இருந்து மொத்தமாக 74% சரிவுடன். அமெரிக்க டொலர் 243.4 மில்லியனாக (இலங்கை ரூபாய் 45.88 பில்லியன்) இருந்தது.

கோவிட்-க்குப் பிந்தைய பயணிகளின் கேள்வியை மீட்பதில் நிச்சயமற்ற நிலை நீடிப்பதால் மற்றும் நம்பகமான சந்தை முன்னறிவிப்புகள் இல்லாததால், ஸ்ரீ.எ தரை யதார்த்தங்களை உன்னிப்பாகக் கண்காணிக்க விரும்புகிறது மற்றும் விமான சிவில் அமைப்பு (ICAO) 2021/22 மற்றும் அதற்கு அப்பால் உள்ள கண்ணோட்டத்தை நியாயமான மதிப்பீடு செய்ய சர்வதேச விமான போக்குவரத்து சங்கம் (IATA) மற்றும் சர்வதேச சிவில் அமைப்பு (ICAO) போன்ற வர்த்தக அமைப்புகளின் சுயாதீன நுண்ணறிவுகளால் வழிநடத்தப்படுகிறது..

**ஓருலகம் (வன்வேல்ட்)**

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் 1 மே 2014 இல் ஓருலக கூட்டணியில் இணைந்தது.இக் கூட்டணியின் அங்கத்தவராக, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் அதன் பயணிகளுக்கு உலகம் பூராவுமுள்ள 1,100 பயண இலக்குகளுக்கு பிரயாணம் செய்வதற்கான வாய்ப்பினை வழங்குகின்றது. இந்திய துணைக்கண்டத்திலேயே இந்த பிரசித்திபெற்ற கூட்டணிக்குள் இணைந்த முதலாவது விமான நிறுவகம் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் ஆகும் என்பதுடன் அலஸ்கா எயார்லைன்ஸ், அமெரிக்கன் எயார்லைன்ஸ்,பிரிட்டிஸ் எயார்லைன்ஸ், கெத்தே பசிபிப், பின்எயார், ஐபீரியா எயார்லைன்ஸ், ஜப்பான் எயார்லைன்ஸ், லாட்டாம், மலேஷியா எயார்லைன்ஸ், குவான்ட்டாஸ், கட்டார் எயார்வேஸ், றோயல் எயார் மறொக், றோயல் ஜோர்டானியன் மற்றும் எஸ்7 எயார்லைன்ஸ் போன்ற விமான நிறுவன வணிகத்தின் பாரிய மற்றும் உயர்மதிப்புடைய வர்த்தகச் சின்னங்களுடன் அங்கத்துவத்தினை பகிர்கின்றது. 2021 இல் அலஸ்கா எயார்லைன்ஸானது கூட்டணியில் புதிதாக இணைந்து கொண்டது.

கூட்டணியின் ஓர் அங்கத்தவராக, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் அதன் வலையமைப்பினை வளர்ச்சி செய்யக்கூடியதாகவும், அதன் வர்த்தகச் சின்னத்தின் பெறுமதியினை ஓர் உலகளாவிய தளத்தினில் ஆக்கப்பயனை பெறக்கூடியதாகவும், அதன் விசுவாசத் திட்டத்தினை கட்டியெழுப்பவும் அறிவு மாற்றல்களின் ஓர் அங்கமாகவும் இருக்கக்கூடியதாயுள்ளது. ஓருலகம் கூட்டணியினுள் அதன் பிரவேசத்தினைத் தொடர்ந்து, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், நான்கு ஓருலகம் அங்கத்துவ விமான நிறுவனங்கள் உள்ளடங்களாக ஆறு விமான நிறுவனங்களுடன் குறியீட்டு பகிர்வு பங்குடைமையில் உள்நுழையக் கூடியதாயிருந்தது.

ஓருலகம் அடிக்கடி பறக்கும் அங்கத்தவர்களுக்கு பின்வரும் நலன்கள் வழங்கப்படுகின்றன, வணிக வகுப்பு பயண ஆயத்திற்கான அணுக்கம், காத்திருப்பு பட்டியலில் முன்னுரிமை, முன்னுரிமை விமானமேறுதல், மேலதிக பொதிப் படி மற்றும் உலகளவில் பரந்து காணப்படும் 550 ஓய்விடங்களுக்கான அணுக்கம் என்பன இவற்றுள் சிலவாகும். ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் வாடிக்கையாளர்களுக்கு கிடைக்கும் இந்த கூட்டணியூடான கணிசமான நன்மைகளில் பிரதானமானவற்றில் ஒன்றாக அனைத்து கூட்டணி அங்கத்தவர்களது விமானங்களில் அடிக்கடி பறக்கும் மைல்களை உழைக்கவும் பயன்படுத்தவும் இயலுமையாயிருப்பதாகும்.

**உலகளாவிய விற்பனை மற்றும் விநியோகம்**

முந்தைய நிதியியல் ஆண்டானது உலகளாவிய விற்பனையில் சந்தேகத்துக்கிடமற்ற வகையில் பாரிய சவால்மிக்க ஓர் ஆண்டாக காணப்பட்டது. உலகளாவிய தொற்றுநோய் பரவியதால், கோவிட் -19 பரவுவதைக் கட்டுப்படுத்தும் நோக்கில் அனைத்து பிராந்தியங்களின் கட்டுப்பாட்டாளர்கள் மற்றும் நாடுகளால் விதிக்கப்பட்ட பயணக் கட்டுப்பாடுகள் மற்றும் சுகாதார நடவடிக்கைகள் தொடர்வதால், இந்த ஆண்டுக்கான விற்பனை நடவடிக்கைகள் குறித்த வருங்காலத் திட்டங்கள் முற்றிலும் பாதிக்கப்பட்டன. உள்வரும் சுற்றுலா சந்தை தொடர்ந்து மிகக் குறைவாக இருந்தது மற்றும் பயணத் தொழிலின் அனைத்து இணைந்த சேவை வழங்குநர்கள் உட்பட அனைத்து பங்குதாரர்களுக்கும் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியது.

ஆயினும்கூட, பயணத்தின் ஒரு புதிய சகாப்தத்தின் தொடக்கமாகத் தோன்றுவதற்காக தன்னைப் பழக்கப்படுத்திக்கொள்ள புதிய வழிகளை ஆராய்வதில் அதன் மூலோபாயங்களை சரிசெய்ததால், மாற்றியமைக்கும் விமானத்தின் திறனை வெளிப்படுத்தியது. திட்டமிடப்பட்ட பயணிகள் நடவடிக்கைகள் முந்தைய ஆண்டை விட 89% குறைக்கப்பட்டிருந்தாலும், விற்பனை இலாகாவானது திருப்பி அனுப்பும் பயணிகள் மற்றும் தனியார் வணிகங்களுக்கான திட்டமிடப்படாத பயணிகள் பட்டயங்களுக்கு இடமளிக்கிறது, இது விமான நிறுவனத்தின் வருவாய் துறைக்கு ஒரு நம்பிக்கைக்குரிய வணிக வாய்ப்பை உருவாக்கியது.

ஏனைய தகவல்கள் கம்பனியின் ஆண்டறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள தகவல்களை உள்ளடக்குகின்றது, ஆனால் நிதிக் கூற்றுக்கள் மற்றும் அதனிலான எனது கணக்காய்வாளரது அறிக்கை என்பவற்றை உள்ளடக்கவில்லை. இவற்றை நான் இந்த கணக்காய்வாளரது அறிக்கையின் திகதிக்கு முன்னர் பெற்றுள்ளேன். ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்பாயுள்ளது.

நிதிக் கூற்றுக்களிலான எனது அபிப்பிராயமானது ஏனைய தகவல்களை உள்ளடக்காததுடன் நான் இவற்றில் எந்தவிதமான உத்தரவாத முடிவினையும் வெளிப்படுத்தவில்லை.

நிதிக் கூற்றுக்களில் எனது கணக்காய்வு தொடர்பாக எனது பொறுப்பு மேலே இனங்காணப்பட்ட ஏனைய தகவல்களை வாசித்தல், மற்றும் அவ்வாறு செய்யும்போது ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுக்களில் அல்லது கணக்காய்வில் நான் பெற்றுக்கொண்ட அறிவில் பொருண்மையான முரண்பாடுடையதாக உள்ளதா அல்லது இல்லையெனில் பொருண்மையானளவு தவறாகக் கூறப்பட்டுள்ளதா என கருதவேண்டியுள்ளது. இந்த கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக்கொண்ட ஏனைய தகவல்களில் மேற்கொண்ட வேலையின் அடிப்படையில் இந்த ஏனைய தகவல்களில் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் உள்ளன என்று நான் முடிவுக்குவந்தால்; நான் அந்த உண்மையினை அறிக்கையிடுவதற்கு வேண்டப்பட்டுள்ளேன். இதுதொடர்பாக அறிக்கையிடுவதற்கு எனக்கு ஏதும் இல்லை.

### *1.5 முகாமைத்துவத்தின் மற்றும் நிதிக் கூற்றுக்களின் ஆளுமைக்கு பொறுப்பாயுள்ளோரின் பொறுப்புக்கள்*

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய ஓர் மெய்யானதும் மற்றும் நியாயமானதுமான கருத்தினை வழங்குகின்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முகாமைத்துவம் பொறுப்பாயுள்ளதுடன் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதனை இயலுமையாக்குவதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளக கட்டுப்பாடுகள் என்பவற்றுக்கும் முகாமைத்துவம் பொறுப்பாயுள்ளது.

நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதில் முகாமைத்துவமானது ஓர் நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சியினை தொடர்வதற்கான கம்பனியின் மற்றும் குழுமத்தின் ஆற்றலை மதிப்பிடுவதற்கும், நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி தொடர்பான விடயங்களை வெளிப்படுத்துவதற்கும், முகாமைத்துவம் கம்பனியினை அல்லது குழுமத்தினை கலைப்பதற்கு அல்லது செயற்பாடுகளை நிறுத்துவதற்கான நோக்கத்தைக்

# சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

கொண்டிருந்தாலன்றி அல்லது யதார்த்தமான எவ்வித மாற்றுவழியுமின்றி அவ்வாறு செயற்படவேண்டியிருந்தாலன்றி, உகந்தவாறு நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி அடிப்படையிலான கணக்கீட்டினை பயன்படுத்துவதற்கும் பொறுப்பாயுள்ளது.

ஆளுமையினை பொறுப்பேற்றோர் கம்பனி மற்றும் குழுமத்தின் நிதியியல் அறிக்கையிடல் செயல்முறையினை மேற்பார்வை செய்வதற்கு பொறுப்பாளியாயுள்ளார்கள்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 16 (1) இற்கமைய கம்பனி மற்றும் குழுமமானது, கம்பனியின் மற்றும் குழுமத்தின் வருடாந்த மற்றும் காலாகால நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதனை இயலுமையாக்குவதற்காக அதன் அனைத்து வருவாய், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றி முறையான புத்தகங்கள் மற்றும் பதிவுகளை பராமரிக்குமாறு வேண்டப்படுகின்றது.

### *1.6 நிதிக் கூற்றுக்களது கணக்காய்விற்கு கணக்காய்வாளர்களது பொறுப்புக்கள்*

நிதிக் கூற்றுக்கள் முழுமையாக ஏதேனும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏதேனும் பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதா என்பது பற்றி சாதாரண உறுதிமொழியினை பெற்றுக்கொள்வதும், எனது அபிப்பிராயத்தினை உள்ளடக்கிய ஓர் கணக்காய்வு அறிக்கையினை வழங்குவதும் எனது நோக்கமாகும். சாதாரண உறுதிமொழி என்பது ஓர் உயர்மட்டத்திலான உறுதிமொழி என்பதுடன், ஆனால் இது இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட ஓர் கணக்காய்வானது எந்நேரமும் ஓர் கருதத்தக்க பிறழ் கூற்றினை, அவ்வாறு ஒன்று காணப்படுமாயின், இனங்காணும் என்ற உறுதிமொழியல்ல. பிறழ் கூற்றுக்கள் மோசடி அல்லது தவறிலிருந்து எழலாம் என்பதுடன், அவை தனியாக அல்லது கூட்டாக, இந்த நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் பயனாளிகளின் பொருளாதார தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்தக்கூடும் என்று சாதாரணமான எதிர்பார்ப்பு காணப்படுமாயின் அவை கருதத்தக்கதாக கருதப்படும்.

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வின் ஓர் பகுதியாக, நான் கணக்காய்வு முழுவதும் தொழில்முறை தீர்ப்பினை உபயோகித்தும் தொழில்முறை ஐயவாதத்தினையும் பராமரித்தேன், அத்துடன் நான்,

- நிதிக் கூற்றுக்கள் மோசடி அல்லது தவறின் காரணமாக ஏற்படும் கருதத்தக்க பிறழ் கூற்றுக்களது இடர்நேர்கைகளை இனங்கண்டு மதிப்பிடுதல் மற்றும் அந்த இடர்நேர்கைகளுக்கு மறுமொழியளிக்கும் கணக்காய்வு செயற்பாடுகளை வடிவமைத்து செயற்படுத்தல் மற்றும் எனது கணக்காய்வு அபிப்பிராயத்தினை வழங்குதற்கான அடிப்படைக்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் என்பதாகும். ஓர் தவறின் விளைவாக எழக்கூடிய இடர்நேர்கையிலும் பார்க்க மோசடியின் விளைவாக ஓர் கருதத்தக்க பிறழ் கூற்றினை இனங்காணாத இடர்நேர்கையானது அதிகமாகும். ஏனெனில், மோசடியானது கூட்டுச்சதி, போலி ஆவணம், வேண்டுமென்றே விடுபடல், பிறழ் கூற்றுக்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டினை மேலாணை செய்தல் போன்றவற்றை உள்ளடக்கும்.
- கம்பனியின் மற்றும் குழுமத்தினது உள்ளகக் கட்டுப்பாட்டின் பயனுறுதித்தன்மையில் ஓர் அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்கன்றி, சூழ்நிலைகளுக்கு பொருத்தமான கணக்காய்வு செயல்முறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்விற்கு பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாடுகளில் ஓர் புரிந்துணர்வினை பெற்றுக்கொள்ளல்.
- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளின் பொருந்துதன்மை மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயமானதன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொண்ட இது தொடர்பான வெளிப்படுத்தல்களை மதிப்பீடு செய்தல்.
- முகாமைத்துவத்தின் நிறுவன தொடர்நிலை அடிப்படையிலான கணக்கீட்டுப் பயன்பாட்டின் பொருந்துதன்மை மற்றும் பெற்றுக்கொண்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் நிறுவனத்தொடர்நிலையினை தொடர்வதற்கான குழுமத்தின் ஆற்றலில் கருதத்தக்களவு சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்பான கருதத்தக்களவு நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என்பவற்றின் அடிப்படையில் நிறைவுசெய்தல். ஓர் கருதத்தக்களவு நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது என நான் நிறைவுசெய்தால், நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் நான் கவனத்தை ஈர்க்க வேண்டியுள்ளது அல்லது அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதுமானதின்றி காணப்பட்டால் எனது அபிப்பிராயத்தினை திருத்தவேண்டியுள்ளது. எனது கணக்காய்வாளரது அறிக்கை திகதியிடப்பட்ட நாள் வரைக்குமான கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் எனது நிறைவுறுதல்கள் காணப்படும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள் குழுமமானது நிறுவனத் தொடர்நிலையினை தொடர்வதனை நிறுத்த காரணமாயிருக்கலாம்.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்களாக,நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த காட்சியளிப்பு, கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தினை மதிப்பீடு செய்வதுடன், நிதிக் கூற்றுக்கள், அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளது நியாயமான காட்சியளிப்பினை அடையும் விதத்தில் பிரதிநிதித்துவம் செய்கின்றதா என்பதையும் மதிப்பீடு செய்கின்றது.
- ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் ஓர் அபிப்பிராயத்தினை தெரிவிப்பதற்கு குழுமத்தினுள் காணப்படும் நிறுவனங்கள் அல்லது வணிக நடவடிக்கைகளது நிதியியல் தகவல் தொடர்பான போதுமையான பொருந்துதன்மையுடைய கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். குழுமத்தின் கணக்காய்வினது வழிநடத்தல், மேற்பார்வை மற்றும் செயற்திறனுக்கு நான் பொறுப்பாளியாயுள்ளேன்.

ஆளுமை தொடர்பாக பொறுப்பாளிகளுடன் ஏனைய விடயங்களுக்கிடையில்,எனது கணக்காய்வின்போது உள்ளகக் கட்டுப்பாடுகளில் நான் கண்டுபிடித்த கருதத்தக்க குறைகள் உள்ளடங்களாக கருதத்தக்க கணக்காய்வு கண்டுபிடிப்புகள் குறித்து தொடர்பாடல்களை மேற்கொண்டேன்

## 2. ஏனைய சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

***2.1*** 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் என்பன பின்வரும் தேவைப்பாடுகளுக்காக குறிப்பிட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றது.

**2.1.1** கணக்காய்விற்கு தேவையான அனைத்து தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான் பெற்றுள்ளேன் மற்றும் எனது பரிசீலனையிலிருந்து, 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 163 (2) (d) மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (a) பிரிவின் தேவைக்கேற்ப கம்பனி முறையான கணக்கீட்டு பதிவுகளை வைத்துள்ளதான தோற்றத்தை வழங்குகின்றது.

**2.1.2** கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகியுள்ளது.

**2.1.3** 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (d) (iii) பிரிவின் தேவைக்கேற்ப சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் முன்னைய வருடத்திற்கு ஒத்ததாக காணப்படுகின்றது.

**2.1.4** 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (d) (iv) பிரிவின் தேவைக்கேற்ப காட்சிப்படுத்தப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை உள்ளடக்குகின்றது.

***2.2*** செயலாற்றப்பட்ட செயல்முறைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகளின் அடிப்படையில், இவை கருதத்தக்க விடயங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன், எனது கவனத்திற்கு பின்வருவன எதுவும் வரவில்லை.

**2.2.1** 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (d) பிரிவின் தேவைக்கேற்ப வழக்கமான வணிக நிகழ்வுகளுக்கு அப்பால் கம்பனியினது ஆளுமை அங்கத்தின் யாரேனும் அங்கத்தவர் கம்பனியினால் செய்து கொள்ளப்பட்ட எவ்வித ஒப்பந்தத்திலும் ஏதேனும் நேரடியான அல்லது மறைமுகமான நலன்களை கொண்டிருந்தார் என குறிப்பிடுவதற்கு

**2.2.2** 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (f) பிரிவின் தேவைக்கேற்ப ஏதேனும் பிரயோகிக்கத்தக்க எழுத்துமூல சட்டம்,கம்பனியின் ஆளுமை அங்கத்தினால் வழங்கப்பட்ட பொதுவான மற்றும் விசேட பணிப்புரைகளுக்கு கம்பனி இணக்கப்பாடு காணவில்லை என குறிப்பிடுவதற்கு

**2.2.3** 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (g) பிரிவின் தேவைக்கேற்ப கம்பனியானது அதன் அதிகாரங்கள், செயலாற்றுகைகள் மற்றும் கடமைகளை நிறைவேற்றவில்லை என குறிப்பிடுவதற்கு

**2.2.4** 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (h) பிரிவின் தேவைக்கேற்ப கொடுக்கப்பட்ட கால எல்லைக்குள் மற்றும் பிரயோகிக்கத்தக்க சட்டங்களுக்கு ஏற்றாற்போல் கம்பனியின் வளங்கள் சிக்கனமாக,திறன்பட மற்றும் பயனுறுதிமிக்க விதத்தில் பெறப்படவில்லை மற்றும் பயன்படுத்தப்படவில்லை என குறிப்பிடுவதற்கு

**டபிள்யூ.பி.சி விக்கிரமரத்ன**
*கணக்காய்வாளர் அதிபதி*

# நிதி நிலைமைக் கூற்று

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | குறிப்பு | குழுமம் 2021 ரூபா மில்லி. | 2020 ரூபா மில்லி. | கம்பனி 2021 ரூபா மில்லி. | 2020 ரூபா மில்லி. |
|---|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | | |
| **நடைமுறையல்லா சொத்துக்கள்** | | | | | |
| ஆதனம் பொறி மற்றும் இயந்திரம் | 4 | 7,228.51 | 8,449.51 | 4,903.20 | 5,767.28 |
| சொத்தினைப் பயன்படுத்துவதற்கான உரிமை | 5 | 92,455.88 | 119,083.74 | 92,171.07 | 118,751.75 |
| விமான முன் வழங்கல் கொடுப்பனவு | 6 | - | 2,528.12 | - | 2,528.12 |
| விமானப் பராமரிப்பு ஒதுக்கங்கள் | 7 | 21,246.37 | 18,603.60 | 21,246.37 | 18,603.60 |
| விமான மற்றும் உதிரி என்ஜின் வைப்புக்கள் | | 4,038.79 | 4,241.81 | 4,038.79 | 4,241.81 |
| அருவச் சொத்துக்கள் | 8 | 92.14 | 103.92 | 69.55 | 78.50 |
| முதலீடுகள் | 9.1 | 0.40 | 0.40 | 42.44 | 42.44 |
| | | 125,062.09 | 153,011.10 | 122,471.42 | 150,013.50 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | | |
| இருப்புக்கள் | 10 | 4,655.75 | 5,128.63 | 4,483.02 | 4,813.41 |
| வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகள் | 11 | 11,111.45 | 8,820.33 | 10,810.64 | 7,683.59 |
| விமானப் பராமரிப்பு ஒதுக்கங்கள் | 7 | 13,635.10 | 16,290.06 | 13,635.10 | 16,290.06 |
| விமான மற்றும் உதிரி என்ஜின் வைப்புக்கள் | | 602.76 | 542.22 | 602.76 | 542.22 |
| முதலீடுகள் | 9.2 | 1,367.82 | 1,039.24 | 1,114.66 | 613.64 |
| காசு மற்றும் வங்கி மீதிகள் | 12 | 1,447.82 | 1,596.98 | 1,263.81 | 1,233.18 |
| | | 32,820.70 | 33,417.46 | 31,909.99 | 31,176.10 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | 157,882.79 | 186,428.56 | 154,381.41 | 181,189.60 |
| **உரித்துவம் மற்றும் பொறுப்புக்கள்** | | | | | |
| உரித்துவம் | | | | | |
| கூறப்பட்ட மூலதனம் | 13 | 79,352.43 | 51,617.44 | 79,352.43 | 51,617.44 |
| ஒதுக்கங்கள் | 14 | 5,441.27 | 3,686.67 | 3,115.82 | 1,354.96 |
| திரண்ட நட்டங்கள் | | (366,284.57) | (316,477.65) | (371,733.52) | (326,341.48) |
| | | (281,490.87) | (261,173.54) | (289,265.27) | (273,369.08) |
| **நடைமுறையல்லா பொறுப்புக்கள்** | | | | | |
| வட்டி அறவிடப்படும் பொறுப்புக்கள் | 16 | 168,070.52 | 191,315.43 | 167,297.59 | 190,480.17 |
| ஏனைய நீண்ட கால பொறுப்புக்கள் | 17 | 23,846.49 | 22,033.35 | 23,130.11 | 21,257.28 |
| | | 191,917.01 | 213,348.78 | 190,427.70 | 211,737.45 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | | | |
| முன்னுரிமைப் பங்குகள் | 15 | - | 1,000.00 | - | - |
| ஊர்திகளுக்கான முன் விற்பனை | 18 | 11,196.76 | 17,835.18 | 11,196.76 | 17,835.18 |
| வர்தக மற்றும் ஏனைய கொடுமதிகள் | 19 | 100,350.89 | 108,343.99 | 106,176.53 | 118,086.77 |
| செலுத்த வேண்டிய வருமான வரி | | 175.45 | 212.57 | 175.45 | 175.45 |
| வட்டி அறவிடப்படும் பொறுப்புக்கள் | 16 | 135,733.55 | 106,861.58 | 135,670.24 | 106,723.83 |
| | | 247,456.65 | 234,253.32 | 253,218.98 | 242,821.23 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | 439,373.66 | 447,602.10 | 443,646.68 | 454,558.68 |
| **மொத்த உரித்துவம் மற்றும் பொறுப்புக்கள்** | | 157,882.79 | 186,428.56 | 154,381.41 | 181,189.60 |

இந்த நிதிக் கூற்றுக்கள் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகும் வண்ணம் தயாரிக்கப்பட்டுள்ளது.

**யசந்த திசாநாயக்க**
*நிதியியல் முகாமைத்துவம் தலைமை*

பணிப்பாளர் சபையானது இந்த நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பிற்கும் சமா்ப்பிப்பிற்கும் பொறுப்பாளியாயுள்ளது.
சபையின் சார்பாகவும் சபைக்காகவும் கையொப்பமிடப்பட்டுள்ளது.

**அசோக் பத்திரகே**
*பணிப்பாளர்*

**ஜயந்த் பெரேரா**
*பணிப்பாளர்*

பக்கங்கள் 57 முதல் 107 வரை காணப்படும் கணக்கீட்டு கொள்கைகளும் குறிப்புகளும் நிதிக் கூற்றுக்களின் இணைந்த பாகமாயுள்ளன.

2 மார்ச் 2022
கொழும்பு

# இலாபம் அல்லது நட்டக் கூற்று

| மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது | குறிப்பு | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|---|
| | | 2021<br>ரூபா மில்லி. | 2020<br>ரூபா மில்லி. | 2021<br>ரூபா மில்லி. | 2020<br>ரூபா மில்லி. |
| **வருவாய்** | 21 | **50,928.92** | 183,531.82 | **50,693.85** | 180,151.02 |
| செலவீனங்கள் | | | | | |
| விமான எரிபொருள் செலவு | | **(10,569.38)** | (55,327.75) | **(10,569.38)** | (55,327.75) |
| பணியாளர் செலவு | | **(17,111.81)** | (22,903.06) | **(16,206.23)** | (21,205.44) |
| விமான நிலையம் வழியாக மற்றும் பயணிகள் செலவு | | **(7,308.38)** | (25,276.94) | **(7,440.31)** | (29,217.18) |
| விமானப் பராமரிப்பு மற்றும் பராமரித்தல் செலவுகள் | | **(13,695.34)** | (22,820.26) | **(13,695.34)** | (22,820.26) |
| பெறுமானத் தேய்வு/பெறுமானக் குறைப்பு | | **(16,745.32)** | (19,391.55) | **(16,295.62)** | (19,013.83) |
| உதிரி என்ஜின்கள் மற்றும் குறுங்கால குத்தகை மீதான வாடகை செலவுகள் | | **(2,265.02)** | (1,393.67) | **(2,265.02)** | (1,393.67) |
| விற்பனை, சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பரத்திற்கான செலவுகள் | | **(2,064.99)** | (14,549.74) | **(2,033.93)** | (14,540.51) |
| விமானப் பணிக் குழு செலவினங்கள் | | **(1,680.18)** | (6,557.11) | **(1,680.18)** | (6,557.11) |
| ஏனைய செயற்பாட்டு செலவினங்கள் | | **(4,670.86)** | (15,208.69) | **(4,325.38)** | (14,127.44) |
| பரிமாற்றல் நட்டம் | | **(6,339.22)** | (5,270.29) | **(6,894.60)** | (6,118.51) |
| **செயற்பாட்டு நட்டம்** | 23 | **(31,521.58)** | (5,167.24) | **(30,712.14)** | (10,170.68) |
| ஏனைய வருமானம் மற்றும் ஆதாயங்கள் | 22 | **17,062.15** | 1,351.51 | **20,628.65** | 3,046.13 |
| நிதி வருமானம் | 24.1 | **561.51** | 377.88 | **524.86** | 317.28 |
| நிதிக் கிரயம் | 24.2 | **(35,863.65)** | (40,666.87) | **(35,672.83)** | (40,390.59) |
| **வரி விதிப்புக்கு முன்னரான நட்டம்** | | **(49,761.57)** | (44,104.72) | **(45,231.46)** | (47,197.86) |
| வருமான வரிச் செலவுகள் | 26 | **57.06** | (34.68) | **-** | - |
| **இந்த வருடத்திற்கான நட்டம்** | | **(49,704.51)** | (44,139.40) | **(45,231.46)** | (47,197.86) |

பக்கங்கள் 57 முதல் 107 வரை காணப்படும் கணக்கீட்டு கொள்கைகளும் குறிப்புகளும் நிதிக் கூற்றுக்களின் இணைந்த பாகமாயுள்ளன.

# விரிவான வருமானக் கூற்று

| மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது | குறிப்பு | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|---|
| | | 2021 ரூபா மில்லி. | 2020 ரூபா மில்லி. | 2021 ரூபா மில்லி. | 2020 ரூபா மில்லி. |
| **இந்த வருடத்திற்கான நட்டம்** | | **(49,704.51)** | (44,139.40) | **(45,231.46)** | (47,197.86) |
| **ஏனைய விரிவான வருமானம்/(நட்டம்)** | | | | | |
| **இலாபம் அல்லது நட்டமாக மீள் வகைப்படுத்தப்படக் கூடாத ஏனைய விரிவான வருமானம்/(நட்டம்) (வரி கழிக்கப்பட்டதன் பின்னர்)** | | | | | |
| ஓய்வு பெறல் நலன் கடப்பாடுகளிலான காப்பீட்டுக் கணிப்பு இலாபம்/(நட்டம்) | 17.2 | **(92.13)** | (20.86) | **(160.58)** | (8.87) |
| விடுப்பு சம்பளத்திலான காப்பீட்டுக் கணிப்பு இலாபம்/(நட்டம்) | | **(7.38)** | - | **-** | - |
| ஏனைய விரிவான வருமானமாக அங்கீகரிக்கப்பட்ட உருப்படிகளிலான ஒத்திவைக்கப்பட்ட வரி | 26.2 | **(9.16)** | - | **-** | - |
| | | **(108.67)** | (20.86) | **(160.58)** | (8.87) |
| **இலாபம் அல்லது நட்டமாக மீள் வகைப்படுத்த வேண்டிய ஏனைய விரிவான வருமானம்/(நட்டம்) (வரி கழிக்கப்பட்டதன் பின்னர்)** | | | | | |
| காசுப் பாய்ச்சல் இழப்பு காப்பரணில் தேறிய அசைவு | 14.1 | **1,760.86** | (61.44) | **1,760.86** | (61.44) |
| | | **1,760.86** | (61.44) | **1,760.86** | (61.44) |
| **ஆண்டிற்கான மொத்த ஏனைய விரிவான வருமானம்/(நட்டம்) (வரி கழிக்கப்பட்டதன் பின்னர்)** | | **1,652.19** | (82.30) | **1,600.28** | (70.31) |
| **ஆண்டிற்கான மொத்த ஏனைய விரிவான வருமானம்/(நட்டம்) (வரி கழிக்கப்பட்டதன் பின்னர்)** | | **(48,052.32)** | (44,221.70) | **(43,631.18)** | (47,268.17) |

பக்கங்கள் 57 முதல் 107 வரை காணப்படும் கணக்கீட்டு கொள்கைகளும் குறிப்புகளும் நிதிக் கூற்றுக்களின் இணைந்த பாகமாயுள்ளன.

# உரித்துவத்தில் ஏற்படும் மாற்றங்களிலான கூற்று

| குழுமம்<br>மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது | கூறப்பட்ட மூலதனம் | மீள் மதிப்பீட்டு ஒதுக்கு | காசுப் பாய்ச்சல் இழப்பு காப்பரண் ஒதுக்கு | திரண்ட நட்டம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா மில்லி. | ரூபா மில்லி. | ரூபா மில்லி. | ரூபா மில்லி. | ரூபா மில்லி. |
| 01 ஏப்ரல் 2019 இல் உள்ளவாறான மீதி | 51,617.44 | 5,459.01 | (1,699.42) | (223,488.73) | (168,111.70) |
| SLFRS 16 இன் மாறுதல் நிலையின் தாக்கம் | - | - | - | (48,840.14) | (48,840.14) |
| **01 ஏப்ரல் 2019 இன் படி செம்மையாக்கப்பட்ட மீதி** | 51,617.44 | 5,459.01 | (1,699.42) | (272,328.87) | (216,951.84) |
| வருடத்தில் மேற் கொண்ட தீர்வனவு மீள் மதிப்பீட்டு மிகையின் தள்ளுபடி | - | (11.48) | - | 11.48 | - |
| ஆண்டிற்கான நட்டம் | - | - | - | (44,139.40) | (44,139.40) |
| ஏனைய விரிவான வருமானம் | - | - | (61.44) | (20.86) | (82.30) |
| மொத்த ஏனைய விரிவான வருமானம்/(நட்டம்) | - | - | (61.44) | (44,160.26) | (44,221.70) |
| **31 மார்ச் 2020 இல் உள்ளவாறான மீதி** | 51,617.44 | 5,447.53 | (1,760.86) | (316,477.65) | (261,173.54) |
| கூறப்பட்ட மூலதனத்திற்கான முற்பணம் | 27,734.99 | - | - | - | 27,734.99 |
| வருடத்தில் மேற்கொண்ட தீர்வனவு மீள் மதிப்பீட்டு மிகையின் தள்ளுபடி | - | (6.26) | - | 6.26 | - |
| ஆண்டிற்கான நட்டம் | - | - | - | (49,704.51) | (49,704.51) |
| ஏனைய விரிவான வருமானம்/(நட்டம்) | - | - | 1,760.86 | (108.67) | 1,652.19 |
| மொத்த ஏனைய விரிவான வருமானம்/(நட்டம்) | - | - | 1,760.86 | (49,813.18) | (48,052.32) |
| **31 மார்ச் 2021 இல் உள்ளவாறான மீதி** | 79,352.43 | 5,441.27 | - | (366,284.57) | (281,490.87) |

| கம்பனி | கூறப்பட்ட மூலதனம் | மீள் மதிப்பீட்டு ஒதுக்கு | காசுப் பாய்ச்சல் இழப்பு காப்பரண் ஒதுக்கு | திரண்ட நட்டம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா மில்லி. | ரூபா மில்லி. | ரூபா மில்லி. | ரூபா மில்லி. | ரூபா மில்லி. |
| 01 ஏப்ரல் 2019 இல் உள்ளவாறான மீதி | 51,617.44 | 3,115.82 | (1,699.42) | (230,590.07) | (177,556.23) |
| SLFRS 16 இன் மாறுதல் நிலையின் தாக்கம் | - | - | - | (48,544.68) | (48,544.68) |
| **01 ஏப்ரல் 2019 இன் படி செம்மையாக்கப்பட்ட மீதி** | 51,617.44 | 3,115.82 | (1,699.42) | (279,134.75) | (226,100.91) |
| ஆண்டிற்கான நட்டம் | - | - | - | (47,197.86) | (47,197.86) |
| ஏனைய விரிவான வருமானம் | - | - | (61.44) | (8.87) | (70.31) |
| மொத்த ஏனைய விரிவான வருமானம்/(நட்டம்) | - | - | (61.44) | (47,206.73) | (47,268.17) |
| **31 மார்ச் 2020 இல் உள்ளவாறான மீதி** | 51,617.44 | 3,115.82 | (1,760.86) | (326,341.48) | (273,369.08) |
| கூறப்பட்ட மூலதனத்திற்கான முற்பணம் | 27,734.99 | - | - | - | 27,734.99 |
| ஆண்டிற்கான நட்டம் | - | - | - | (45,231.46) | (45,231.46) |
| ஏனைய விரிவான வருமானம் | - | - | 1,760.86 | (160.58) | 1,600.28 |
| மொத்த ஏனைய விரிவான வருமானம்/(நட்டம்) | - | - | 1,760.86 | (45,392.04) | (43,631.18) |
| **31 மார்ச் 2021 இல் உள்ளவாறான மீதி** | 79,352.43 | 3,115.82 | - | (371,733.52) | (289,265.27) |

பக்கங்கள் 57 முதல் 107 வரை காணப்படும் கணக்கீட்டு கொள்கைகளும் குறிப்புகளும் நிதிக் கூற்றுக்களின் இணைந்த பாகமாயுள்ளன.

# காசுப் பாய்ச்சல் கூற்று

| மார்ச் 31 இல் நிறைவடைந்த வருடத்திற்கானது | குறிப்பு | குழுமம் 2021 ரூபா மில்லி. | குழுமம் 2020 ரூபா மில்லி. | கம்பனி 2021 ரூபா மில்லி. | கம்பனி 2020 ரூபா மில்லி. |
|---|---|---|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல் கூற்று(பயன்படுத்தப்பட்டது)** | | | | | |
| வருமான வரிச் செலவினங்களுக்கு முன்னரான நட்டம் | | (49,761.57) | (44,104.72) | (45,231.46) | (47,197.86) |
| செம்மையாக்கல்கள் | | | | | |
| பெறுமானத் தேய்வு /பெறுமானக் குறைப்பு/வலுக்குன்றல்கள் | | 16,745.32 | 19,391.55 | 16,295.62 | 19,013.83 |
| நிதிச் செலவுகள் | 24.2 | 35,592.49 | 40,666.87 | 35,401.67 | 40,390.59 |
| ஆதனம்,பொறி,மற்றும் உபகரணம் அருவச் சொத்துககளின் விற்பனை மீதான இலாபம்/நட்டம் | | (7.57) | 8.71 | (4.94) | (3.49) |
| நிதியியல் வருமானம் | 24.1 | (561.51) | (377.88) | (524.86) | (317.28) |
| வருமதிகளின் வலுக் குன்றலுக்கான ஏற்பாடுகள் | 11.2 | 129.22 | 37.35 | 111.15 | 32.94 |
| மெதுவாக நகரும் இருப்புக்களுக்கான ஏற்பாடு | 9.1 | 385.28 | 113.58 | 282.74 | 91.75 |
| பராமரிப்பு ஒதுக்கத்தின் வலுக் குன்றல் மீதான ஏற்பாடு | 6.2 | 1,181.44 | 4,349.64 | 1,181.44 | 4,349.64 |
| பிடித்து வைத்தல் வரிக்கான தள்ளுபடி | 22 | (16,433.45) | 8,062.11 | (16,433.45) | 8,062.11 |
| வாடகை சலுகைகள் | 16.3 | (444.93) | - | (278.63) | - |
| திறை சேரி முறியின் விற்பனை மீதான நட்டம் | | 271.16 | - | 271.16 | - |
| எய்தப் பெற்றிராத பரிமாற்றல் நட்டத்தின் தாக்கம் | | 3,969.64 | 4,330.87 | 4,551.06 | 5,045.97 |
| முன் விற்பனையின் மீள் பதிவு | | (1,931.97) | (1,818.01) | (1,931.97) | (1,818.01) |
| பணிக் கொடைக்கான ஏற்பாடு | 16.2 | 997.45 | 1,126.34 | 903.81 | 1,031.33 |
| **தொழிற்பாட்டு மூலதன மாற்றத்திற்கு முன்னரான தொழிற்பாட்டு நட்டம்** | | (9,869.00) | 31,786.41 | (5,406.66) | 28,681.52 |
| இருப்புக்களில் குறைவு/(அதிகரிப்பு) | | 87.60 | (50.66) | 47.66 | (55.29) |
| ஊர்தியில் முன் விற்பனையிலான` குறைவு/(அதிகரிப்பு) | | (4,706.44) | (5,663.49) | (4,706.44) | (5,663.49) |
| வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகளின் குறைவு/(அதிகரிப்பு) | | 212.10 | 10,584.47 | (605.76) | 10,718.09 |
| வர்த்தக மற்றும் ஏனைய கொடுமதிகளின் குறைவு/(அதிகரிப்பு) | | 4,132.61 | 18,994.38 | (367.71) | 21,299.36 |
| பராமரிப்பு ஒதுக்கங்களில் குறைவு/(அதிகரிப்பு) | | 246.53 | (6,367.39) | 246.53 | (6,367.39) |
| விமானப் பாதுகாப்பு வைப்புக்களில் குறைவு/(அதிகரிப்பு) | | 633.22 | 132.68 | 633.22 | 132.68 |
| **தொழிற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட(பயன்படுத்தப்பட்டது) காசு** | | (9,263.38) | 49,416.40 | (10,159.16) | 48,745.48 |
| செலுத்தப்பட்ட நிதிச் செலவுகள் | | (20,395.65) | (22,699.41) | (20,204.83) | (22,432.00) |
| செலுத்தப்பட்ட பணிக் கொடைகள் | 16.2 | (988.41) | (587.07) | (941.21) | (543.52) |
| செலுத்தப்பட்ட வருமான வரி | | (37.51) | - | - | - |
| **தொழிற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட(பயன்படுத்தப்பட்டது) தேறிய காசுப் பாய்ச்சல்** | | (30,684.95) | 26,129.92 | (31,305.20) | 25,769.96 |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான (பயன்படுத்தப்பட்டது) காசுப் பாய்ச்சல்** | | | | | |
| பெறப்பட்ட வட்டி | | 300.90 | 132.57 | 267.40 | 88.57 |
| ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் கொள்வனவு | | (319.95) | (735.56) | (282.82) | (399.28) |
| குறுங்கால முதலீடுகளின் (முதலீடு)மீளப் பெறல் | | (271.21) | (72.08) | (446.81) | 4.92 |
| அருவச் சொத்துக்களின்` கொள்வனவு | | (38.60) | (23.44) | (30.00) | (20.26) |
| முதலீட்டு நடவடிக்கைகளிலில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு | | 10.52 | 5.10 | 4.94 | 3.84 |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு** | | (318.34) | (693.41) | (487.29) | (322.21) |
| **நிதியளித்தல் நடவடிக்கைகளிலிலிருந்தான (பயன்படுத்தப்பட்டது) காசுப் பாய்ச்சல்** | | | | | |
| திறை சேரி முறியின் விற்பனையிலிருந்தான வருவாய் | | 27,463.82 | - | 27,463.82 | - |
| வட்டி அறவிடப்படும் பொறுப்புக்களின் மீள் செலுத்துகை | | (3,189.70) | (39,704.62) | (3,078.78) | (39,579.34) |
| குத்தகை பொறுப்புக்களின் மீள் செலுத்துகை | | (6,677.11) | (19,452.56) | (6,799.04) | (19,421.89) |
| முன்னுரிமைப் பங்குகளின் மீட்பு | | (1,000.00) | - | - | - |
| கடன்கள் மற்றும் வட்டி அறவிடப்படும் கடன்களிலிருந்தான வருகை | | 2,821.40 | 30,556.46 | 2,801.40 | 30,556.46 |
| **நிதியளித்தல் நடவடிக்கைகளிலிலிருந்தான (பயன்படுத்தப்பட்டது) தேறிய காசு** | | 19,418.41 | (28,600.72) | 20,387.40 | (28,444.77) |
| **காசு மற்றும் காசுக்கு சமனானவற்றின் தேறிய அதிகரிப்பு/(குறைவு)** | | (11,584.88) | (3,164.21) | (11,405.09) | (2,997.02) |
| ஆண்டின் ஆரம்பத்தில் உள்ளபடியான காசும் காசுக்கு சமனானவையும் | 12 | (10,084.43) | (6,920.22) | (10,448.23) | (7,451.21) |
| **ஆண்டின் இறுதியில் உள்ளபடியான காசும் காசுக்கு சமனானவையும்** | 12 | (21,669.31) | (10,084.43) | (21,853.32) | (10,448.23) |

பக்கங்கள் 57 முதல் 107 வரை காணப்படும் கணக்கீட்டு கொள்கைகளும் குறிப்புகளும் நிதிக் கூற்றுக்களின் இணைந்த பாகமாயுள்ளன.

# நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 1. கூட்டாண்மைத் தகவல்கள்

### *1.1 பொதுவானவை*

**கம்பனி**
வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் ("கம்பெனி") என்பது இலங்கையில் ஒன்றிணைக்கப்பட்டு உறைவிடத்தினைப் பெற்ற ஒரு வரையறுக்கப்பட்ட பொறுப்பு நிறுவனம் ஆகும். நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் மற்றும் வணிகத்தின் முதன்மை இடம் ஏர்லைன் மத்திய நிலையம், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்க, இலங்கையில் அமைந்துள்ளது.

### *1.2 பிரதான நடவடிக்கைகள் மற்றும் செயற்பாட்டின் தன்மை*

**கம்பனி**
இலங்கையின் நியமிக்கப்பட்ட கொண்டுசெல்லுநராக பயணிகள், சரக்கு மற்றும் அஞ்சல் ஆகியவற்றை ஏற்றிச்செல்ல சர்வதேச, திட்டமிடப்பட்ட/ திட்டமிடப்படாத விமான சேவைகளை இயக்குவதே நிறுவனத்தின் முதன்மை வர்த்தக நடவடிக்கைகள் ஆகும். பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் ("BIA") மற்றும் மத்தல ராஜபக்ஸ சர்வதேச விமான நிலையம் ("MRIA") ஆகியவற்றில் விமான நிலைய சேவைகளை வழங்குதல்,சுங்க வரியற்ற (duty-free) பொருட்களை விமான தளத்தில் விற்பனை செய்தல், உள்வரும் மற்றும் வெளிச்செல்லும் விடுமுறை தொகுப்புகளை (holiday packages) விற்பனை செய்தல் ஆகியவை நிறுவனத்தின் பிற முக்கிய நடவடிக்கைகளாகும். மூன்றாம் தரப்பு விமான பராமரிப்பு, விமான செயல்பாட்டு சேவைகளை வழங்குதல் மற்றும் வான் பயணவியல் தொடர்பான பயிற்சிகளை அளித்தல் ஆகியவை நிறுவனத்தின் துணை நடவடிக்கைகளாக உள்ளன.

**துணைக் கம்பனி - ஸ்ரீலங்கா கேடரிங் லிமிட்டட்**
வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங்கின் முதன்மை நடவடிக்கையாக (துணை நிறுவனம்) BIA மற்றும் MRIA மூலம் இயங்கும் விமானங்களுக்கு விமானத்திற்குள் கேட்டரிங் சேவைகளை வழங்குவதாகும். பிற துணை நடவடிக்கைகளாக பொது மற்றும் பயணவழி உணவு விடுதிகளை இயக்குதல், சலவை சேவைகளை வழங்குதல் மற்றும் பயணவழி உணவகங்களை நிர்வகித்தல் ஆகியவை உள்ளடங்கும்.

### *1.3 வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட திகதி*
2021 மார்ச் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் பணிப்பாளர் சபையினால் 02 மார்ச் 2022 இல் வெளியிட அனுமதிக்கப்பட்டன.

## 2. பொதுவான கணக்கீட்டுக் கொள்கைகள்

### *2.1 தயாரிப்பின் அடிப்படை*
கம்பனி மற்றும் குழுமத்தின் நிதிக்கூற்றுக்கள் ஒரு அட்டுறு அடிப்படையில் மற்றும் வரலாற்று கிரய மரபொழுங்கின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளன. இதற்கு விலக்காக, நிலம் மற்றும் கட்டிடங்கள், விமான சமையலறை உபகரணங்கள் நியாயமான பெறுமானத்தில் அளவிடப்பட்டுள்ளன.

வேறு விதமாக குறிப்பிடப்படும் போது தவிர, அனைத்து பெறுமானங்களும் இலங்கை ரூபாயில் வழங்கப்படுகின்றன, மேலும் அருகிலுள்ள மில்லியன் ரூபாய்க்கு முழுமையாக்கப்பட்டுள்ளன.

2020 ஆம் ஆண்டில் கோவிட்-19 பரவலானது வேகமாக வளர்ச்சியடைந்துள்ளது, உலகளவில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான நோய்த்தொற்றுகள் பதிவாகியுள்ளன. வைரஸின் பரவல் மெதுவாக மக்களின் அசைவுகளை கட்டுப்படுத்துதல் மற்றும் விமானங்களை கட்டுப்படுத்துதல் உள்ளிட்ட உலகளாவிய பொருளாதார நடவடிக்கைகளை கணிசமாக பாதித்துள்ளது. உலகளாவிய விமானச் சந்தை குறுகிய காலத்தில் கணிசமாக பாதிக்கப்பட்டுள்ளது. பயணக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதால், இந்த பாதிப்பு படிப்படியாக மீட்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஒரு விமான நிறுவனமாக, நிறுவனம் தனது சாதாரணமான முழு பயணிகள் சேவைகளை இயக்க முடியவில்லை மற்றும் பரவலின் காரணமாக நிறுவனத்தின் வருமானமானது எதிர்மறையான தாக்கத்தினை செலுத்தியது, மேலும் முழு தாக்கம் மற்றும் பாதிப்பு ஏற்படும் காலத்தினையும் உறுதியுடன் கணிக்க முடிவதில்லை. மேற்கூறப்பட்ட காரணங்களினால் துணை நிறுவனத்தினாலும் தனது முழுத் திறனுடன் செயற்பட முடியாமல் போனது.

இந்த நெருக்கடியின் மூலம் வணிகத்தை நிர்வகிக்க குழு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது, இதில் புதிய வருவாய் ஈட்டும் வாய்ப்புகள் (திட்டமிடப்பட்ட சரக்கு விமானங்கள் மற்றும் பயணிகள் விமானத்தை ஒரு பிரத்தி யேக சரக்கு விமானமாக மாற்றுவது) செலவு குறைப்பு நடவடிக்கைகளை செயல்படுத்துதல், விருப்பமான மூலதன செலவினங்களைக் குறைத்தல் மற்றும் மேலதிக பணி மூலதனத்தில் நெகிழ்வுத் தன்மையை உண்டுபண்ணுதல் போன்றவற்றை மேற் கொண்டுள்ளது. நிறுவன செயல்நிலை தொடர்ச்சி குறிப்பு 3 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளபடி புதிய பங்கு மூலதனத்தை உள்வாங்குவது உட்பட இலங்கை அரசிடமிருந்து உறுதியான ஆதரவைப் பெறுவதும் இந்த நடவடிக்கைகளில் அடங்கும். நிறுவன செயல்நிலை தொடர்ச்சி அடிப்படையில் மேலே குறிப்பிடப்பட்ட இந்த ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்கள் அமைந்துள்ளன.

மேலும், குழுவில் கோவிட்-19 இன் தாக்கம் காரணமாக, ஒரு வலுக்குன்றல் பரிசோதனை செய்யப்பட்டது, இருப்பினும் எந்த குறைபாடு இழப்பும் அடையாளம் காணப்படவில்லை. நிர்வாகமானது கோவிட்-19 நிலைமையை அதன் தற்போதைய தாக்க மதிப்பீட்டின் ஒரு பகுதியாக தொடர்ந்து கண்காணித்து வருகிறது.

#### 2.1.1 இணங்கியொழுகுதல் கூற்று
இலங்கையின் பட்டய கணக்காளர் நிறுவனம் வழங்கிய இலங்கை கணக்கியல் நியமங்களுக்கு (SLFRS) ஏற்ப கம்பனி மற்றும் குழுமத்தின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் மற்றும் வெளிப்படுத்தல் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்திற்கு இணங்கியொழுகுகின்றது.

#### 2.1.2 ஒப்பிடப்படும் தகவல்கள்
முன்னைய வருடங்களின் நிதிக் கூற்றுக்களது காட்சியளிப்பும் வகைப்படுத்தலும் பொருத்தமான இடங்களில் சிறந்த காட்சியளிப்பிற்காகவும் நடைமுறை ஆண்டுடன் ஒப்பிடக்கூடியதாகவும் இருப்பதற்காக திருத்தியமைக்கப்பட்டன.

#### 2.1.3 தொழிற்படு மற்றும் வெளிப்படுத்தல் நாணயம்
நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாயில் (LKR) வெளிப்படுத்தப்படுகின்றன, இது குழுமத்தின் தொழிற்படு மற்றும் வெளிப்படுத்தல் நாணயமாக காணப்படுகின்றது. இலங்கை கணக்கீட்டு நியமம் - LKAS 01 ஆனது 'நிதிக் கூற்றுக்களின் வெளிப்படுத்தல்' குறித்து அனுமதிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படாத பட்சத்தில், வழங்கப்பட்ட அனைத்து நிதித் தகவல்களும் இலங்கை ரூபாயில் அருகிலுள்ள மில்லியனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

### *2.2 ஒருங்கிணைப்பதற்கான அடிப்படை*
நிதிக் கூற்றுக்கள் 2021 மார்ச் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவனத்தினதும் அதன் துணை நிறுவனங்களின் நிதிக் கூற்றுக்களையும் உள்ளடக்கியது. துணை நிறுவனங்களின் நிதிக் கூற்றுக்கள் நிலையான கணக்கீட்டுக் கொள்கைகளைப் பயன்படுத்தி அதே அறிக்கை ஆண்டுக்காக தயாரிக்கப்படுகின்றன.

#### 2.2.1 வணிகக் கூட்டு
கையகப்படுத்தப்பட்ட செயற்பாடுகள் மற்றும் சொத்துக்கள் ஒரு வணிகத்தின் வரையறையை பூர்த்தி செய்யும் போது கையகப்படுத்தல் முறையைப் பயன்படுத்தி வணிக சேர்க்கைகளுக்கான

# நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

குழு கணக்குகள் மற்றும் கட்டுப்பாடு குழுவுக்கு மாற்றப்படும். ஒரு குறிப்பிட்ட செயல்பாடுகள் மற்றும் சொத்துக்கள் ஒரு வணிகமா என்பதைத் தீர்மானிப்பதில், கையகப்படுத்தப்பட்ட சொத்துகள் மற்றும் செயல்பாடுகளின் தொகுப்பில், குறைந்தபட்சம், ஒரு உள்ளீடு மற்றும் கணிசமான செயல்முறை ஆகியவை அடங்கியுள்ளனவா என்பதையும், வாங்கிய தொகுப்பில் வெளியீடுகளை உருவாக்கும் திறன் உள்ளதா என்பதையும் குழு மதிப்பிடுகிறது.

கையகப்படுத்தப்பட்ட செயற்பாடுகள் மற்றும் சொத்துக்கள் ஒரு வணிகமல்லவா என்பதை எளிமைப்படுத்தப்பட்ட மதிப்பீட்டை அனுமதிக்கும் “செறிவு சோதனை” ஒன்றைப் பயன்படுத்துவதற்கு குழுவுக்கு ஒரு விருப்பம் உள்ளது. பெறப்பட்ட மொத்த சொத்துக்களின் நியாயமான மதிப்பு அனைத்தும் ஒரு அடையாளம் காணக்கூடிய சொத்து அல்லது ஒத்த அடையாளம் காணக்கூடிய சொத்துகளின் குழுவில் குவிந்திருந்தால் விருப்ப செறிவு சோதனை பூர்த்தி செய்யப்படுகிறது.

கையகப்படுத்தலில் மாற்றப்பட்ட கருத்தாய்வு பொதுவாக நியாயமான மதிப்பில் அளவிடப்படுகிறது, அதேபோல் அடையாளம் காணக்கூடிய நிகர சொத்துக்கள். எழும் எந்தவொரு நல்லெண்ணமும் குறைபாட்டிற்காக ஆண்டுதோறும் சோதிக்கப்படும். ஒரு பேரம் வாங்குவதன் மூலம் எந்த ஆதாயமும் உடனடியாக இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகிறது. கொடுக்கல் வாங்கல் செலவுகள் கடன் அல்லது பங்கு பத்திரங்களின் பிரச்சினை தொடர்பானவை தவிர, ஏற்படும் செலவாகும்.
மாற்றப்பட்ட கருத்தில் முன்பே இருக்கும் உறவுகளின் தீர்வு தொடர்பான தொகைகள் இல்லை. இத்தகைய தொகைகள் பொதுவாக இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன.
.
எந்தவொரு தொடர்ச்சியான கருத்தும் கையகப்படுத்தும் திகதியில் நியாயமான மதிப்பில் அளவிடப்படுகிறது. ஒரு நிதிக் கருவியின் வரையறையைப் பூர்த்தி செய்யும் ஒரு கட்டாயக் கடனை செலுத்த வேண்டிய கடமை பங்கு என வகைப்படுத்தப்பட்டால், அது மறுபரிசீலனை செய்யப்படாது மற்றும் தீர்வு பங்கிற்குள் கணக்கிடப்படுகிறது. இல்லையெனில், ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் பிற மதிப்புமிக்க பரிசீலிப்புகள் நியாயமான மதிப்பில் மறுபரிசீலனை செய்யப்படுகின்றன, மேலும் தொடர்ச்சியான பரிசீலிப்பின் நியாயமான மதிப்பில் ஏற்படும் மாற்றங்கள் இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன.

### 2.2.2 துணை நிறுவனம்

துணை நிறுவனங்களானது குழுமத்தால் உரிமம் பெற்று கட்டுப்படுத்தப்படும் நிறுவனங்களாகும். குழுமமானது ஒரு நிறுவனத்தை வெளிப்படுத்தும்போது அல்லது உரிமைகளைக் கொண்டிருக்கும்போது, அந்த நிறுவனத்துடன் அதன் ஈடுபாட்டிலிருந்து மாறுபட்ட வருவாய்களை கட்டுப்படுத்துகிறது மேலும் அந்த நிறுவனத்தின் மீதான அதன் சக்தியின் மூலம் அந்த வருவாயில் செல்வாக்குச் செலுத்தும் திறனைக் கொண்டுள்ளது. கட்டுப்பாடு தொடங்கும் திகதியிலிருந்து முதல் கட்டுப்பாடு நிறுத்தப்படும் திகதி வரை உள்ள துணை நிறுவனங்களின் நிதிக் கூற்றுக்கள் திரட்டிய நிதிக் கூற்றுக்களில் உள் வாங்கப்பட்டுள்ளன.

### 2.2.3 கட்டுப்பாட்டில் அல்லாத நலன்கள்

ஒவ்வொரு வணிக சேர்க்கைக்கும், கையகப்படுத்துவதில் எந்தவொரு கட்டுப்பாடற்ற ஆர்வங்களையும் அளவிட குழு தேர்ந்தெடுக்கிறது: நியாயமான மதிப்பில் அல்லது பொதுவாக நியாயமான மதிப்பில் இருக்கும் கையகப்படுத்துபவரின் அடையாளம் காணக்கூடிய நிகர சொத்துக்களின் விகிதாசார பங்கில்.

கட்டுப்பாட்டில் அல்லாத நலன்களைப் பெறுவது உரிமையாளர்களுடனான கொடுக்கல் வாங்கல்களாக கருதப்படுகிறது, எனவே, அத்தகைய பரிவர்த்தனைகளின் விளைவாக எந்தவொரு நல்லெண்ணமும் அங்கீகரிக்கப்படவில்லை. கட்டுப்பாட்டில் அல்லாத நலன்களின் மாற்றங்கள் துணை நிறுவனத்தின் நிகர சொத்துக்களின் விகிதாசார தொகையை அடிப்படையாகக் கொண்டவை.

கட்டுப்பாட்டு இழப்பை ஏற்படுத்தாத ஒரு துணை நிறுவன குழுவின் நலன்களில் ஏற்படும் மாற்றங்கள் பங்கு கொடுக்கல் வாங்கல்களாக கருதப்படுகின்றன.

### 2.2.4 கட்டுப்பாட்டின் இழப்பு

குழுமமானது ஒரு துணை நிறுவனத்தின் மீதான கட்டுப்பாட்டை இழக்கும்போது, அது துணை நிறுவனத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் மற்றும் தொடர்புடைய எந்தவொரு NCI மற்றும் பங்குகளின் பிற கூறுகளையும் அங்கீகரிக்கிறது. இதன் விளைவாக ஏற்படும் வளர்ச்சி அல்லது வீழ்ச்சி இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகிறது. முன்னாள் துணை நிறுவனமானது கட்டுப்பாட்டை இழக்கும்போது ஏதேனும் தக்கவைக்கப்பட்ட வட்டி நியாயமான பெறுமதியில் அளவிடப்படுகிறது.

### 2.2.5 திரட்டின் மீதான நீக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள்

உள்ளக-குழு நிலுவைகள் மற்றும் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் உள்ளக-குழு கொடுக்கல்வாங்கல்களிலிருந்து எழும் எந்தவொரு அங்கீகரிக்கப்படாத வருமானம் மற்றும் செலவுகள் ஆகியவை நீக்கப்படும். பங்கு கணக்கீட்டு முதலீட்டாளர்களுடனான கொடுக்கல் வாங்கல்களிலிருந்து எழாத ஆதாயங்கள் முதலீட்டாளருக்கு எதிரான குழுவின் நலன்களின் அளவிற்கு முதலீட்டிற்கு எதிராக அகற்றப்படுகின்றன. மதிப்பிடப்படாத இழப்புகள் நம்பமுடியாத ஆதாயங்களைப் போலவே நீக்கப்படும், ஆனால் குறைபாட்டிற்கான எந்த ஆதாரமும் இல்லாத அளவிற்கு மட்டுமே.

### *2.3 குறிப்பிடத்தக்க கணக்கீட்டு கொள்கைகள்*

அனைத்து காலங்களுக்கும் இந்த நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டு கொள்கைகள் தொடர்ந்து பயன்படுத்தப்படுகின்றன.

### 2.3.1 கணக்கீட்டுக் கொள்கைகளில் மாற்றங்கள்

1 ஏப்ரல் 2020 முதல் நடைமுறைக்கு வந்த புதிய நியமங்கள்/விளக்கங்கள் குழுமத்தின் நிதிக் கூற்றுக்களில் விழித்தறியக் கூடிய விளைவைக் கொண்டிருக்கவில்லை. - 28 மே 2020 அன்று வெளியிடப்பட்ட IFRS 16 க்கான திருத்தத்தின் அடிப்படையில் குழுமமானது ஆரம்பத்தில் COVID-19-தொடர்பான வாடகை சலுகைகளை பொருந்திக் கொண்டது.இந்தத் திருத்தம் குழு குத்தகைதாரராக இருக்கும் குத்தகைகளுக்கான விருப்பமான நடைமுறை பயனீட்டை அறிமுகப்படுத்துகிறது - அதாவது குழுமமானது நடைமுறைக்கு பொருந்தும் குத்தகைகளுக்கு COVID-19 கொரோனா வைரஸ் தொற்றுநோயின் நேரடி விளைவாக இருக்கும் தகுதி வாய்ந்த வாடகை சலுகைகள் குத்தகை மாற்றங்கள் என்பதை மதிப்பீடு செய்ய தேவையில்லை. குழு இந்த திருத்தத்தை நடைமுறையில் பயன்படுத்தியது. 1 ஏப்ரல் 2020 இல் தக்கவைக்கப்பட்ட வருவாயில் இந்தத் திருத்தம் எந்தத் தாக்கத்தினையும் கொண்டிருக்கவில்லை.வேறு எந்த நியமம்,விளக்கம் அல்லது திருத்தத்தை வெளியிட்டிருந்தாலும் குழுமமானது ஏற்கவில்லை இருப்பினும் அது தாக்கம் செலுத்தவில்லை.

### 2.3.2. குறிப்பிடத்தக்க கணக்கீட்டு மதிப்பீடுகள், அனுமானங்கள் மற்றும் பகுத்தறிவுகள்

குழுவின் நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பானது முகாமைத்துவம் பகுத்தறிவுகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்களை மேற்கொள்ளும் தேவையைக் கொண்டுள்ளதுடன் அறிக்கையிடப்படும் திகதியில் அறிக்கையிடப்பட்ட தொகைகளான சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவுகள் மற்றும் வெளிப்படுத்தல்கள் என்பவற்றில் தாக்கத்தினை ஏற்படுத்தலாம்.முக்கியமான பகுத்தறிவுகள், மதிப்பீடுகள் மற்றும் அதனுடனிணைந்த அனுமானங்கள் என்பன தொடர்ச்சியான அடிப்படையில் கணிப்பிடப்படுவதுடன் அவை மரபு ரீதியான அனுபவம் மற்றும் சூழ்நிலைகளின் கீழ் நியாயமானதென நம்பப்படும் எதிர்கால.

நிகழ்வுகளது எதிர்பார்ப்புகள் உள்ளடங்களாக ஏனைய காரணிகள் என்பவற்றின் அடிப்படையிலாகும். பின்வரும் முக்கிய பகுத்தறிவுகள்,மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள் என்பன ஏனையவற்றுக்கிடையில் நிதிக் கூற்றுகளில் அங்கீகரிக்கப்பட்ட தொகைகளில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை உடைய தற்றார்புடையவற்றினையும் கையாள்கின்றது.

### (a) பகுத்தறிவுகள்

**(i) நிறுவன செயல்நிலை தொடர்ச்சி**
குறிப்பு 3 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளபடி, இந்த நிதிக் கூற்றுக்கள் ஓர் நிறுவன செயல்நிலை தொடர்ச்சி அடிப்படையில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

**(ii) எதிர்பாரா பொறுப்புக்கள்-வழக்காடல்கள்**
குழுமமானது அறிக்கையிடல் காலப் பகுதியின் முடிவில் பல்வேறு தரப்பினருடன் பல நிலுவை வழக்காடல்களை கொண்டிருந்தது. இயக்குநர்கள் குழு, குழுவின் சட்ட ஆலோசகருடன் சரியான ஆலோசனையின் பின்னர், ஒவ்வொரு வழக்கின் தகுதியையும் மதிப்பிடுகிறது மற்றும் எதிர்காலத்தில் வளங்கள் வெளிப்பாய்ச்சல் இடம் பெறும் சாத்தியம் உள்ளது என்று தீர்மானிக்கப்படும்போது தேவையான ஏற்பாடுகளை செய்கிறது.

சட்ட நடவடிக்கைகளைப் பொறுத்தவரை குழுவின் வணிகப் போக்கில் எழும் எந்தவொரு தற்செயலான கடன்களுக்கும் பணிப்பாளர்கள் எந்தவொரு குறிப்பிடத்தக்க பொறுப்பையும் எதிர்நோக்கவில்லை. வாடிக்கையாளர்கள், வழங்குநர்கள் மற்றும் ஊழியர்களால் குழுவிற்கு எதிராக பிற உரிமைகோரல்கள் மற்றும் சாத்தியமான உரிமைகோரல்கள், சம்பந்தப்பட்ட தொகைகள் குறிப்பு 27.2 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

**(iii) குத்தகைகள்**
ஒப்பந்தமானது ஓர் குத்தகையா அல்லது ஓர் குத்தகையினை உள்ளடக்கியுள்ளதா என்று மதிப்பீடு செய்கின்றது. ஒப்பந்தமானது ஓர் இனங்காணப்பட்ட சொத்தினை ஒரு காலப்பகுதிக்கு ஓர் மறுபயனுக்கு பரிமாற்றல் செய்யப்பட்டு அதன் பயன்பாட்டினை கட்டுப்படுத்துவதற்கான உரிமையினை தெரிவிக்குமாயின் அவ் ஒப்பந்தம் ஓர் குத்தகை எனப்படும். அடையாளம் காணப்பட்ட சொத்தின் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தும் உரிமையை ஒப்பந்தம் தெரிவிக்கிறதா என்பதை மதிப்பிடுவதற்கு கருதப்படும் காரணிகளாக: ஒப்பந்தத்தில் அடையாளம் காணப்பட்ட சொத்தின் பயன்பாட்டை உள்ளடக்கியது, பயன்பாட்டின் காலம் முழுவதும் சொத்தின் பயன்பாட்டிலிருந்து பெறும் கணிசமாக அனைத்து பொருளாதார நன்மைகளையும் பெற குழுவுக்கு உரிமை உண்டு மேலும் சொத்தின் பயன்பாட்டை இயக்குவதற்கு குழுவுக்கு உரிமை உண்டு.

### (b) மதிப்பீடுகள்

**(i) ஆதனம், பொறித்தொகுதிமற்றும் உபகரணங்கள் மற்றும்அருவச் சொத்துக்களின் பெறுமானத்தேய்வு/பெறுமானக்குறைப்பு**
முகாமைத்துவமானது ஆதனம்,பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் மற்றும் அருவச் சொத்துக்களுக்கு சொத்துக்களின் உத்தேசித்த பயன்பாடு மற்றும் அவற்றின் பொருளாதார வாழ்நாட்கள் என்பவற்றின் அடிப்படையில் பயன்பாட்டு வாழ்நாட்களையும் எஞ்சிய பெறுமதிகளையும் ஒதுக்குகின்றது. முகாமைத்துவமானது ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் எஞ்சிய பெறுமதிகள், பயன்பாட்டு வாழ்நாட்கள், மற்றும் பெறுமானத்தேய்வு/பெறுமானக் குறைப்பு முறைகளை மீளாய்வு செய்கின்றது. இது இந்த சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள பொருளாதார நலன்களது நுகர்வினது முன்னைய மதிப்பீடுகள் மற்றும் போக்குகள் என்பவற்றுடன் ஒவ்வுமையினை உறுதிப்படுத்துவதற்காகும்.

இந்தச் சொத்துக்களின் பயன்பாட்டு வாழ்நாட்கள் மற்றும் எஞ்சிய பெறுமதிகளிலான மாற்றங்கள் எதிர்கால பெறுமானத்தேய்வு அல்லது பெறுமதிக்குறைப்பு கட்டணங்களில் மீளாய்வினை விளைவிக்கலாம் (கொள்கை 2.4.3. (பி) மற்றும் 2.4.4. இனை பார்க்கவும்)

**(ii) அடிக்கடி பறப்பவர் திட்டம்**
வருவாயின் பிரத்தியேகமாக இனங்காணக்கூடிய கூறாக வெகுமதி வரவுகள் கணக்கீடு செய்யப்படுகின்றன. வெகுமதி வரவுகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள மறுபயன்கள் அவற்றின் நியாயப் பெறுமதியில் ஒருங்கமைக்கப்பட்ட நிதி நிலைமைக்கூற்றினில் ஓர் பொறுப்பாக( ஒத்திவைக்கப்பட்டவருவாய்) கணக்கீடு செய்யப்படுகின்றது.

மைல் வரவுகளின் நியாயப் பெறுமதியினை தீர்மானிப்பதற்கு மதிப்பீட்டு நுட்பங்கள் பயன்படுத்தப்படுவதுடன் பின்வரும் காரணிகளின் நிறையிடப்பட்ட சராசரியினை பிரதிபலிக்கின்றது. அதாவது, துறைக்கான பயணக்கட்டணம், விமானப் பயண தரமுயர்த்தல்கள் மற்றும் பங்காளி வெகுமதிகள் என்பனவாகும். நியாயப் பெறுமதி கணிப்பீடுகளுக்கு வரலாற்று போக்குகள் அடிப்படையாகக் பயன்படுத்தப்படுகின்றன.

அங்கத்தவர்களினால் மீட்கப்படாது என எதிர்பார்க்கப்படும் மைல்கள் மற்றும் முதிர்வுற்ற மைல்கள் ஆகியவற்றுக்காக மைல்களின் நியாயப் பெறுமதிக்கு செம்மையாக்கல் மேற்கொள்ளப்படுகின்றன.

மைலக்ளின் நியாயப் பெறுமதியினை தீர்மானிப்பதற்கு உள்வாங்கப்படும் பன்முகமான உள்ளீடுகளின் நிமித்தம் முகாமைத்துவம் ஓர் மட்டத்திலான பகுத்தறிவினை பிரயோகிக்கின்றது.

**(iii) ஒதுக்கங்கள் பராமரிப்பு**
கம்பனியானது செயற்பாட்டு குத்தகைகளின் கீழ் காணப்படும் பல விமானங்கள் மற்றும் என்ஜின்களுக்கு பராமரிப்பு நோக்கி உடன்பாடு கண்ட விதிமுறைகளில் குத்தகைக்கு விடுபவருக்கு மாதாந்த கொடுப்பனவுகளை மேற்கொள்கின்றது. இந்த மாதாந்த கொடுப்பனவுகள் மணித்தியாலங்களின் எண்ணிக்கை அல்லது பறந்த சுழற்சிகள் அல்லது பயணவழி காலம் ஆகியவற்றின் அடிப்படையிலானதாகும். காலாகாலம் முகாமைத்துவமானது மீளப்பெறத்தக்க தொகைகளின் சிறந்த மதிப்பீடுகளின் அடிப்படையில் அத்தகைய கொடுப்பனவுகளின் மீளப்பெறத்தக்க தன்மையினை மதிப்பீடுசெய்கின்றது. ஓர் சொத்தின் கொண்டு செல்லப்படும் தொகையானது மீளப்பெறத்தக்க தொகையினை விஞ்சியிருப்பின்,சொத்தானது வலுக்குன்றியுள்ளது என கருதப்பட்டு மீளப்பெறத்தக்க தொகைக்கு குறைத்தெழுதப்படுகின்றது. (குறிப்பு 07 இனை பார்க்கவும்)

**(iv) விமான பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல் செலவினங்களுக்கான ஏற்பாடு**
பராமரிப்பு நோக்கிய உடன்பட்ட விதிமுறைகளின் அடிப்படையில் செயற்பாட்டு குத்தைககளின் கீழ்வரும் விமானங்களில்,கம்பனியானது விமானச் சட்டகம், என்ஜின்கள் மற்றும் தரையிறக்கும் பொறி ஆகியவற்றில் கனத்த பராமரிப்பினை மேற்கொள்வதற்கு கடமைப்பட்டுள்ளது. கனமான பராமரிப்புச் செலவினத்திற்கான ஏற்பாடான பழுதுபார்த்தலின் தன்மையினைப் பொறுத்து பயன்பாடு அல்லது நேரம் என்பவற்றின் அடிப்படையில் நிதிக் கூற்றுக்களில் படிப்படியாக மேற்கொள்ளப்படுகின்றது. ஏற்பாட்டிற்கு வருவதில், பின்வருவன கவனிக்கப்படுகின்றன: பரீசீலனை மேற்கொள்ளும் நேரத்தில் சொத்தின் மதிப்பீட்டு நிலைமையில் அனுமானங்கள் மேற்கொள்ளப்படுகின்றன, ஆட்படவேண்டிய பொருட்கள் மற்றும் நிறுவனச் செலவுகள் மற்றும் எப்போது பரிசீலனை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பனவாகும்.இந்த அனுமானங்கள் கடந்தகால அனுபவங்களின் அடிப்படையில் உருவாக்கப்படுவதுடன் அவை மெய்யான பெறுமதிக்கு ஒத்ததாக காணப்படுவதனை உறுதிசெய்வதற்காக கிரமமாக மீளாய்வுசெய்யப்படுகின்றது. ஏற்பாட்டில் குறிப்பிடத்தக்க விளைவினை உருவாக்கும் அனுமானங்கள் மற்றும் மதிப்பீடுகளிலான ஏதேனும் திருத்தங்கள் வருங்காலத்தில் நிதிக் கூற்றுக்களில் செம்மையாக்கப்படுகின்றன.

# நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

**(v) வான் போக்குவரத்து சேவையுடன் தொடர்புடைய நேரடி இயக்குதல் செலவினத்திற்கான ஏற்பாடுகள்**
விமானப் போக்குவரத்து சேவைகளை செயற்படுத்தலானது எரிபொருள், தரை கையாளும் கட்டணங்கள், தரையிறக்கம் மற்றும் தரித்திருத்தல் கட்டணங்கள்,விமானத்தினுள் வழங்கப்படும் உணவுகள்,ஒதுக்கீட்டு முறைகள், நேரடிச் செலவுகள்,முன்பதிவு கட்டணங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான செலவுகள் போன்ற நேரடிச் செலவுகளில் பல்வேறு ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல் என்பவற்றை உள்ளடக்குதல் தவிர்க்கமுடியாததாகும்.மதிப்பீடுகள் மற்றும் அவற்றுடனிணைந்த அனுமானங்கள் என்பன அந்த சூழ்நிலைகளில் நியாயமானது என நம்பப்படும் பல்வேறுகாரணிகளின் அடிப்படையில் உள்ளதுடன்,இவற்றின் விளைவுகள் அறிக்கையிடப்படும் காலத்தின் இறுதியில் கொண்டுசெல்லப்படும் பொறுப்புக்களுக்கு ஏற்பாடுகள் மேற்கொள்வதன் அடிப்படையினை உருவாக்குகின்றது.

**(vi) இருப்புகள்**
கம்பனியானது நிரந்தர இருப்பு எண்ணிக்கை அடிப்படையில் இருப்புக்களின் இருத்தல் தன்மை மற்றும் பயன்படுத்தக்கூடிய தன்மை ஆகியவற்றை மீளாய்வு செய்கின்றது. ஏற்பாடுகள், முகாமைத்துவம் பழமை பட்டுப்போன இருப்பினை தீர்மானிக்கும்போது மற்றும்/அல்லது மீளப்பெறத்தக்க பெறுமதியில் ஓர் குறைப்பினை மதிப்பீடு செய்யப்படும்போது மேற்கொள்ளப்படுகின்றன.

**(vii) நிதியில்லாத சொத்துக்களின் வலுக்குன்றல்கள்**
குழுமமானது ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் ஒரு சொத்து வலுக்குன்றுமா என்ற அறிகுறி காணப்படுகின்றதா என்று மதிப்பீடு செய்கின்றது. முகாமைத்துவமானது மீளப்பெறுவதிலான நிச்சயமற்றதன்மையினை குறிப்பிடும் ஏதேனும் ஏனைய காரணிகள் குறித்து முகாமைத்துவம் அறிந்திருந்தால் மற்றும் அவை நிலுவையிலுள்ள காலம் ஆகியவற்றை கருத்திற்கொண்டு அத்தகைய வலுக்குன்றல்களை மதிப்பிடுவதில் பகுத்தறிவினைப் பயன்படுத்துகின்றது.

**(viii) நிதியியல் சொத்துக்களின் வலுக் குன்றல்கள்**
ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும்,ஒரு நிதியியல் சொத்து அல்லது நிதியியல் சொத்துக்களின் தொகுதி ஒன்று வலுக்குன்றியுள்ளது என ஏதேனும் மெய்யான சான்று காணப்படுகின்றதா என்று குழுவானது மதிப்பிடுகின்றது. நிலுவையிலுள்ள காலம் மற்றும் மீளப்பெறுந்தன்மையில் நிச்சயமற்றதன்மையினை குறிக்கும் ஏதேனும் வேறு காரணிகளை முகாமைத்துவம் அறிந்திருந்தால் அத்தகைய வலுக்குன்றலினை மதிப்பிடுவதில் பகுத்தறிவினைப் பயன்படுத்துகின்றது.

(உ) **பொறுப்பேற்புக்கள்**

**(i) வரையறுக்கப்பட்ட நலத்திட்டம்**
இலங்கையினைத் தளமாகக் கொண்டு பணியாட்களது ஓய்வுபெறல் நலன் திட்டத்தின் செலவானது ஓர் காப்பீட்டுக் கணிப்பீட்டு பெறுமதியிடலை பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகின்றது. காப்பீட்டுக்கணிப்பு பெறுமதியானது வட்டி வீதம்,சம்பள அதிகரிப்பு வீதங்கள், விசேட வட்டம், ஓய்வுபெறல் வயது மற்றும் கம்பனியின் நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி தொடர்பான அனுமானங்களின் அடிப்படையிலானதாகும். திட்டத்தின் நீண்டகாலத் தன்மையின் காரணமாக அத்தகைய மதிப்பீடுகள் குறிப்பிடத்தக்க நிச்சயமற்றதன்மைக்கு ஆட்பட்டதாகும். (குறிப்பு 2.4.16(ய) இனைப் பார்க்கவும்)

**(ii) ஆதனம் பொறி மற்றும் இயந்திரத்தின மீள் மதிப்பீடு**
ஓர் சுயாதீன தகமையுடைய மதிப்பீட்டாளரின் சேவைகளை பயன்படுத்தி காணி மற்றும் கட்டிடங்கள் மற்றும் விமானச் சமையலறை உபகரணங்கள் மீள்மதிப்பீட்டு தொகைகளில் அளவிடப்படுகின்றன. இத்தகைய மதிப்பீட்டாளர் நியாயமான மதிப்பை தீர்மானிக்க அனுமானங்களையும் மதிப்பீட்டு நுட்பங்களையும் பயன்படுத்துகிறார். மதிப்பீட்டின் அடிப்படை குறிப்பு 4 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

***2.4 குறிப்பிடத்தக்க கணக்கீட்டு கொள்கைகளின் தொகுப்பு***

2.4.1 **வெளிநாட்டு நாணயப் பெயர்வு**
நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், இது குழுமத்தின் செயற்பாட்டு மற்றும் சமர்ப்பித்தல் நாணயமாகும். வெளிநாட்டு நாணயங்களிலான கொடுக்கல் வாங்கல்கள் ஆரம்பத்தில் கொடுக்கல் வாங்கல் இடம்பெற்ற தினத்தில் உள்ள செயற்பாட்டு நாணயத்தின் மாற்றுவீதத்தில் பதிவு செய்யப்படுகின்றது. வெளிநாட்டு நாணயங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அறிக்கையிடப்படும் தினத்தில் உள்ள செயற்பாட்டு நாணயத்திற்கு பரிமாற்றல் வீதத்தை பயன்படுத்தி திருப்பப்படுகின்றன. இதன் விளைவாக ஏற்படும் வெளிநாட்டு பரிமாற்றல் இலாபங்கள் மற்றும் நட்டங்கள் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது. நாணயத்தில் வரலாற்று ரீதியான கிரயத்தில் அளவிடப்படும் நிதியியலல்லாத உருப்படிகள் ஆரம்ப கொடுக்கல் வாங்கல் தினங்களில் உள்ள நாணயப் பரிமாற்று வீதங்களை பயன்படுத்தி மாற்றப்படுகின்றன.

2.4.2 **வரி விதிப்பு**
வருமான வரி செலவு தற்போதைய மற்றும் பிற்போடப்பட்ட வரியை உள்ளடக்கியது. இது ஒரு வணிக கூட்டுடன் தொடர்புடைய அளவைத் தவிர, இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது,. நிச்சயமற்ற வரி சிகிச்சைகள் உட்பட வருமான வரி தொடர்பான வட்டி மற்றும் அபராதங்கள் வருமான வரிகளின் வரையறையை பூர்த்தி செய்யவில்லை என்று குழு தீர்மானித்துள்ளது, எனவே IAS 37 விதிகள், எதிர்பாரா பொறுப்புகள் மற்றும் எதிர்பாரா சொத்துகளின் கீழ் அவற்றைக் கணக்கிட்டுள்ளது.

**(i) தற்போதைய வருமான வரி**
தற்போதைய வரி என்பது ஆண்டுக்கு வரி செலுத்தக்கூடிய வருமானம் அல்லது நட்டம், செலுத்த வேண்டிய அல்லது பெறத்தக்க வரி மற்றும் முந்தைய ஆண்டுகளைப் பொறுத்தவரை செலுத்த வேண்டிய அல்லது பெறத்தக்க வரிக்கு ஏதேனும் சரிசெய்தல் ஆகியவை அடங்கும் தற்போதைய வரி செலுத்த வேண்டிய அல்லது பெறத்தக்க தொகை எதிர்பார்க்கப்படும் வரி தொகையின் சிறந்த மதிப்பீடாகும் ஏதேனும் இருந்தால், வருமான வரி தொடர்பான நிச்சயமற்ற தன்மையை பிரதிபலிக்கும் வகையில் செலுத்தப்பட வேண்டும் அல்லது பெறலாம். அறிக்கையிடல் திகதியில் இயற்றப்பட்ட அல்லது கணிசமாக இயற்றப்பட்ட வரி விகிதங்களைப் பயன்படுத்தி இது அளவிடப்படுகிறது. தற்போதைய வரியில் ஈவுத்தொகையிலிருந்து எழும் எந்தவொரு வரியும் இதில் அடங்கும்.

தற்போதைய வரி சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் குறிப்பிட்ட வரைமுறைகளை பூர்த்தி செய்தால் மட்டுமே ஈடுசெய்யப்படும் கம்பனி.

**(அ) உள்ளூர் வரிவிதிப்பு**
2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க இறைவரிச் சட்டத்தின் அடிப்படையில் கம்பனியானது அதன் அனைத்து வணிக நடவடிக்கைகளிலும் 1 ஏப்ரல் 2018 முதல் வருமான வரிக்கு பொறுப்பாயுள்ளது.

**(ஆ) வெளிநாட்டு வரிவிதிப்பு**
கம்பனியானது அதன் வெளிநாட்டு செயற்பாடுகளில் இரட்டை வரிவிதிப்பு உடன்படிக்கை காணப்படாத நாடுகளில் வரிக்கு பொறுப்பாயுள்ளது. எவ்வாறாயினும், நடைமுறையாண்டில் கம்பனிக்கு கிடைக்கக்கூடிய எடுத்துச் செல்லப்படும் வரி நட்டங்களின் நிமித்தம் எவ்வித பொறுப்புமில்லை.

**துணை நிறுவனம்-வரையறுக்கப்பட் இலங்கை கேட்டரிங்**
வருமான வரிச் செலவினமானது தற்போதைய மற்றும் ஒத்திவைக்கப்பட்ட வரியினை உள்ளடக்குகின்றது. வருமான வரிச் செலவினமானது உரித்துவத்தில் நேரடியாக அங்கீகரிக்கப்படும் உருப்படிகள்

தொடர்பான அளவினைத் தவிர்த்து இலாபம் அல்லது நட்டக் கணக்கில் அங்கீகரிக்கப்படுகின்றது. இத்தகைய சம்பவங்களில் உரித்துவத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது.

முதலீட்டு சபையுடனான ஒப்பந்தத்தின் பிரகாரம் 31 மே 2021 வரை (BOI) விமானச் சமையலறை மற்றும் மாற்றுப்பயண உணவகத்திலிருந்து வரும் வருமானமானது வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. ஏனைய மூலங்களிலிருந்து வரும் வருமானமானது சாதாரண வரி வீதத்தில் வரி விதிக்கப்படும

**(ii) பிற்போடப்பட்ட வருமான வரி**

பிற்போடப்பட்ட வருமான வரியானது பொறுப்பு முறையினை பயன்படுத்தி வழங்கப்படுகின்றது. அம்முறையில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வரி மூலங்கள் மற்றும் அவை நிதியியல் அறிக்கையிடல் நோக்கங்களுக்காக கொண்டுள்ள தொகைகள் இடையான தற்காலிக வித்தியாசங்கள் என்ற முறை பயன்படுத்தப்படுகின்றது.

பிற்போடப்பட்ட வரிகள் இயற்றப்பட்ட சட்டங்களுக்கு ஏற்ப அல்லது அறிக்கையிடும் திகதியன்று நடைமுறையில் இயற்றப்படும் சட்டங்களுக்கு ஏற்ப அவை மீளமைக்கப்படும் வேளை பிரயோகிக்கப்படும் என எதிர்பார்க்கப்படும் தற்காலிக மாற்றங்களின் வீதத்தில் அளவிடப்படுகின்றது.

பிற்போடப்பட்ட வரிச் சொத்து கழிபடக் கூடிய தற்காலிக வேறுபாடுகள் மற்றும் பயன்படுத்தப்படாத வரி இழப்புகள் என்பவற்றுக்காக அங்கீகரிக்கப்படுகின்றது, இதன் அளவு அவற்றுக்கு எதிராக உள்ள வரிவிதிக்கப்படக் கூடிய இலாபம் எதிர்காலத்தில் பயன்படுத்தக் கிடைக்கும் சாத்தியமாக அமைந்துள்ளது. பிற்போடப்பட்ட வரிச்சொத்துக்கள் ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் மீளாய்வு செய்யப்பட்டு தொடர்புடைய வரி நன்மை உணரப்பட சாத்தியமில்லை என்ற அளவு வரை குறைக்கப்படுகின்றது.

### 2.4.3 ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

**(அ) செலவு மற்றும் பெறுமதியிடல்**

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களது அனைத்து உருப்படிகளும் ஆரம்பத்தில் கிரயத்தில் பதிவிடப்படும். கிரயமானது கையகப்படுத்தல் மற்றும் கட்டுமாணம் ஆகியவற்றுடன் நேரடியாக உடைமையாக்கத்தக்க செலவினங்களை உள்ளடக்குகின்றது. காணி மற்றும் கட்டிடங்கள் மற்றும் விமானச் சமையலறை உபகரணங்கள் பின்னர் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருப்பின், அத்தகைய மீள்மதிப்பீடு செய்யப்பட்ட ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட தொகைகளிலிருந்து ஏதேனும் பின்னரான அவற்றிலான பெறுமானத்தேய்வு மற்றும் வலுக்குன்றல் என்பவை கழிக்கப்பட்டு கொண்டு செல்லப்படுகின்றது. ஏனைய அனைத்து ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் வரலாற்றுக் கிரயத்திலிருந்து பெறுமானத்தேய்வு மற்றும்/அல்லது ஏதேனும் திரண்ட வலுக்குன்றல் நட்டங்கள் என்பன கழிக்கப்பட்டு குறிப்பிடப்படுகின்றன.

மீள்மதிப்பீட்டு தொகைகளில் அளவிடப்பட்ட காணி மற்றும் கட்டிடங்கள் மற்றும் விமான சமையலறை உபகரணங்களிலான ஏதேனும் மீள்மதிப்பீட்டு மிகைகள் ஏனைய விரிவான வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்டு உரித்துவத்தில் மீள்மதிப்பீட்டு ஒதுக்கமாக திரட்டிக்கொள்ளப்படுகின்றது. இதற்கு விதிவிலக்காக, இலாபம் அல்லது நட்டக்கூற்றில் முன்னர் அங்கீகரிக்கப்பட்ட அதே சொத்திலான ஓர் மீள்மதிப்பீட்டு வீழ்ச்சியினை திருப்பும் அளவிற்கு அவ்வதிகரிப்பானது இலாபம் மற்றும் நட்டக் கூற்றில்அங்கீகரிக்கப்படும். ஓர் மீள்மதிப்பீட்டு பற்றாக்குறையானது இலாபம் அல்லது நட்டக்கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது. இதற்கு விதிவிலக்காக, சொத்து மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்தில் அங்கீகரிக்கப்பட்ட அதே சொத்திலான ஓர் நடைமுறையிலுள்ள மிகையினை ஈடுசெய்கின்றது.

மீள்மதிப்பீடு செய்யப்பட்ட சொத்தின் நியாயப் பெறுமதியானது அதன் கொண்டு செல்லப்படும் தொகையிலிருந்து வித்தியாசப்படாததை உறுதிப்படுத்துவதற்காக கணிசமானளவு போதுமை நிகழ்மையுடன் பெறுமதியிடல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அதன்பின்னரான கிரயங்கள் சொத்தின் கொண்டுசெல்லப்படும் தொகையினுள் உள்ளடக்கப்படுகின்றது அல்லது ஓர் தனிப்பட்ட சொத்தாக,உகந்தவாறு அங்கீகரிக்கப்படுகின்றது. இது அந்த உருப்படியுடன் இணைந்த எதிர்கால பொருளாதார நலன்கள் கம்பனிக்கு உள்வரும் மற்றும் கிரயமானது நியாயமானவாறு அளவிடக்கூடியதாயிருக்கலாம் எனும் சாத்தியப்பாடு காணப்பட்டால் மாத்திரமே மேற்கொள்ளப்படுகின்றது.

பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புச் செலவினங்கள் அவை ஏற்பட்ட காலப்பகுதியில் இலாபம் மற்றும் நட்டக் கூற்றில் கட்டணமிடப்படும்.

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் ஏனையவற்றுக்கிடையில் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது:

**(i) விமானத்தின் சுழற்சி உதிரிப் பாகங்கள்**

விமானத்தினது சுழற்சி உதிரிப்பாகங்கள்,இவை உருவச் சொத்துக்களாக கருதப்படுகின்றன, ஆரம்பத்தில் கிரயத்தில் பதிவிடப்பட்டு அதன் மதிப்பிடப்பட்ட பயனுள்ள வாழ்நாள் காலத்தில் பெறுமானத்தேய்வு செய்யப்படுகின்றன. இந்த உருப்படியானது “விமானம் தொடர்பான உபகரணம்” இன் கீழ் ஒன்றுசேர்க்கப்பட்டுள்ளன.

**(ii) மூலதன நடைமுறை வேலைகள்**

மூலதன நடப்பு வேலைகள் அதன் கிரயத்தில் குறிப்பிடப்படுவதுடன் அவை கையகப்படுத்தப்பட்ட தினத்திலிருந்து செயல்நிலைப்படுத்தப்பட்ட திகதி வரையான கட்டணப்படுத்தப்படும் அனைத்து கிரயங்களையும் உள்ளடக்கும். செயல்நிலைப்படுத்தப்பட்டதன் பின்னர், மூலதன நடப்பு வேலைகள் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பவற்றின் கீழ்வரும் பொருத்தமான வகுப்பிற்கு மாற்றல் செய்யப்படுவதுடன் அதன் மதிப்பிடப்பட்ட பயன்பாட்டு வாழ்நாள் வரை பெறுமானத்தேய்வு செய்யப்படுகின்றன.

**(ஆ) பெறுமானத் தேய்வு**

பெறுமானத் தேய்விற்கான ஏற்பாடானது நேர்கோட்டு முறையினை பயன்படுத்தி அதன் கிரயத்தில் அல்லது அவற்றின் பெறுமதியிடல்களில் கணிப்பிடப்படுகின்றது. இறையிலி நிலம் தவிர்ந்த அனைத்து ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களில் இது கணிப்பிடப்படுகின்றது.அத்தகைய தொகைகளை பதிவழிப்பதற்காக சமனான தவணைகளில் பின்வரும் மதிப்பிடப்பட்ட பயன்பாட்டு வாழ்நாட்கள் பயன்படுத்தப்படுகின்றன.

| | |
|---|---|
| விமானம்தொடர்பான உபகரணங்கள் | - 8 வருடங்கள் குறையாத அல்லது குத்தகை காலம் |
| பொறி மற்றும் உபகரணங்கள் | - உபகரணத்தின் வகையின் அடிப்படையில் 3 முதல் 10 வருடங்கள் வரையான காலப்பகுதிக்கு மேல் |
| கட்டிடங்கள் | - எதிர்பார்க்கப்படும் பயன்பாட்டு வாழ்நாட்கள் 15 முதல் 50 வருடங்களுக்கு மேல் |
| குத்தகைகள் மீதான விமானம் குறித்த மேம்படுத்தல்கள் | - 10 வருடங்கள் குறையாத அல்லது குத்தகை காலம் |

எஞ்சிய பெறுமதிகள், பயன்பாட்டு வாழ்நாட்கள் மற்றும் பெறுமானத்தேய்வு முறை என்பன ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் மீளாய்வு செய்யப்பட்டு பொருத்தமானவாறு பெரும்பாலும் செம்மையாக்கப்படுகின்றன.

மேற்குறிப்பிடப்பட்ட பெறுமானத்தேய்வு வீதங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அனைத்து காலப்பகுதிக்கும் பிரயோகிக்கப்பட்டுள்ளன.

# நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

**(இ) அங்கீகரிப்பு நீக்கம்**
ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணத்தின் ஓர் உருப்படியானது அது விற்பனை செய்யப்பட்டால் அல்லது அதன் பயன்பாட்டிலிருந்து அல்லது விற்பனையிலிருந்து எவ்வித எதிர்கால பொருளாதார நலன்களும் எதிர்பார்க்கப்படாவிட்டால் அது அங்கீகரிப்பு நீக்கம் செய்யப்படுகின்றது. சொத்தினது அங்கீகரிப்பு நீக்கத்தில் எழும் ஏதேனும் இலாபம் அல்லது நட்டம் (சொத்தின் கொண்டு செல்லல் தொகைக்கும் மற்றும் அதன் தேறிய விற்பனைத் தொகைக்கும் இடையேயான வித்தியாசமான கணிப்பிடப்படுகின்றது) சொத்து அங்கீகரிப்பு நீக்கம் செய்யப்பட்ட அறிக்கையிடப்படும் காலப்பகுதியில் இலாபம் அல்லது நட்டக்' கூற்றில் உள்ளடக்கப்படுகின்றது.

## 2.4.4 அருவச் சொத்துக்கள்
அருவச் சொத்துக்கள், சொத்துக்களின் உடமையாக்கலுக்கு சாத்தியப்படக்கூடிய எதிர்கால பொருளாதார நலன்கள் நிறுவனத்திற்கு உட்பாய்ச்சப்படுதல் மற்றும் சொத்துக்களின் கிரயமானது நம்பிக்கையுடன் அளவிடப்படமுடியுமாயின் அங்கீகரிக்கப்படுகின்றன. இதற்கமைய இந்தச் சொத்துக்கள் நிதி நிலைமைக் கூற்றில் கிரயத்திலிருந்து திரண்ட பெறுமதி குறைப்புகள் மற்றும் ஏதேனும் திரண்ட வலுக்குன்றல் நட்டங்களைக் கழித்ததன் பின்னர் குறிப்பிடப்படுகின்றது.

கையகப்படுத்தும் அல்லது விருத்திசெய்யப்படும் கணினி மென்பொருளானது அதனுடன் தொடர்புடைய வன்பொருளிலிருந்து பிரித்தெடுக்க இயலுமாயின் அதன் கிரயமானது தனியாக மூலதனமயமாக்கப்பட்டு 5 வருடங்களுக்கு விஞ்சாத காலப்பகுதியில் ஓர் நேர்கோட்டு அடிப்படையில் பெறுமதி குறைப்பு செய்யப்படுகின்றது. ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் பெறுமதிக் குறைப்பு காலம் மற்றும் பெறுமதிக் குறைப்பு முறையானது மீளாய்வு செய்யப்படுகின்றன. ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் இந்த சொத்தின் கொண்டுசெல்லப்படும் பெறுமதியானது, சூழ்நிலைகளிலான நிகழ்வுகள் அல்லது மாற்றங்கள் கொண்டுசெல்லப்படும் பெறுமதியினை மீளப்பெற இயலாது எனக் குறிப்பிடின் வலுக்குன்றலுக்காக மீளாய்வு செய்யப்படுகின்றது.

## 2.4.5 குத்தகைகள்
ஓர் ஒப்பந்தத்தின் ஆரம்பத்தில், குழுமமானது அவ் ஒப்பந்தம் ஓர் குத்தகையா அல்லது ஓர் குத்தகையினை உள்ளடக்கியுள்ளதா என்று மதிப்பீடு செய்கின்றது. ஒப்பந்தமானது ஓர் இனங்காணப்பட்ட சொத்தினை ஒரு காலப்பகுதிக்கு ஓர் மறுபயனுக்கு பரிமாற்றல் செய்யப்பட்டு அதன் பயன்பாட்டினை கட்டுப்படுத்துவதற்கான உரிமையினை தெரிவிக்குமாயின் அவ் ஒப்பந்தம் ஓர் குத்தகை எனப்படும் அல்லது இவற்றைக் கொண்டிருந்தால் குத்தகை எனப்படும். ஓர் இனங்காணப்பட்ட சொத்தின் பயன்பாட்டினை கட்டுப்படுத்துவதற்காக உரிமையினை ஒரு ஒப்பந்தம் தெரிவிக்கின்றதா என்பதை மதிப்பிடுவதற்காக குழமமானது பின்வருவனவற்றை மதிப்பீடு செய்கின்றது:-

- ஒப்பந்தமானது இனங்காணப்பட்ட சொத்தின் பயன்பாட்டினை உள்ளடக்கியுள்ளது. இது வெளிப்படையாக அல்லது மறைமுகமாக குறிப்பிடப்படலாம் மற்றும் பௌதீகரீதியாக வேறுபட்டிருத்தல் வேண்டும் அல்லது ஒரு பௌதீகரீதியான வேறுபட்ட சொத்தின் கொள்திறன் அனைத்தையும் கணிசமானளவு பிரதிநிதித்துவம் செய்திருத்தல் வேண்டும். வழங்குநர் வலிமையுடைய பதிலீட்டாளர் உரிமையினை கொண்டிருந்தால், சொத்தானது அங்கீகரிக்கப்படாது
- குழுமமானது சொத்தின் பயன்பாட்டிலிருந்து பயன்பாட்டுக்காலம் முழுவதும் அனைத்து பொருளாதார நலன்களையும் கணிசமானளவுக்கு பெற்றுக்கொள்வதற்கான உரிமையினைக் கொண்டுள்ளது. மேலும்
- குழுமமானது சொத்தின் பயன்பாட்டினை வழிநடத்துவதற்கான உரிமையினை கொண்டுள்ளது. குழுமமானது சொத்தை எவ்வாறு பயன்படுத்துவது மற்றும் என்ன நோக்கத்திற்காக பயன்படுத்துவது என்று மாற்றுவதற்கு மிகவும் பொருத்தமான தீர்மானம் மேற்கொள்ளும் உரிமைகளைக் கொண்டிருந்தால் இந்த உரிமையினை கொண்டிருக்கும். அரிதான சந்தர்ப்பங்களில், சொத்தானது எவ்வாறு மற்றும் எந்த
- நோக்கத்திற்காக பயன்படுத்தப்படல் வேண்டும் என்ற தீர்மானம் முன்னரே தீர்மானிக்கப்பட்டிருந்தால், பின்வரும் சந்தர்ப்பங்களில் குழுமத்திற்கு சொத்தின் பயன்பாட்டினை வழிநடத்துவதற்கான உரிமையினைக் கொண்டிருக்கும்:
  - குழுவானது சொத்தினைப் பயன்படுத்துவதற்கான உரிமையினைக் கொண்டிருக்கும், அல்லது
  - குழுமமானது சொத்தானது எவ்வாறு மற்றும் என்ன நோக்கத்திற்காக பயன்படுத்தப்படும் என்று முன்தீர்மானிக்கும் விதத்தில் சொத்தினை வடிவமைத்திருந்தால்
  - குழுமமானது சொத்தானது எவ்வாறு மற்றும் என்ன நோக்கத்திற்காக பயன்படுத்தப்படும் என்று முன்தீர்மானிக்கும் விதத்தில் சொத்தினை வடிவமைத்திருந்தால்

ஆரம்பத்தில் அல்லது குத்தகைக் கூறுகளைக் கொண்ட ஒரு ஒப்பந்தத்தின் மீள் மதிப்பீட்டில், குழு ஒவ்வொரு குத்தகைக் கூறுகளுக்கும் ஒப்பந்தத்தில் உள்ள கருத்தை அவற்றின் ஒப்பீட்டு தனித்த விலைகளின் அடிப்படையில் ஒதுக்குகிறது.

எவ்வாறாயினும், குத்தகைதாரராக இருக்கும் காணி மற்றும் கட்டிடங்களின் குத்தகைக்கு, குத்தகை அல்லாத கூறுகளை பிரிக்க வேண்டாம் என்றும், குத்தகை மற்றும் குத்தகை அல்லாத கூறுகளை ஒற்றை குத்தகைக் கூறுகளாகக் கணக்கிடவும் குழு தேர்ந்தெடுத்துள்ளது.

### *2.4.5.1 பயன்படுத்துவதற்கான உரிமையுள்ள சொத்துக்கள்*
குழுமமானது ஓர் பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்தினையும் மற்றும் ஓர் குத்தகை பொறுப்பினையும் குத்தகை ஆரம்பிக்கப்பட்ட திகதியில் அங்கீகரிக்கின்றது.

பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்தானது ஆரம்பத்தில் கிரயத்தில் அளவிடப்படுவதுடன் ஆரம்பத் தொகையான குத்தகை பொறுப்பினை, ஆரம்பிக்கப்பட்ட திகதியில் அல்லது அதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் குத்தகை கொடுப்பனவுகளுக்கு செம்மையாக்கப்பட்டு, ஏதேனும் ஆட்பட்ட ஆரம்ப நேரடிச் செலவுகள் மற்றும் உள்ளார்ந்த சொத்தினை கழற்றுவதற்கான மற்றும் அகற்றுவதற்கான ஓர் மதிப்பிடப்பட்ட செலவுகள் அல்லது உள்ளார்ந்த சொத்தினை புணருத்தாரணம் செய்வதற்கு அல்லது அது நிறுவப்பட்டுள்ள தளத்தினை புணருத்தாரணம் செய்வதற்கு, அதிலிருந்து ஏதேனும் பெறப்பட்ட குத்தகை சலுகைகளை கழித்தல் என்பனவாகும்

**(அ). விமான மற்றும் உதிரி என்ஜின்களின் குத்தகை**
கம்பனியானது விமானங்களையும் என்ஜின்களையும் அதன் வானூர்தி தொகுதியில் குத்தகைக்கு எடுக்கின்றது. விமானங்கள் மற்றும் உதிரி என்ஜின்களின் குத்தகையானது பொதுவாக 4 முதல் 12வருடங்களுக்கு செல்லுபடியாகும்.

விமானக் குத்தகைகள் விமானத்தினை திருப்பிக் கொடுக்கும் நிலைக்கான ஏற்பாட்டினை உள்ளடக்குகின்றது குத்தகையாளரினால் உள்ளார்ந்த சொத்தினை நியதிகள் மற்றும் நிபந்தனைகளினால் தேவைப்படும் நிலைமைக்கு புணருத்தாரணம் செய்வதற்கு ஆட்படும் செலவினங்களிலான ஓர் மதிப்பீடானது கடப்பாடு உருவாக்கப்பட்டவுடன் பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துடன் கூட்டப்படுகின்றது. மற்றும் பழுதுபார்த்தல் செலவினங்கள் (விமானத்தின் கனமான பராமரிப்பு, என்ஜின் பழுதுபார்ப்பு மற்றும்

தரையிறக்கல் பொறி பழுதுபார்த்தல் செலவினங்கள் தவிர்த்தவை) ஓர் ஆட்பட்ட அடிப்படையில், பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கையானது குறிப்பு 2.4.15 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

குத்தகையின் ஆரம்பத்தில் கொடுப்பனவு செய்யப்பட்ட வைப்பானது மற்றும் ஏனைய குத்தகைக் கொடுப்பனவுகள் அனைத்தும் அதே கொடுக்கல் வாங்கலிலிருந்து உருவாகின்றது. எனவே, ஆரம்பத்தில் செலுத்தப்பட்ட வைப்பின் முதல் தொகைக்கும் மற்றும் நிகழ்காலப் பெறுமதிக்கும் இடையேயான வித்தியாசமானது குத்தகையாளரால் செலுத்தப்படவேண்டிய ஓர் மேலதிக தொகையாக கருதப்படுகின்றது.

வைப்பானது SLFRS 9 இன் நோக்கெல்லையினுள் காணப்படுவதுடன் இது ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் கணக்கீடு செய்யப்படல் வேண்டுமென்பதுடன் முதல் தொகைக்கும் வைப்பினது நியாயப் பெறுமதிக்கும் இடையேயான மிகையானது SLFRS 16 குத்தகைகள் நோக்கெல்லையினுள் காணப்படுதல் வேண்டும். வைப்புக்களுக்கான கணக்கீட்டுக் கொள்கைகள் குறிப்பு 2.4.9 இன் கீழ் வழங்கப்பட்டுள்ளது.

12 மாதங்களுக்குள் குத்தகைக் காலம் நிறைவடையும் விமானக் குத்தகைகள் கருத்திலெடுக்கப்படாது குறுங்கால குத்தகைகள் போன்று கணக்கீடு செய்யப்பட்டு இலாபம் அல்லது நட்டக் கூற்றில் விமானக் குத்தகை வாடகைகளின் கீழ் உள்ளடக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

#### (ஆ). காணிமற்றும் கட்டடங்களுக்கான குத்தகை

குழுமமானது இலங்கையிலும் மற்றும் வெளிநாடுகளிலும் அதன் காணி மற்றும் கட்டிடங்களை குத்தகைக்கு எடுக்கின்றது. காணி மற்றும் கட்டிடங்களின் குத்தகையானது பொதுவாக 2 முதல் 8 வருடங்களுக்கு செல்லுபடியாகும். சில காணி மற்றும் கட்டிடங்களின் குத்தகையானது, ரத்து செய்யப்படமுடியாத ஒப்பந்தக் காலப்பகுதிக்கு முன்னர் குழுமத்தினால் நிறைவேற்றக்கூடிய விரிவாக்கல் தெரிவுரிமைகளைக் கொண்டிருக்கும். செயல்படுத்தத்தக்கவாறு, குழுமமானது புதிய குத்தகைகளில் செயற்பாட்டு நெகிழ்வுத்தன்மையினை வழங்குவதற்காக விரிவாக்கல் தெரிவுரிமைகளை உள்ளடக்குவதற்கு முனைகின்றது.

வைத்திருக்கப்படும் விரிவாக்கல் தெரிவுரிமைகள் குழுமத்தினால் மாத்திரமே கையாளப்படலாம், குத்தகைக்கு விடுபவரினால் இயலாது.

குத்தகையின் ஆரம்பத்தில் குழுமமானது விரிவாக்கல் தெரிவுரிமைகளை கையாளுவதற்கு நியாயமான நிச்சயம் உள்ளதா என்று மதிப்பீடு செய்கின்றது. குழுமமானது அதன் கட்டுப்பாட்டினுள் உள்ள சூழ்நிலைமைகளில் குறிப்பிடத்தக்க மாற்றம் அல்லது குறிப்பிடத்தக்க நிகழ்வு காணப்படுமாயின் தெரிவுரிமைகளை கையாளுவதற்கு நியாயமான நிச்சயம் உள்ளதா என்று மீள்மதிப்பீடு செய்கின்றது.

#### (இ). வாகனங்களுக்கான குத்தகை

குழுமத்தின் வாகனக் குத்தகைள் 2 முதல் 5 வருட காலப்பகுதியினைக் கொண்டதாகும்.

#### (ஈ). IT மற்றும் ஏனைய சாதனங்களுக்கான குத்தகை

குழுமமானது தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் ஏனைய இயந்திரங்களை ஒரு வருடம் முதல் மூன்று வருடங்கள் வரையான ஒப்பந்தக் காலப்பகுதிக்கு குத்தகைக்கு எடுக்கின்றது. இந்த குத்தகைகளுக்கு பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள் மற்றும் குத்தகை பொறுப்புக்களை அங்கீகரிக்காது இருப்பதற்கு தெரிவுசெய்துள்ளது. உரிய குத்தகைக் கொடுப்பனவுகள் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

#### சொத்துக்களைப் பயன்படுத்துவதற்கான உரிமையின் தேய்மானங்கள்

ஆரம்ப திகதியிலிருந்து, பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்தினது பயன்பாட்டு வாழ்நாளின் இறுதி அல்லது குத்தகை காலப்பகுதியின் இறுதி இவற்றில் எது முன்னர் வருகிறதோ அதற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் நேர்கோட்டு முறையினை பயன்படுத்தி பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்தானது பின்னர் பெறுமானத்தேய்வு செய்யப்படுகின்றது ஆதனம் மற்றும் உபகரணம் போன்ற அதே அடிப்படையிலேயே பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்களின் மதிப்பீடுசெய்யப்பட்ட பயன்பாட்டு வாழ்நாட்கள் தீர்மானிக்கப்படுகின்றன. இதற்கும் மேலாக, பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்தானது வலுக்குன்றல் நட்டங்களினால், ஏதேனும் இருப்பின், காலாகாலம் குறைக்கப்படுவதுடன் மற்றும் குத்தகை பொறுப்பின் சில மீள் அளவீடுகளுக்காக செம்மையாக்கப்படுகின்றன.

#### *2.4.5.2 குத்தகை கடன் பொறுப்பு*

ஆரம்பிக்கப்பட்ட திகதியில் கொடுப்பனவுசெய்யப்படாத குத்தகைக் கொடுப்பனவுகளின் நிகழ்காலப் பெறுமதியில் குத்தகைப் பொறுப்பானது ஆரம்பத்தில் அளவீடு செய்யப்படுகின்றது. இது குத்தகையின் உள்ளார்ந்த வட்டி வீதத்தினை பயன்படுத்தி கழிவிறக்கம் செய்யப்படுவதுடன், வட்டி வீதமானது உடனடியாக தீர்மானிக்கப்படமுடியாவிடின், குழுமத்தின் அதிகரிக்கும் முறை வட்டி வீதத்தினாலாகும். பொதுவாக, குழுமமானது அதன் அதிகரிக்கும் முறை கடன்பெறல் வட்டிவீதத்தினை கழிவு வீதமாக பயன்படுத்துகின்றது.

குத்தகை பொறுப்பு அளவீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள குத்தகைகொடுப்பனவுகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன

- நிலையான கொடுப்பனவுகள்,பொருளிலான நிலையான கொடுப்பனவுகள் உள்ளடங்களாக
- ஓர் சுட்டி அல்லது ஒரு வட்டி வீதத்தில் தங்கியுள்ள மாற்றமடையும் குத்தகைக் கொடுப்பனவுகள், ஆரம்பித்த திகதியில் சுட்டி அல்லது வட்டிவீதத்தினை பயன்படுத்தி
- ஆரம்பநிலையில் அளவிடப்படுகின்றது
- ஓர் எஞ்சிய பெறுமதி உத்தரவாதத்தின் கீழ் செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் தொகைகள் ஓர் கொள்வனவு தெரிவுரிமையின் கீழ் உள்ள கையாளுதல் விலையினை குழுமமானது நிச்சயமாக கையாளும் என நியாயமாக காணப்பட்டால், குழுமமானது ஓர் நீடிப்பு தெரிவுரிமையினை கையாளும் என நியாயமான நிச்சயம் காணப்பட்டால் ஓர் தெரிவுரிமையுள்ள புதுப்பித்தல் காலத்தில் குத்தகை கொடுப்பனவுகள், மற்றும் குழுமமானது முன்னரே முடிவுறுத்தும் என நியாயமான நிச்சயம் காணப்பட்டாலொழிய ஓர் குத்தகையின் முன்னர் முடிவுறுத்துவதற்கான தண்டப்பணங்கள்.

குத்தகை பொறுப்பானது பயனுறுதிமிக்க வட்டி முறையினை பயன்படுத்தி பெறுமதிக் குறைப்பு கிரயத்தில் அளவிடப்படுகின்றது. இது பின்வரும் சந்தர்ப்பங்களில் மீள் அளவீடு செய்யப்படுகின்றது. ஓர் சுட்டியில் அல்லது வட்டி வீதத்திலிருந்தான ஓர் மாற்றத்திலிருந்து எழக்கூடிய எதிர்கால குத்தகை கொடுப்பனவுகளிலான மாற்றம் காணப்பட்டால், ஓர் எஞ்சிய பெறுமதி உத்தரவாதத்தின் கீழ் செலுத்தவேண்டிய எதிர்பார்க்கும் தொகையினது குழுமத்தின் மதிப்பீட்டில் ஒரு மாற்றம் காணப்பட்டால், அல்லது குழுமமானது ஓர் கொள்வனவினை, ஓர் நீடிப்பினை அல்லது முடிவுறுத்தல் தெரிவுரிமையினை கையாளுமா என்ற அதன் மதிப்பீட்டினை குழுமம் மாற்றியிருந்தால்.

குத்தகை பொறுப்பானது இவ்வாறு மீள அளவிடப்படும்போது, ஓர் ஏற்புடைய செம்மையாக்கல் பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்தின் கொண்டு செல்லல் தொகையில் மேற்கொள்ளப்படும் அல்லது பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்தின் கொண்டுசெல்லல் தொகையானது பூச்சியத்திற்கு குறைக்கப்பட்டிருந்தால் அது இலாபம் அல்லது நட்டத்தில் பதியப்படுகின்றது.

# நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

*2.4.5.3 குறுகிய கால குத்தகைகள் மற்றும் குறைந்த மதிப்பு சொத்துக்கள்*

தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள் உள்ளடங்களான குறைவான பெறுமதியுடைய சொத்துக்களது குத்தகைகளுக்கு அல்லது 12 மாதங்கள் அல்லது அதற்கு குறைவான குத்தகை காலத்தினைக் கொண்ட குறுங்கால குத்தகைகளுக்கு பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள் மற்றும் குத்தகை பொறுப்புக்களை அங்கீகரிக்காது இருப்பதற்கு குழுமமானது தெரிவுசெய்துள்ளது. குழுமமானது இந்த குத்தகைகளுடன் இணைந்த குத்தகை கொடுப்பனவுகளை குத்தகைக் காலப்பகுதியில் ஓர் நேர்கோட்டு அடிப்படையில் ஓர் செலவினமாக அங்கீகரிக்கின்றது.

*2.4.5.4 கோவிட்-19 தொடர்பிலான வாடகை சலுகைகள்*

கொவிட்-19 தொடர்புடைய வாடகைச் சலுகைகளை குழுமம் பிரயோகித்துள்ளது – IFRS 16 இற்கான திருத்தம். தகுதியான வாடகைச் சலுகைகள் கொவிட்-19 தொற்று நோயின் நேரடியான பின்விளைவினால் ஏற்பட்ட குத்தகை மாற்றங்களா என்பதை மதிப்பிடாமல் இருக்கும் நடைமுறை உத்தியினை குழுமம் பிரயோகிக்கின்றது. இதையொத்த இயல்புகள் மற்றும் சூழ்நிலைகளில் ஒப்பந்தங்களை இந்த நடைமுறை உத்தியை குழுமம் பிரயோகிக்கின்றது. இந்த நடைமுறை உத்தியை பிரயோகிப்பதை தவிர்ப்பதற்கு தெரிவு செய்த வாடகைச் சலுகைகளுக்கு, அல்லது இந்த நடைமுறை உத்திக்கு தகுதி பெறாத விடயங்களுக்கு, வாடகை மாற்றம் ஒன்று உள்ளதா என குழுமம் மதிப்பீடு செய்கின்றது.

**2.4.6 இருப்புக்கள்**

இருப்புக்கள் விமானம் மற்றும் தரைச்சேவைகள் தொடர்பான கையிருப்புகள், மூலப்பொருட்கள் மற்றும் நுகர்வுப்பொருட்களை உள்ளடக்குகின்றது.

இருப்புக்கள், கிரயம் மற்றும் தேறிய கைகூடத்தக்க பெறுமதியில் எது குறைவானதோ அதில் குறிப்பிடப்படுகின்றது. இருப்புக்களின் கிரயமானது, கொள்வனவுகள் கிரயம், மாற்றுதல் கிரயம், மற்றும் இருப்புக்களை தற்போதைய இடம் மற்றும் நிலைமைக்கு கொண்டுவருவதற்கு ஆட்பட்ட ஏனைய கிரயங்கள் போன்றவற்றின் கூட்டுத்தொகையாகும். இருப்புக்களின் கிரயத்தினை கணிப்பிடுவதற்கு நிறையிடப்பட்ட சராசரி கிரய முறையானது பிரயோகிக்கப்படுகின்றது.

தேறிய கைகூடக்கூடிய பெறுமதியானது பின்வருவனவற்றை பிரதிபலிக்கின்றது. விற்பனை விலையிலிருந்து அனைத்து மதிப்பிடப்பட்ட நிறைவடைதல் கிரயங்கள் மற்றும் விற்பனையொன்றை மேற்கொள்வதற்கு தேவைப்படும் கிரயங்கள் என்பவற்றை கழித்து பெறப்படும்.

**2.4.7 நிதி சாரா சொத்துக்களின் வலுக்குறைகள்**

ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் குழுமமானது ஏதேனும் ஒரு சொத்து வலுக்குன்றக்கூடிய அறிகுறி தென்படுகின்றதா என்று மதிப்பிடுகின்றது. அத்தகைய அறிகுறிகள் காணப்பட்டால், அல்லது ஒரு சொத்திற்கு வருடாந்த வலுக்குன்றல் பரிசோதனை தேவைப்படின், குழுமமானது சொத்துக்களின் மீளப்பெறத்தக்க தொகையில் ஓர் மதிப்பீட்டினை மேற்கொள்கின்றது. சொத்தொன்றின் கொண்டு செல்லல் தொகையானது அதன் மீளப்பெறத்தக்க தொகையினை விஞ்சியிருப்பின்,சொத்தானது வலுக்குன்றியுள்ளதாக கருதப்பட்டு அதன் மீளப்பெறத்தக்க பெறுமதிக்கு குறைத்தெழுதப்படும்.

கோவிட் - 19 தொற்றினைத் தொடர்ந்து,குழுமமானது அறிக்கையிடப்படும் திகதியில் நிதி சாரா சொத்துக்களில் (பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள் உள்ளடங்களாக) ஏதேனும் குறிப்பிடத்தக்க வலுக்குன்றல் காணப்படுகின்றதா என்று கருதுவதற்காக ஓர் பகுப்பாய்வினை செய்கின்றது. இந்த பகுப்பாய்வின் அடிப்படையில், 31 மார்ச் 2021 இல் எவ்விதமான வலுக்குன்றல்களும் இனங்காணப்படவில்லை.

**2.4.8 நியாயமான பெறுமான அளவீடு**

குழுமமானது அதன் காணி மற்றும் கட்டிடங்கள் மற்றும் விமான சமையலறை உபகரணங்களை நியாயப் பெறுமதியில் அளவீடு செய்கின்றது. நியாயப் பெறுமதி தொடர்பான வெளிப்படுத்தல்கள் குறிப்பு 04 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

நியாயப் பெறுமதி என்பது அளவிடப்படும் திகதியில் சந்தைப் பங்கு பற்றுநர்களிடையேயான ஒழுங்கான கொடுக்கல் வாங்கலில் ஓர் சொத்தினை விற்பனை செய்வதற்கு பெறப்படும் விலை அல்லது ஓர் பொறுப்பினை மாற்றல் செய்வதற்கு செலுத்தப்படும் விலை எனப் பொருள்படும். நியாயப் பெறுமதி அளவீடானது சொத்தை விற்பனை செய்யும் கொடுக்கல் வாங்கல் அல்லது பொறுப்பினை மாற்றல் செய்யும் கொடுக்கல் வாங்கல் பின்வரும் இரு விதங்களில் இடம்பெறும் உத்தேசத்தின் அடிப்படையிலாகும்:

- சொத்து அல்லது பொறுப்புக்கான முதன்மை சந்தையில், அல்லது முதன்மை சந்தையொன்று காணப்படாவிடின், சொத்து அல்லது பொறுப்பிற்கான மிகவும் சாதகமான சந்தை.
- முதன்மை சந்தை அல்லது மிகவும் சாதகமான சந்தை குழுமத்தினால் அணுகக் கூடியதாயிருத்தல் வேண்டும்.

அத்தகைய சொத்துக்களின் நியாயப் பெறுமதியானது சந்தைப் பங்குபற்றுநர்கள் சொத்தினை அல்லது பொறுப்பினை விலையிடும்போது பயன்படுத்துவார்கள் என்ற அனுமானத்தினை பயன்படுத்தியும், சந்தை பங்குபற்றுனர்கள் அவர்களது சிறந்த பொருளாதார நலனுக்காக செயற்படுகின்றார்கள் என்ற அனுமானம் என்பவற்றில் அளவீடு செய்யப்படுகின்றது.

நிதியல்லாத சொத்துக்களின் நியாயப் பெறுமதி அளவீடானது, சொத்தினை அதன் உயர்ந்த மற்றும் சிறந்த பயன்பாட்டினை பயன்படுத்துவதன் மூலம் அல்லது அதனை இன்னுமோர் சந்தை பங்குபற்றுநருக்கு விற்பனை செய்வதன் மூலம், அச்சந்தை பங்குபற்றுநர் சொத்தினை அதன் உயர்ந்த மற்றும் சிறந்த பயன்பாட்டினை பயன்படுத்துவார், பொருளாதார நலன்களை உருவாக்கும் சந்தைப் பங்குபற்றுநரின் ஆற்றலை கணக்கிலெடுக்கின்றது.

குழுமமானது சூழ்நிலைகளுக்கு பொருத்தமான பெறுமதியிடல்கள் நுட்பங்களை பயன்படுத்துவதுடன், நியாயப் பெறுமதியினை அளவீடு செய்வதற்காக இவற்றுக்கு போதுமான தரவுகள் கிடைக்கப்பெறுதல், பொருத்தமான அவதானிக்கக்கூடிய உள்ளீடுகளின் பயன்பாட்டினை அதிகரிக்கவும் அவதானிக்க முடியாத உள்ளீடுகளின் பயன்பாட்டினை குறைத்தல் என்பவையாகும்.

நியாயப் பெறுமதி அளவிடப்பட்ட அனைத்து சொத்துக்களும் நியாயப் பெறுமதி படிநிலையினுள் வகைப்படுத்தப்பட்டு, நியாயப் பெறுமதி அளவீட்டிற்கு முழுவதமாக குறிப்பிடத்தக்க ஆகக்குறைந்த மட்டத்திலான உள்ளீட்டின் அடிப்படையில் பின்வருமாறு விவரிக்கப்பட்டுள்ளன:

- மட்டம் 1 - ஒரேமாதிரியான சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களுக்கான உயிர்ப்புள்ள சந்தைகளில் உள்ள விலை கூறப்பட்ட (செம்மையாக்கப்படாத) சந்தை விலைகளில்
- மட்டம் 2 - நியாயப் பெறுமதி அளவீட்டிற்கு நேரடியாக அல்லது மறைமுகமாக அவதானிக்கக்கூடிய ஆகக்குறைந்த மட்டத்திலான குறிப்பிடத்தக்க உள்ளீடுகளைக் கொண்ட பெறுமதியிடல் நுட்பங்கள்
- மட்டம் 3 - நியாயப் பெறுமதி அளவீட்டிற்கு அவதானிக்கப்பட இயலாத ஆகக்குறைந்த மட்டத்திலான குறிப்பிடத்தக்க உள்ளீடுகளைக் கொண்ட பெறுமதியிடல் நுட்பங்கள்

மீளத் தோன்றும் அடிப்படையில் நிதிக் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுக்கு, ஒவ்வொரு அறிக்கையிடப்படும் காலப்பகுதியிலும் வகைப்படுத்தலினை மீள்மதிப்பீடு செய்வதன் மூலம் படிநிலைகளின் மட்டங்களுக்கிடையில் ஏதேனும் மாற்றல்கள் இடம்பெற்றுள்ளதா என்று குழுமமானது தீர்மானிக்கின்றது. (நியாயப் பெறுமதி அளவீட்டிற்கு

முழுவதுமாக குறிப்பிடத்தக்க குறைந்த மட்டத்திலான உள்ளீட்டின் அடிப்படையில்).

ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள் போன்ற குறிப்பிடத்தக்க சொத்துக்களின் பெறுமதியிடல்களில் வெளிவாரி மதிப்பீடு செய்பவர்கள் ஈடுபடுவார்கள். வெளிவாரி மதிப்பீடு செய்பவர்களினை தேர்வு செய்வதற்கான கோட்பாடுகள் சந்தை அறிவு, நற்பெயர், சுயாதீனத்தன்மை மற்றும் தொழில்சார் நியமங்கள் பராமரிக்கப்படுதல் என்பவற்றை உள்ளடக்கும். குழுமமானது வெளிவாரி மதிப்பீடு செய்பவர்களுடனான கலந்துரையாடலின் பின்னர், ஒவ்வொரு விடயத்திலும் எந்த பெறுமதியிடல் நுட்பங்கள் மற்றும் உள்ளீடுகள் பயன்படுத்தப்படல் வேண்டும் என தீர்மானிக்கின்றது.

நியாயப் பெறுமதி வெளிப்படுத்தல்கள் நோக்கத்திற்காக, குழுமமானது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களது வகுப்புகளை பின்வருவனவற்றின் அடிப்படையில் தீர்மானித்துள்ளது. தன்மை, சொத்து அல்லது பொறுப்பின் தனிச்சிறப்புகள் மற்றும் இடர்நேர்கைகள் மற்றும் மேலே குறிப்பிட்டுள்ளவாறு நியாயப் பெறுமதி படிநிலையிலான மட்டம்.

### 2.4.9 நிதியியல் கருவிகள்

### 2.4.9.1 நிதியியல் சொத்துக்கள்

**ஆரம்ப அங்கீகரிப்பு மற்றும் அளவீடு**
நிதியியல் சொத்துக்கள் பெறுமதி குறைப்புக் கிரயத்தில் வகைப்படுத்தப்பட்டு, ஏனைய விரிவான வருமானத்தினூடான நியாயப் பெறுமதி (FVOCI) மற்றும் இலாபம் அல்லது நட்டத்தினூடான நியாயப் பெறுமதி அளவிடப்படகிறது (FVTPL).

நிதியியல் சொத்துக்கள் (இலாபம் அல்லது நட்டத்தினூடான நியாயப் பெறுமதியில் குறிப்பிடப்பட்ட சொத்துக்கள் உள்ளடங்களாக) கருவியின் ஒப்பந்த ஏற்பாடுகளுக்கு குழுமமானது ஓர் தரப்பினராக வந்த வர்த்தகத் திகதியின் ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது. நிதியியல் சொத்தானது ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் அளவிடப்படுகின்றது.

இலாபம் அல்லது நட்டத்தினூடான நியாயப் பெறுமதியில் காணப்படாத ஒரு உருப்படிக்கு, அதன் கொள்வனவு அல்லது வழங்கலுடன் நேரடியாக உடமையாக்கத்தக்க கொடுக்கல் வாங்கல் கிரயங்களை கருத்திலெடுக்கின்றது.

**பிற்பட்ட அளவீடு**
நிதியியல் சொத்துக்களின் வகுப்பிடலானது பொதுவாக ஓர் நிதியியல் சொத்தானது முகாமைப்படுத்தப்பட்டு அதன் ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல் பண்புகளையுடைய வணிக மாதிரிகளின் அடிப்படையிலானதாகும்.

ஒரு நிதியியல் சொத்தானது அது இலாபம் அல்லது நட்டத்தினூடான நியாயப் பெறுமதியில் குறிப்பிடப்படாத மற்றும் பின்வரும் நிபந்தனைகள் இரண்டையும் சந்திப்பின் அது பெறுமதிக்குறைப்புக் கிரயத்தில் அளவீடு செய்யப்படுகின்றது.

- ஒப்பந்தக் காசுப்பாய்ச்சல்களை திரட்டுவதற்காக வைத்திருக்கப்படும் சொத்துக்களை வைத்திருக்கும் நோக்கையுடைய ஓர் வணிக மாதிரியினுள் சொத்து வைத்திருக்கப்பட்டிருப்பின் மற்றும்
- நிலுவையிலுள்ள முதல் தொகையிலான முதல் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளை மாத்திரம் கொண்ட குறிப்பிட்ட திகதிகளிலான காசுப்பாய்ச்சல்களுக்கு வழிசமைக்கும் நிதியியல் சொத்தின் ஒப்பந்த ஏற்பாடுகள்.

வர்த்தகத்திற்காக வைத்திருக்கப்படாத ஓர் உரித்துவ முதலீட்டின் ஆரம்ப அங்கீகாரத்தின்போது, குழுமமானது நியாயப் பெறுமதியில் பிற்பட்ட மாற்றங்களை ஏனைய விரிவான வருமானக் கூற்றினூடாக மாற்றவியலாதவாறு சமர்ப்பிப்பதற்கு தெரிவு செய்துள்ளது. இத்தெரிவானது ஒவ்வொரு கருவி மூலம் கருவி அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது.

குழுமமானது வர்த்தகம் மற்றும் ஏனைய வருமதிகள், விமான பராமரிப்பு ஒதுக்கம், விமான உதிரி என்ஜின் வைப்புகள், முதலீடுகள் மற்றும் காசு மற்றும் வங்கி மீதிகளை நிதியியல் சொத்துக்களாக வகைப்படுத்தி பின்னர் அவை பெறுமதிக்குறைப்பு கிரயத்தில் அளவிடப்படுகின்றது.

**அங்கீகரிப்பு நீக்கம்**
நிதியியல் சொத்திலிருந்தான காசுப் பாய்ச்சல்களுக்கான ஒப்பந்த உரிமைகள் முதிர்வடையும்போது குழுமமானது ஒரு நிதியியல் சொத்தினை அங்கீகரிப்பு நீக்கம் செய்கின்றது, அல்லது நிதியியல் சொத்தினது உடைமையின் அனைத்து இடர்நேர்கைகள் மற்றும் வெகுமதிகளை குறிப்பிடத்தக்களவு மாற்றல் செய்யப்படும் ஓர் கொடுக்கல் வாங்கலின் ஒப்பந்த காசுப்பாய்ச்சல்களை பெறுவதற்கான உரிமைகளை மாற்றல் செய்தால், அல்லது குழுமமானது உடைமையின் அனைத்து இடர்நேர்கைகள் மற்றும் வெகுமதிகளை குறிப்பிடத்தக்களவு வைத்திருக்காமலும் மாற்றல் செய்யாமலும் மற்றும் அது நிதியியல் சொத்தின் கட்டுப்பாட்டினை வைத்திருக்காமல் இருக்கும் போது நீக்கம் செய்கின்றது. ஒரு நிதியியல் சொத்தின் அங்கீகரிப்பு நீக்கத்தின்போது, சொத்தின் கொண்டுசெல்லும் பெறுமதிக்கும் (அல்லது அங்கீகாரம் நீக்கப்பட்ட சொத்தின் பகுதிக்கு ஒதுக்கப்படும் கொண்டு செல்லல் தொகை) பின்வருவனவற்றின் கூட்டுத்தொகைக்கும் இடையேயான வித்தியாசமானது இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது.

(i) பெறப்பட்ட மறுபயன் (ஏதேனும் பெறப்பட்ட புதிய சொத்திலிருந்து பொறுப்பேற்ற ஏதேனும் பொறுப்பினை கழித்தல் உள்ளடங்களாக) மற்றும்
(ii) ஏனைய விரிவான வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்டிருந்த ஏதேனும் திரண்ட இலாபம் அல்லது நட்டம் இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது.

**நிதிச் சொத்துக்களின் வலுக்குன்றல்**
ஏனைய விரிவான வருமானத்தினூடான நியாயப் பெறுமதியில் அல்லது பெறுமதிக்குறைப்பு கிரயத்தில் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துக்களிலான எதிர்பார்க்கப்படும் கடன் தீர்த்தல் நட்டங்களுக்கு குழுமமானது ஓர் நட்ட படியினை அங்கீகரிக்கின்றது.

எதிர்பார்க்கப்படும் கடன் தீர்த்தல் நட்டங்களை அளவிடுவதற்கு எளிமையாக்கப்பட்ட அணுகுமுறையினை குழுமமானது பயன்படுத்துவதுடன் அனைத்து வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகளுக்கு ஓர் வாழ்நாள் எதிர்பார்க்கப்படும் நட்ட படியும் பயன்படுத்தப்படுகின்றது.

குழுமமானது பின்வருவனவற்றை பிரதிபலிக்கும் ஓர் நிதியியல் கருவியின் எதிர்பார்க்கப்படும் கடன் தீர்த்தல் நட்டத்தினை அளவிடுகின்றது:
(அ) ஓர் பக்கச்சார்பற்ற மற்றும் நிகழ்வாய்ப்பு நிறையிடப்பட்ட தொகையானது சாத்தியமான வீச்சான விளைவுகளை மதிப்பிடுவதன் மூலம் தீர்மானிக்கப்படுகின்றது
(ஆ) பணத்தின் நேரப் பெறுமதி மற்றும்
(இ) அறிக்கையிடப்படும் திகதியில் கடந்தகால நிகழ்வுகள், தற்போதைய நிபந்தனைகள், மற்றும் எதிர்கால பொருளாதார நிலைமைகளிலான எதிர்வுகூறல் பற்றி ஓர் நியாயமான மற்றும் மிதமிஞ்சிய கிரயம் அல்லது முயற்சி இன்றி கிடைக்கக்கூடிய நியாயமான மற்றும் ஆதாரமான தகவல்கள்.

பெறுமதிக் குறைப்பு கிரயத்தில் நிதியியல் சொத்துக்களுக்கான நட்டப் படிகள் சொத்துக்களின் மொத்த கொண்டுசெல்லும் தொகையிலிருந்து கழிக்கப்படுகின்றன.

உலகளாவிய பொருளாதாரத்திலான கோவிட்-19 இன் தாக்கம் மற்றும் எவ்வாறு அரசாங்கங்கள், வணிகங்கள் மற்றும் நுகர்வோர்கள் பதிலளிப்பார்கள் என்பது நிச்சயமற்றதாகும். இந்த நிச்சயமற்றதன்மையானது குழுமத்தின் கடன் தொகுதிகளிலிருந்து எதிர்பார்க்கப்படும் கடன் தீர்த்தல் நட்டங்களிலான மதிப்பீடுகளில் பிரதிபலிக்கப்படுவதுடன் இவை பல முகாமைத்துவ பகுத்தறிவுகள் மற்றும் மதிப்பீடுகளுக்கு கட்டுப்பட்டதாகும்.

# நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

கோவிட் -19 இன் தாக்கத்தின் சூழலினுள் பகுத்தறிவுகளும் இணைந்த அனுமானங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் உகந்தது எனக் கருதப்படும் வரலாற்று அனுபவங்கள் மற்றும் ஏனைய காரணிகளை பிரதிபலிப்பதுடன், இந்த சூழ்நிலைகளின் கீழ் நியாயமானது என நம்பப்படும் எதிர்கால நிகழ்வுகளது எதிர்பார்ப்புக்கள் உள்ளடங்களாகும்.

### 2.4.9.2 நிதியியல் பொறுப்புக்கள்

**ஆரம்ப அங்கீகாரம் மற்றும் அளவீடு**
அனைத்து நிதியியல் பொறுப்புக்களும் (இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் குறிப்பிடப்பட்ட பொறுப்புக்கள் உள்ளடங்களாக) குழுமமானது கருவியின் ஒப்பந்த ஏற்பாடுகளின் ஓர் தரத்தவராக வரும் வர்த்தக தினத்தின் ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது.

குழுமமானது அதன் நிதியியல் பொறுப்புக்களை இரண்டு வகைகளில் ஒன்றாக வகைப்படுத்துகின்றது. இது பொறுப்பு கையேற்கப்பட்ட நோக்கத்தில் தங்கியுள்ளது இலாபம் அல்லது நட்டத்தினூடான நியாயப் பெறுமதியில் (FVTPL) அல்லது ஏனைய நிதியியல் பொறுப்புக்கள். ஒரு நிதியியல் பொறுப்பானது ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் அளவீடு செய்யப்படுகின்றது.

இலாபம் அல்லது நட்டத்தினூடான நியாயப் பெறுமதியில் காணப்படாத ஓர் உருப்படிக்கு, அதன் கையகப்படுத்தலுக்கு அல்லது வழங்கலுக்கு நேரடியாக உடமையாக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல் கிரயங்கள் கருதப்படுகின்றது.

**பிற்பட்ட அளவீடு**
குழுமமானது வட்டி செலுத்தப்படும் கடன்கள், விமான பராமரிப்பிற்கான ஒதுக்கம் மற்றும் பழுதுபார்த்தல் கிரயம், வர்த்தக மற்றும் ஏனைய கொடுக்குமதிகள் என்பவற்றை நிதியியல் பொறுப்புக்களாக வகைப்படுத்தியுள்ளது.

ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர், நிதியியல் பொறுப்புக்கள் பெறுமதி குறைக்கப்பட்ட கிரயத்தில் அளவீடு செய்யப்படுகின்றன.

ஒரு நிதியியல் பொறுப்பின் பெறுமதி குறைப்புக் கிரயமானது ஆரம்ப அங்கீகாரத்தின்போது நிதியியல் பொறுப்பானது அளவீடு செய்யப்பட்ட தொகையிலிருந்து, முதலில் திருப்பி செலுத்தல்கள் கழிக்கப்பட்டு, திரண்ட பெறுமதிக்குறைப்பு கூட்டப்பட்டு அல்லது கழிக்கப்படுகின்றது. இது பின்வருவனவற்றை பயன்படுத்தி கணிக்கப்படுகின்றது. அங்கீகரிக்கப்பட்ட ஆரம்ப தொகைக்கும், முதிர்வுத் தொகையிலிருந்து வலுக்குன்றலுக்காக ஏதேனும் தொகையினை கழித்ததன் பின்னர் வரும் தொகைக்கும் இடையிலான ஏதேனும் வித்தியாசத்தில் செயல்திறனான வட்டி முறையினை பயன்படுத்தி கணிக்கப்படுகின்றது.

**அங்கீகரிப்பு நீக்கம்**
பொறுப்பின் கீழான கடப்பாடானது வெளியேற்றப்பட்டால் அல்லது ரத்து செய்யப்பட்டால் அல்லது முதிர்வடைந்தால் ஒரு நிதியியல் பொறுப்பானது அங்கீகரிப்பு நீக்கம் செய்யப்படுகின்றது. நடைமுறையிலுள்ள ஒரு நிதியியல் பொறுப்பானது, குறிப்பிடத்தக்க வித்தியாசமான விதிமுறைகளில் அதே கடன் வழங்குநரிடமிருந்தான மற்றுமோர் பொறுப்பினால் மாற்றீடு செய்யப்பட்டால், அல்லது நடைமுறையிலுள்ள பொறுப்பொன்றின் விதிமுறைகள் கணிசமானளவு மாற்றியமைக்கப்பட்டால், அத்தகைய பரிமாற்றல் அல்லது மாற்றியமைத்தலானது ஆரம்ப பொறுப்பின் அங்கீகாரம் நீக்கமாக கருதப்படுவதுடன் மற்றும் ஓர் புதிய பொறுப்பானது அங்கீகரிக்கப்படுகின்றது. அவற்றின் கொண்டு செல்லல் தொகைகளிலான வித்தியாசம் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

### 2.4.9.3 நிதியியல் கருவிகளின் ஈடுசெய்கை

கீழ்காணும் நிபந்தனைகளை பூர்த்தி செய்தால் மாத்திரமே நிதியியல் சொத்துக்கள் மற்றும் நிதியியல் பொறுப்புக்கள் ஈடுசெய்யப்பட்டு, தேறிய தொகையானது நிதிநிலைமைக் கூற்றில் அறிக்கையிடப்படும்

- அங்கீகரிக்கப்பட்ட தொகைகளை ஈடுசெய்வதற்கான வலியுறுத்தத்தக்க சட்ட உரிமை நடைமுறையில்காணப்படல் வேண்டும் மற்றும்
- ஓர் தேறிய அடிப்படையில் தீர்ப்பனவுக்கான நோக்கம் காணப்படுகின்றது, அல்லது ஒரே நேரத்தில் சொத்துக்களை விற்று பொறுப்புக்களை தீர்ப்பனவு செய்தல்.

### 2.4.9.4 காசுப்பாய்ச்சல் இழப்பு காப்பரண்

கம்பனியானது அதன் இனங்காணத்தக்க வெளிநாட்டு நாணயத்திலான கடன்களை ஓர் இழப்புக் காப்பரணாக உயர்ந்த நேரிடக்கூடிய, விசேடமாக வெளிநாட்டு நாணயத்தில் இனங்காணப்பட்ட எதிர்கால வருவாய்க்கு எதிராக குறிப்பிடுகின்றது. இதனூடாக கம்பனியானது வெளிநாட்டு நாணயமாற்று வீதங்களினால் ஏற்பட்ட தளம்பல்களின் மூலம் எழும் இனங்காணப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன்களின் பெறுமதியில் மாற்றங்கள் ஏற்படக்கூடிய இடர்நேர்கையினை காப்பரண் செய்தது.

இழப்புக் காப்பரண் கருவியிலான இலாபம் அல்லது நட்டத்தின் செயல்திறனான பகுதியானது ஏனைய விரிவான வருமானத்தில் காசுப் பாய்ச்சல் இழப்புக் காப்பரண் ஒதுக்கமாக நேரடியாக அங்கீகரிக்கப்படுவதுடன் ஏதேனும் செயல்திறனான பகுதியானது உடனடியாக இலாபம் அல்லது நட்டக் கூற்றில் ஏனைய செயற்பாட்டு செலவினமாக அங்கீகரிக்கப்படுகின்றது. ஏனைய விரிவான வருமானமாக அங்கீகரிக்கப்பட்ட தொகையானது இழப்புக் காப்பரண் கொடுக்கல் வாங்கல் இடம்பெறும்போது இலாபம் அல்லது நட்டக் கூற்றிற்கு மாற்றல் செய்யப்படுகின்றது (எதிர்வுகூறப்பட்ட வருவாய் கைகூடும்போது).

எதிர்வுகூறப்பட்ட கொடுக்கல் வாங்கலானது இடம்பெறுவதற்கு எதிர்பாக்கப்படாதபோது ஏனைய விரிவான வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட திரண்ட இலாபம் அல்லது நட்டம் இலாபம் அல்லது நட்டக் கூற்றிற்கு மாற்றல் செய்யப்படுகின்றது. இழப்புக்காப்பரண் கருவியானது முதிர்வடைந்தால் அல்லது விற்பனை செய்யப்பட்டால், மாற்றீடு செய்யப்படாமல் அல்லது தொடர் உருள்வு செய்யப்படாமல் நீக்கப்பட்டால் அல்லது செயல்முறைப்படுத்தப்பட்டால், அல்லது ஓர் இழப்புக் காப்பரண் என்ற அதன் குறிப்பீடு ரத்துசெய்யப்பட்டால், ஏனைய விரிவான வருமானத்தில் ஏதேனும் திரண்ட இலாபம் அல்லது நட்டமாக முன்னர் அங்கீகரிக்கப்பட்டவை, இழப்புக் காப்பரண் உடன்படிக்கையின் படி எதிர்வுகூறப்பட்ட கொடுக்கல் வாங்கல் இடம்பெறும் வரைக்கும் உரித்துவத்தில் நிலைத்திருக்கும்.

கோவிட்-19 இன் தாக்கமானது மட்டுப்படுத்தப்பட்ட செயற்பாடுகளின் காரணமாக வெளிநாட்டு நாணயத்திலான எதிர்கால வருவாயினையும் பாதித்துள்ளது. வெளிநாட்டு நாணயத்திலான கடன்கள் இதற்கமைய மீள் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளதுடன் இழப்புக் காப்பரணின் செயற்திறனற்ற பகுதியானது இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

### 2.4.10 விமானப் பராமரிப்பு ஒதுக்கம்

விமானப் பராமரிப்பு ஒதுக்கமானது மாதாந்த அடிப்படையில் எதிர்கால என்ஜின்கள் பழுதுபார்த்தல்கள், விமானச் சட்டகம் மற்றும் விமானத்தின் பகுதிகள் என்பவற்றுக்கு செயற்பாட்டு குத்தகை உடன்படிக்கைகளின் ஏற்பாடுகளுக்கமைய குத்தகைக்கு விடுபவர்களுக்கு மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகளை உள்ளடக்குகின்றது. கம்பனியானது குத்தகைக்கு விடுபவரிடமிருந்து என்ஜின்கள் பழுதுபார்த்தல்கள், விமானச் சட்டகங்கள் மற்றும் விமானத்தின் பகுதிகளில் ஆட்பட்ட கிரயத்தினை பராமரிப்பு நிகழ்வு நிறைவடைந்ததன் பின்னர் அத்தகைய ஒதுக்கத்திற்கு எதிராக மீளப்பெறுகின்றது. (ஒதுக்கத்திற்கு ஏற்கனவே செலுத்தப்பட்ட தொகை வரைக்கும்).

**தன்மையினைப் பொறுத்து விமானப்**
பராமரிப்பு ஒதுக்கமானது கடன்கள் மற்றும்

வருமதிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன் இந்த வகையான நிதியியல் சொத்துக்களுக்கான உரிய கணக்கீட்டுக் கொள்கையானது மேலே குறிப்பு 2.4.9.1 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

### 2.4.11 வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகள்

வர்த்தக கடன்பட்டோர்கள், வைப்புகள் மற்றும் ஏனைய கடன்பட்டோர்கள் உள்ளடங்களாக (கிரயத்தில் அளவிடப்பட்டுள்ள வைப்புகள் மற்றும் ஏனைய வருமதிகளின் கீழான நிதியல்லாத சொத்துக்கள் தவிர்ந்தவை) கடன்கள் மற்றும் வருமதிகளாக வகைப்படுத்தப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டுள்ளன. இவ்வகை நிதியியல் சொத்துக்களுக்கான தன்மையினைப் பொறுத்து உரிய கணக்கீட்டுக் கொள்கைகள்மேலே குறிப்பு 2.4.9.1. (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

### 2.4.12 முதலீடுகள்

**துணை நிறுவனத்திலான முதலீடு**

கம்பனியின் நிதிக் கூற்றுக்களில், துணை நிறுவனத்திலான முதலீடு கிரயத்தில்,தற்காலிக பெறுமதிக்குறைவு தவிர்த்த ஏதேனும் தேறிய வலுக்குன்றலுக்கு,கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 2.4.13 குறுங்கால முதலீடுகள்

மூன்று மாதங்களுக்கு குறைவான முதிர்வினையுடைய வங்கிகளிலுள்ள நிலையான வைப்புகள் குறுங்கால வைப்புகளாகும். குறுங்கால முதலீடுகள் அவற்றின் பெறுமதிக் குறைப்பு கிரயத்தில் அளவிடப்படும்.

### 2.4.14 காசும் காசுக்குச் சமனானவைகளும்

காசும் காசுக்குச் சமனானவைகள் என்பது பின்வருமாறு பொருள்படும். கையில் மற்றும் வங்கியிலுள்ள காசு, அழைப்பு வைப்புகள் மற்றும் பெறுமதியில் மாற்றமேற்படும் அற்பமான இடர்நேர்கைக்கு உட்பட்ட தெரிந்துகொண்டுள்ள காசுத் தொகைக்கு உடனடியாக மாற்றக்கூடிய உயர்ந்த திரவத்தன்மையுடைய குறுங்கால முதலீடுகள் ஆகும்.காசுப்பாய்ச்சல் கூற்றில், காசும் காசுக்குச் சமனானவைகளும், வங்கியிலுள்ள காசு,கையிலுள்ள காசு, வங்கியிலுள்ள அழைப்பு வைப்புக்கள் நிலுவையிலுள்ள வங்கி மேலதிகப்பற்றுக்களுக்கு நிகர்செய்யப்பட்டு மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட காசு என்பவற்றை உள்ளடக்குகின்றது. குறைந்த முதிர்வுகளைக் கொண்ட முதலீடுகளும்(கையகப்படுத்தப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்கள் அல்லது அதற்குக் குறைவானவை) காசுக்குச் சமனானவைகளாக கருதப்படுகின்றன. நிதி நிலைமைக் கூற்றில் வங்கி மேலதிகப்பற்றுக்கள் வட்டி செலுத்தப்படும் பொறுப்புக்களின் கீழ் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

### 2.4.15 ஏற்பாடுகள்

**(i) பொது**

ஓர் கடந்தகால நிகழ்வின் விளைவாக குழுமமானது ஓர் நடைமுறை கடப்பாட்டினைக் கொண்டிருந்தால் ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்படுகின்றன.இது கடப்பாட்டின் தொகை குறித்து ஓர் நம்பகமான மதிப்பீட்டினை மேற்கொள்ளலாம் மற்றும் கடப்பாட்டினை தீர்ப்பனவு செய்வதற்கு பொருளாதார நலன்களை உள்ளடக்கிய வளங்களது வெளிப்பாய்ச்சல் என்பவற்றுக்கான நிகழக்கூடிய சாத்தியம் காணப்படல் வேண்டும். குழுமமானது ஏற்பாட்டின் சிலவற்றை அல்லது அனைத்தையும் செலவீடு செய்தல் வேண்டும் என எதிர்பார்த்தால், அந்த செலவீடானது ஓர் தனிப்பட்ட சொத்தாக அங்கீகரிக்கப்படுவதுடன், ஆனால் அந்த செலவீடானது கிட்டத்தட்ட நிச்சயமாக இருந்தால் மாத்திரமே.

**(ii) விமானப் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் செலவினங்கள்**

குழுமமானது விமானப் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் செலவினங்களை (விமான கனரக பராமரிப்பு, என்ஜின் பழுதுபார்த்தல் மற்றும் தரையிறக்கல் சாதனத்திலான பழுதுபார்த்தல் செலவுகள் தவிர்ந்த) ஏற்பட்ட அடிப்படையில் அங்கீகரிக்கின்றது. விமான கனரக பராமரிப்பு, என்ஜின் பழுதுபார்த்தல் மற்றும் தரையிறக்கல் சாதனத்திலான பழுதுபார்த்தல் செலவினங்கள் குறிப்பு 2.3.2 (ஆ) (iv) இல் குறிப்பிட்டுள்ளவாறு கணக்கீடு செய்யப்படுகின்றது. மூன்றாந்தரப்பு பராமரிப்பு உடன்படிக்கைகளின் “மணித்தியாலத்திற்கான சக்தி” இன் மூலம் கிரயமானது உடன்படிக்கையின் காலப்பகுதியில் உடன்பட்ட மணித்தியாலத்திற்கான நிலையான வீதத்தில் செலவு வைக்கப்படுகின்றது.

### 2.4.16 ஓய்வுபெறல் நலன் கடப்பாடுகள்

**(அ) நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டம் - பணிக்கொடை**

பணிக்கொடையானது ஓர் நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டமாகும். கம்பனி மற்றும் குழுமமானது உரிய நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய செலுத்துவதற்கு பொறுப்பாளியாயுள்ளது. குழுமமானது நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டத்தின் நிகழ்காலப் பெறுமதியினை ஓர் காப்பீட்டுக் கணிப்பாளரின் ஆலோசனையுடன் ஒவ்வொரு வருடமும் உத்தேச அலகு வரவு முறையினை பயன்படுத்தி அளவீடு செய்கின்றது. வெளிநாட்டு நிலையங்களில் இது பிரயோகிக்கப்படவேண்டிய சட்டவாக்கத்தின் அடிப்படையில் மதிப்பிடப்படுகின்றது. நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டங்களிலிருந்து எழும் காப்பீட்டுக் கணிப்பு இலாபம்/நட்டம் ஏனைய விரிவான வருமானத்தில் அங்கீகரிக்கப்படுவதுடன் நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டங்கள் தொடர்பான செலவினங்கள் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன. பணிக்கொடை பொறுப்பிற்கு வெளிவாரியாக நிதியளிக்கப்படவில்லை. இந்த உருப்படியானது நிதி நிலைமைக் கூற்றில், “ஏனைய நீண்டகால பொறுப்புக்கள்” இன் கீழ் தொகுக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டை தளமாகக் கொண்ட பணியாட்களுக்கு அவர்களது விருந்தோம்பும் நாடுகளது சமூகப் பாதுகாப்பு திட்டங்களின் கீழ் காப்பிடப்படுகின்றது.

**(ஆ) வரையறுக்கப்பட்ட பங்களிப்பு திட்டங்கள் - ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம்**

இலங்கையினைத் தளமாகக் கொண்ட பணியாட்கள் பொருத்தமான நியதிச்சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கமைய ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்புகள் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய பங்களிப்புகளுக்கு உரிமையுள்ளவர்களாவர். கம்பனியானது மொத்த ஊதியத்தில் 15% இனை ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் 3% இனை ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் பங்களிப்பு செய்கின்றது. அவ்வாறே துணை நிறுவனமும் இவற்றுக்கு முறையே 12% இனையும் 3% இனையும் பங்களிப்பு செய்கின்றது.

### 2.4.17 அடிக்கடி பறப்பவர் திட்டம்

திரட்டிய மைல்கள் அடிப்படையில் இத்திட்டத்தின் அங்கத்தவர்களுக்கு பிரயாண வெகுமதிகளை வழங்கும் “FlySmiLes” அடிக்கடி பறப்பவர் திட்டத்தினை செயற்படுத்துகின்றது. அடிக்கடி பறப்பவர் நலன்கள் வெகுமதிக்கு உடைமையாக்கத்தக்க பயணிகள் வருவாயின் ஒரு பகுதியானது அவை பயன்படுத்தப்படும்வரை ஒத்திவைக்கப்படுகின்றது. வருவாயின் ஒத்திவைப்பானது வரலாற்று ரீதியான மீட்டல் போக்கின் அடிப்படையில் மதிப்பிடப்படுவதுடன், இது பின்னர் இந்த நலன்களின் எதிர்பார்க்கப்படும் பயன்பாடுகளை திட்டமிடுவதற்கு பயன்படுத்தப்படுகின்றது. வெகுமதியாக வழங்கப்பட்ட வரவுகளின் நியாயப் பெறுமதியானது, வெகுமதி வரவுகள் மீட்கப்படக்கூடிய சேவைகளின் நிறையிடப்பட்ட சராசரி பெறுமதிக்கு மேற்கோள் காட்டி மதிப்பிடப்படுகின்றது. இந்த மதிப்பீடுகள் ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் மீளாய்வு செய்யப்பட்டு பொறுப்பானது ஏற்றவாறு செம்மையாக்கப்படுகின்றது. திட்டத்தின் பங்காளிகளின் சேவைகளை பயன்படுத்துவதனூடாக அட்டூறு செய்யப்பட்ட மைல்கள் பங்குபற்றும் பங்காளிகளினால் செலுத்தப்படுவதுடன் அவை பயன்படுத்தப்படும்வரை ஒத்திவைக்கப்பட்ட வருவாயாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.முதிர்வடையும் என எதிர்பார்க்கும் மைல்களுக்கு ஒரு பொறுப்பானது அங்கீகரிக்கப்படுவதில்லை.

# நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

### 2.4.18 வருவாய் அங்கீகாரம்

வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்து எழும் வருவாயானது ஐந்து-படி மாதிரியின் அடிப்படையில் குழுமமானது வருவாயினை அங்கீகரிக்கின்றது.

ஒரு வாடிக்கையாளருக்கு பொருட்கள் மற்றும் சேவைகள் மாற்றல் செய்வதற்கு பிரதியாக ஓர் நிறுவனம் உரிமையுள்ளது என எதிர்பார்க்கும் மறுபயனை பிரதிபலிக்கும் ஓர் தொகைக்கு வருவாய் அங்கீகரிக்கப்படுகின்றது.

**அ) விமான வருவாய்**

பயணிகள், சரக்கு, மிகையான பொதி மற்றும் அஞ்சல் என்பவற்றை ஏற்றிச்செல்தல், விமான நிலைய முனையச் சேவைகள், பொறியியல் சேவைகள், வான் பட்டயங்கள் மற்றும் தொடர்புடைய நடவடிக்கைகளிலிருந்து பிரதானமாக வருவாயினை உருவாக்குகின்றது.

(i) பயணிகள், சரக்கு, மிகையான பொதி விற்பனைகள் மற்றும் ஏனைய தொடர்புடைய கட்டணங்கள் என்பன போக்குவரத்து /சேவை வழங்கப்பட்டவுடன் செயற்பாட்டு வருவாயாக அங்கீகரிக்கப்படுகின்றது.
(ii) பாவிக்கப்படாத டிக்கட்டுகள் மற்றும் வான்வழி பட்டியல்கள் என்பன ஏற்றிச்செல்வதற்கான முன் விற்பனையாக நடைமுறை பொறுப்புக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன. பாவிக்கப்படாத டிக்கட்டுகள் மற்றும் வான்வழி பட்டியல்கள் என்பன அவை பயன்படுத்தப்படாமலிருந்து ஒரு வருடத்தின் பின்னர் முதிர்வடைந்தால் வருவாயாக அங்கீகரிக்கப்படுகின்றது.
(iii) விமான நிலைய முனையச் சேவைகள் வழங்குவதிலிருந்தான வருவாயானது சேவைகள் வழங்கப்பட்டதும் அங்கீகரிக்கப்படுகின்றது.
(iv) மூன்றாம் தரப்பு பராமரிப்பு சேவைகள் வழங்குவதிலிருந்தான வருவாயானது அத்தகைய நிகழ்வுகள் நிறைவடைந்தவுடன் அங்கீகரிக்கப்படுகின்றது.
(v) விமானச் செயற்பாடு சேவைகள் வழங்குவதிலிருந்தான வருவாயானது சேவைகள் வழங்கப்பட்டதும் அங்கீகரிக்கப்படுகின்றது

**ஆ) விமான உணவகச் சேவைகளிலிருந்தான வருவாய்**

**பொருட்களின் விற்பனை**

ஒரு வாடிக்கையாளருக்கு ஓர் வாக்குறுதியளிக்கப்பட்ட பொருள் அல்லது சேவையினை மாற்றல் செய்யும் செயற்பாட்டு கட்டுப்பாட்டினை நிறுவனம் எப்போது திருப்திபடுத்துகின்றதோ குழுமமானது வருவாயினை அங்கீகரிக்கின்றது. வருவாயானது பெறுமதி சேர்க்கப்பட்ட விற்பனை வரியினை விலக்கி மற்றும் வர்த்தக கழிவுகளைக் கழித்ததன் பின்னர் வரும் தொகையாகும். வரவேண்டிய மறுபயன், தொடர்புடைய கிரயங்கள் அல்லது பொருட்களின் சாத்தியமான திரும்பல் மற்றும் பொருட்களுடன் முகாமைத்துவத்தின் தொடர்ச்சியான ஈடுபாடு என்பவை தொடர்பாக குறிப்பிடத்தக்க நிச்சயமற்றதன்மை காணப்படின் எவ்வித வருவாயும் அங்கீகரிக்கப்படுவதில்லை.

**பங்கிலாப வருமானம்**

கொடுப்பனவினை பெற்றுக்கொள்வதற்கான பங்குதாரரின் உரிமை நிலைநாட்டப்பட்டதன் பின்னர் பங்கிலாப வருமானம் கணக்கீடு செய்யப்படுகின்றது.

**வாடகை வருமானம்**

வாடகை வருமானமானது ஓர் அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

**வட்டி வருமானம்**

பெறுமதிக் குறைப்பு கிரயத்தில் அளவீடு செய்யப்பட்ட அனைத்த நிதியியல் கருவிகளுக்கும் வட்டி வருமானம் அல்லது செலவினம் செயல்திறனான வட்டி முறையினைப் பயன்படுத்தி பதியப்படுகின்றது.

**ஏனைய வருமானம்**

ஏனைய வருமானம் ஓர் அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

### 2.4.19 செலவீன அங்கீகாரம்

செலவினங்கள், குறிப்பிட்ட உருப்படிகளான வருமான உழைப்பிற்கும் அது தொடர்பாக ஏற்பட்ட கிரயத்திற்கும் இடையேயான நேரடி தொடர்பின் அடிப்படையில் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.வணிகத்தினை நடாத்துவதில் ஏற்பட்ட அனைத்து செலவினங்கள் மற்றும் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களை ஓர் செயற்திறனான நிலையில் பராமரிப்பதிலான செலவினங்கள் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் கட்டணப்படுத்தப்படுகின்றன. இலாபம் அல்லது நட்டக் கூற்றினை சமர்ப்பிக்கும் நோக்கத்திற்காக "செலவினங்களின் தன்மை" முறையானது இவை குழுமத்தின் செயற்திறனது பிரிவுகளை நியாயமாக சமர்ப்பிக்கின்றன என்ற அடிப்படையில் கடைப்பிடிக்கப்பட்டது.

### 2.4.20 கடன் பெறல் கிரயங்கள்

பின்வருவன தவிர்ந்த கடன் பெறல் கிரயங்கள் அது ஏற்பட்ட காலப்பகுதியில் ஓர் செலவினமாக அங்கீகரிக்கப்படுகின்றன. ஒரு சொத்தின் பயன்பாட்டு நோக்கம் அல்லது விற்பனைக்கு தயாராவதற்கு கணிசமானளவு காலம் எடுக்கப்படுமாதலால் அதன் கையகப்படுத்தல், கட்டுமாணம் அல்லது உற்பத்தி போன்றவற்றிற்காக நேரடியாக உடமையாக்கப்படக்கூடிய கடன் செலவினங்கள் சொத்தின் ஒரு பகுதியாக மூலதனமயமாக்கப்படுகின்றன.

### 2.4.21 அறிக்கையிடல் பிரிவுகள்

ஒரு பிரிவு என்பது, ஏனைய பிரிவுகளிலிருந்து வேறுபட்ட, இடர்நேர்கைகள் மற்றும் வெகுமதிகளுக்குட்பட்ட ஒரு குறிப்பிட்ட பொருளாதார சூழலினுள் ஈடுபட்டுள்ள வேறுபடுத்தக்கூடிய கூறாகும்.

குழுமமானது பல்வேறு நாடுகளில் செயற்படுவதன் நிமித்தம் குழுமத்தின், இடர்நேர்கைகள் மற்றும் விளைவு வீதம் என்பன முக்கியமாக பாதிக்கப்படக்கூடிய பூகோள விரிவாக்க செயல்முறைகளின் அடிப்படையில் பிரதான பிரிவுகள் தீர்மானிக்கப்படுகின்றன. விற்பனையின் உருவாக்கத்தின் மூலம் புரள்வின் பகுப்பாய்வானது எந்த பிரதேசத்தில் விற்பனை நடைபெற்றதோ அந்த பிரிவிற்கு வருவாயினை ஒதுக்குவதன் மூலம் பெறப்பட்டது. ஒரு குறிப்பிட்ட பிரிவிற்கு நேரடியாக இனங்காணமுடியாத செலவினங்கள் வேறுபடுத்தப்படாது வெளிப்படுத்தப்படுகின்றன.

அறிக்கையிடப்படும் திகதியில் தொடர்புடைய தரப்பினர் சம்பந்தமாக ரூபா 994.31 மில்லியன் வலுக்குன்றலாக ஏற்பாடு செய்யப்பட்டது (2020- ரூபா 1,018.10 மில்லியன் ஏற்பாடு செய்யப்பட்டது).

இ.க.நி. 24 - "தொடர்புடைய தரப்பினர் வெளிப்படுத்தல்கள்" க்கமைய அனைத்து அரசாங்கக் கட்டுப்பாட்டு/தொடர்புடைய நிறுவனங்களுடன் மேற்கொள்ளப்பட்ட அனைத்து கொடுக்கல் வாங்கல்களையும் உள்ளடக்குவதற்கும் வெளிப்படுத்துவதற்கும் அவற்றின் பருமன் மற்றும் நடைமுறையில் ஒவ்வாததன் காரணமாக தனித்தனியே குறிப்பிடத்தக்களவு கொடுக்கல் வாங்கல்கள் பற்றி வரையறுத்த வெளிப்பாடுகளே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வருடத்தில் கம்பனி அத்தகைய அரசாங்க கட்டுப்பாடுள்ள/தொடர்புடைய நிறுவனங்களுடன் மேற்கொண்ட கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு.

- இலங்கை மின்சார சபை
- இறைவரித் திணைக்களம்
- அரச மருந்துக் கூட்டுத்தாபனம்
- வெளிவிவகார அமைச்சு
- இலங்கை விமானப்படை
- இலங்கை இராணுவம்
- இலங்கை கடற்படை
- இலங்கை தபால் அதிகாரசபை
- இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு செயலகம்

மேலும் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு உரிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கேற்ப பணியாட்கள் ஓய்வுபெறல் நலன்களுக்கான பங்களிப்பு தொடர்பாக கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டன.

தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்கள் வணிக விதிமுறைகளில் நடைபெற்றன

## 31. நிதியியல் இடர்நேர்கை முகாமைத்துவ குறிக்கோள்கள் மற்றும் கொள்கைகள்.

குழுமத்தின் பிரதான நிதியியல் பொறுப்புக்கள் கடன்கள், வர்த்தக மற்றும் ஏனைய கொடுபடவேண்டியவைகள், மற்றும் ஏனைய நிதியியல் பொறுப்புக்களை உள்ளடக்கியிருந்கின்றது. இந்த நிதியியல் பொறுப்புக்களின் முக்கிய நோக்கம் குழுமத்தின் தொழிற்பாடுகளுக்கு நிதியளிப்பதற்காகும். குழுமத்தின் நிதியியல் சொத்துக்கள் வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகள் மற்றும் அதன் தொழிற்பாடுகளிலிருந்து நேரடியாக பெற்றுக்கொண்ட காசு மற்றும் குறுங்கால வைப்புகளை உள்ளடக்குகின்றது.

கூட்டாண்மை முகாமைத்துவமானது காலாகாலம் ஓர் விரிவான இடர்நேர்கை முகாமைத்துவ அணியை மீளாய்வு செய்து இற்றைப்படுத்தி கணிசமான அளவு தாக்கத்தை உடைய பின்வரும் நிதியியல் இடர்நேர்கைகளை இனங்கண்டுள்ளது.

(i) சந்தை இடர்நேர்கை
- வட்டி வீத இடர் நேர்கை
- நாணய இடர் நேர்கை

(ii) திரவத்தன்மை இடர்நேர்கை
(iii) கடன் இடர்நேர்கை

குழுமமானது அதன் இடர்நேர்கை முகாமைத்துவ கொள்கைகள் மற்றும் செயல்முறைகளை சந்தைகளிலான மாற்றங்களை பிரதிபலிப்பதற்காக மற்றும் ஏனைய நிதியியல் இடர்நேர்கை பொறுப்பேற்கப்படும் நடவடிக்கைளின் அடிப்படையில் வழக்கமான
அடிப்படையில் மீளாய்வு செய்கின்றது. இவை நிர்ணயிக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் செயல்முறைகளுக்கமைய இடர்நேர்கைகள் இனங்காணப்பட்டு, அளவிடப்பட்டு மற்றும் முகாமைப்படுத்தப்படுவதினை உறுதிப்படுத்துவதற்காக பொருத்தமான கொள்கைகள் மற்றும் செயல்முறைகளினால் ஆளுமைப்படுத்தப்படுகின்றன.

# நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

**(i) சந்தை இடர்நேர்கை**

**வட்டி வீத இடர்நேர்கை**

வட்டி வீத இடர்நேர்கை என்பது சந்தை வட்டி வீதங்களில் ஏற்படும் மாற்றங்களின் காரணமாக ஒரு நிதியியல் கருவியின் நியாயப் பெறுமதியானது தளம்பலடையும் என்ற இடர்நேர்கையாகும். சந்தை வட்டி வீதங்களில் ஏற்படும் மாற்றங்களது இடர்நேர்கைக்கான குழுமத்தின் வெளிப்பாடானது பிரதானமாக குழுமத்தின் மிதக்கும் வட்டி வீதங்களில் பெறப்பட்ட நீண்டகால கடன் பொறுப்புக்கள் தொடர்பானதாகும்.

வட்டி வீத தளம்பல்களின் தாக்கத்தினை குறைப்பதற்காக விமான குத்தகை உள்ளடங்களான நிலையான மற்றும் மாற்றமடையும் வட்டிவீத கடன்களிடையே ஓர் பொருத்தமான சமநிலையினை பராமரிப்பது குழுவின் கொள்கையாகும்.

கடன்களிலான வட்டி வீதங்களில் நியாயமான சாத்தியப்படக்கூடிய மாற்றங்களுக்கு பின்வரும் அட்டவணையானது உணர்திறனை செயல் விளக்கமளிக்கின்றது. ஏனைய அனைத்து மாறிகளும் நிலையாக இருக்கும்போது. குழுமம்/கம்பனியினது வரிக்கு முந்திய நட்டமானது மிதக்கும் வட்டி வீதங்களின் தாக்கத்தினூடாக பின்வருமாறு பாதிக்கப்பட்டிருக்கலாம்.

| | 2021 | | 2020 | |
|---|---|---|---|---|
| | வரிக்கு முந்திய நட்டத்தின் விளைவு | | வரிக்கு முந்திய நட்டத்தின் விளைவு | |
| | குழுமம் ரூபா மில்ல். | கம்பனி ரூபா மில்ல். | குழுமம் ரூபா மில்ல். | கம்பனி ரூபா மில்ல். |
| வட்டி வீதத்திலான அதிகரிப்பு (வீழ்ச்சி) | | | | |
| +1. | 772.62 | 772.13 | 773.61 | 772.01 |
| -1% | (772.62) | (772.13) | (773.61) | (772.01) |

* வட்டி வீதங்களிலான அதிகரிப்பானது அதிகரித்த நட்டத்தினை விளைவிக்கும்

**வெளிநாட்டு நாணய இடர்நேர்கை**

வெளிநாட்டு நாணய இடர்நேர்கை என்பது வெளிநாட்டு நாணயமாற்று வீதங்களில் ஏற்படும் மாற்றத்தின் காரணமாக ஓர் நிதியியல் கருவியின் எதிர்கால காசுப்பாய்ச்சல்களின் நியாயப் பெறுமதியானது தளம்பலடையும் இடர்நேர்கையாகும். குழுமமானது அதன் வெளிநாட்டு நாணயத்தில் குறிப்பிடப்பட்ட வருவாய், செலவினங்கள், கடன்பெறுகைகள் மற்றும் ஏனைய நிதியியல் கருவிகளின் காரணமாக வெளிநாட்டு நாணயமாற்று வீதத்தின் தளம்பல்களின் தாக்கத்திற்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

.குழுமமானது இயலுமானவரை பொருந்தும் கொள்கையினை, ஒவ்வொரு தனியான நாணயத்திலும் பெறுகைகள் மற்றும் கொடுப்பனவுகளை பொருந்தியும், விசேடமாக இனங்காணப்பட்ட வெளிநாட்டு நாணய வருவாயினை இனங்காணப்பட்ட வெளிநாட்டு நாணய கடன்களுடன் இழப்புக் காப்பு செய்தும் வெளிநாட்டு பரிமாற்றக வெளிப்படுத்தல்களை முகாமைப்படுத்துகின்றது.

கீழ்காணும் அட்டவணையானது ஏனைய அனைத்து மாறிகளும் நிலையாயிருக்கும்போது குழுமத்தின்/கம்பனியின் வரிக்கு முந்திய இலாபத்தின் அமெரிக்க டொலர்களுக்கு எதிரான இலங்கை ரூபாவின் நியாயமான சாத்தியப்படக்கூடிய மாற்றலது உணர்திறனை வெளிப்படுத்துகின்றது. (அறிக்கையிடப்படும் திகதியில் நிதி நிலைமைக் கூற்றில் நிலுவையிலுள்ள பணரீதியான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் நியாயப் பெறுமதியில் ஏற்படும் மாற்றங்களின் நிமித்தம்) ஏனைய அனைத்து நாணயங்களிலுமான குழுமத்தின் வெளிநாட்டு நாணய மாற்றங்களுக்கான வெளிப்பாடு குறிப்பிடத்தக்களவில் இல்லை.

| | 2021 | | | | 2020 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஏ.வி.வ. லான தாக்கம் | | வரிக்கு முந்திய வட்டியிலான தாக்கம் | | ஏ.வி.வ. லான தாக்கம் | | வரிக்கு முந்திய வட்டியிலான தாக்கம் | |
| | குழுமம் ரூபா மில்ல். | கம்பனி ரூபா மில்ல். | குழுமம் ரூபா மில்ல். | கம்பனி ரூபா மில்ல். | குழுமம் ரூபா மில்ல். | கம்பனி ரூபா மில்ல். | குழுமம் ரூபா மில்ல். | கம்பனி ரூபா மில்ல். |
| USD எதிர் இலங்கை ரூபாவின் பெறுமதி ஏற்றம் (பெறுமதி வீழ்ச்சி) | | | | | | | | |
| +3% | - | - | **10,131.92** | **10,361.06** | 273.54 | 273.54 | 8,439.40 | 8,791.32 |
| -3% | - | - | **(10,131.92)** | **(10,361.06)** | (273.54) | (273.54) | (8,439.40) | (8,791.32) |

* அமெரிக்க டொலரின் பெறுமதி ஏற்றமானது அதிகரித்த நட்டத்தினை விளைவிக்கும்

## 31. நிதியியல் இடர்நேர்கை முகாமைத்துவ குறிக்கோள்கள் மற்றும் கொள்கைகள்(தொடர்ச்சி)

**(ii) திரவத்தன்மை இடர்நேர்கை**

திரவத்தன்மை இடர்நேர்கை என்பது குழுவானது அதன் தற்போதைய மற்றும் எதிர்கால காசுக் கடப்பாட்டினை அவை செலுத்தவேண்டிய சமயத்தில் அதனைச் சந்திக்க இயலாமல் போகும் இடர்நேர்கையாகும். குழுமமானது நாளாந்த/வாராந்த/மாதாந்த மற்றும் வருடாந்த காசு முகாமைத்துவம் மற்றும் பாதீட்டு செயல்முறை ஆகியவற்றை பயன்படுத்தி அதன் நிதிப் பற்றாக்குறை இடர்நேர்கையினை கண்காணிக்கின்றது. குழுமமானது நீண்ட கால மற்றும் குறுங்கால கடன்கள், வங்கி மேலதிகப்பற்று வசதிகள் மற்றும் நிதியியல்/செயற்பாட்டு குத்தகை போன்ற பல்வேறு நிதியளித்தல் மூலங்களை இடர்நேர்கையினை குறைப்பதற்காக நிதியியல் நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்கின்றது.

கீழ்காணும் அட்டவணையானது குழுமத்தின/கம்பனியின் நிதிப் பொறுப்புக்களை ஒப்பந்த கழிவிறக்கம் செய்யாத கொடுப்பனவுகளின் அடிப்படையில் முதிர்வுத் தோற்றுருவத்தின் சுருக்கத்தினை வழங்குகின்றது.

| 2021 | கணக்கில் வராத ஒப்பந்த காசுப் பாய்ச்சல் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | கேட்பதன் பேரில் ரூபா மில்ல். | மூன்று மாதங்களுக்குக் குறைவானது ரூபா மில்ல். | 3 முதல் 12 மாதங்கள் ரூபா மில்ல். | 1 முதல் 5 வருடங்கள் ரூபா மில்ல். | 5 வருடங்களுக்கு மேல் ரூபா மில்ல். | மொத்தம் ரூபா மில்ல். | கொண்டு செல்லல் பெறுமதி ரூபா மில்ல். |
| **குழுமம்** | | | | | | | |
| வரி செலுத்தப்படும் பொறுப்புக்கள் | 23,117.13 | 4,031.93 | 74,760.35 | 35,118.14 | - | 137,027.55 | 137,631.57 |
| குத்தகைப் பொறுப்பு | 12,698.00 | 7,059.75 | 22,602.74 | 96,414.01 | 67,263.41 | 206,037.91 | 166,172.50 |
| விமானப் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் செலவு | 1,107.30 | 5,509.11 | 10,722.67 | 16,138.28 | 1,052.88 | 34,530.24 | 34,530.24 |
| வர்த்தக மற்றும் ஏனைய கொடுக்குமதிகள் | - | 80,855.81 | - | - | - | 80,855.81 | 80,855.81 |
| | 36,922.43 | 97,456.60 | 108,085.76 | 147,670.44 | 68,316.29 | 458,451.51 | 419,190.12 |
| **கம்பனி** | | | | | | | |
| வரி செலுத்தப்படும் பொறுப்புக்கள் | 23,117.13 | 3,849.13 | 78,382.09 | 35,118.14 | - | 140,466.49 | 137,630.57 |
| குத்தகைப் பொறுப்பு | 12,698.00 | 7,016.37 | 22,467.88 | 95,618.50 | 64,635.70 | 202,436.45 | 165,337.26 |
| விமானப் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் செலவு | 1,107.30 | 5,509.11 | 10,722.67 | 16,138.28 | 1,052.88 | 34,530.24 | 34,530.24 |
| வர்த்தக மற்றும் ஏனைய கொடுக்குமதிகள் | - | 86,682.07 | - | - | - | 86,682.07 | 86,682.07 |
| | 36,922.43 | 103,056.68 | 111,572.64 | 146,874.92 | 65,688.58 | 464,115.25 | 424,180.14 |

# நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

| 2020 | கணக்கில் வராத ஒப்பந்த காசுப் பாய்ச்சல் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | கேட்பதன் பேரில் ரூபா மில்ல். | மூன்று மாதங்களுக்குக் குறைவானது ரூபா மில்ல். | 3 முதல் 12 மாதங்கள் ரூபா மில்ல். | 1 முதல் 5 வருடங்கள் ரூபா மில்ல். | 5 வருடங்களுக்கு மேல் ரூபா மில்ல். | மொத்தம் ரூபா மில்ல். | கொண்டு செல்லல் பெறுமதி ரூபா மில்ல். |
| **குழுமம்** | | | | | | | |
| வரி செலுத்தப்படும் பொறுப்புக்கள் | 11,681.41 | 4,031.93 | 74,760.35 | 42,416.77 | - | 132,890.46 | 121,849.82 |
| குத்தகைப் பொறுப்பு | 299.52 | 8,006.92 | 23,960.43 | 115,565.39 | 73,751.16 | 221,583.42 | 176,327.19 |
| முன்னுரிமைப் பங்குகள் | - | 1,000.00 | - | - | - | 1,000.00 | 1,000.00 |
| விமானப் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் செலவு | 5,227.08 | 513.63 | 12,844.16 | 13,743.50 | 1,698.01 | 34,026.38 | 34,026.38 |
| வர்த்தக மற்றும் ஏனைய கொடுக்குமதிகள் | - | 69,442.96 | - | - | - | 69,442.96 | 69,442.96 |
| | 17,208.01 | 82,995.44 | 111,564.94 | 171,725.66 | 75,449.17 | 458,985.68 | 402,688.81 |
| **கம்பனி** | | | | | | | |
| வரி செலுத்தப்படும் பொறுப்புக்கள் | 11,681.41 | 3,998.33 | 74,700.56 | 42,416.77 | - | 132,797.07 | 121,756.42 |
| குத்தகைப் பொறுப்பு | 299.52 | 7,965.47 | 23,834.15 | 114,805.09 | 70,909.99 | 217,814.22 | 175,447.59 |
| விமானப் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் செலவு | 5,227.08 | 513.63 | 12,844.16 | 13,743.50 | 1,698.01 | 34,026.38 | 34,026.38 |
| வர்த்தக மற்றும் ஏனைய கொடுக்குமதிகள் | - | 79,185.71 | - | - | - | 79,185.71 | 79,185.71 |
| | 17,208.01 | 91,663.14 | 111,378.87 | 170,965.36 | 72,608.00 | 463,823.38 | 410,416.10 |

**(iii) கடன் இடர்நேர்கை**

கடன் இடர்நேர்கை என்பனது ஒரு நிதியியல் கருவி, அல்லது வாடிக்கையாளர் ஒப்பந்தம் என்பவற்றின் கீழ் எதிர்தரத்தவர் அவர்களது கடப்பாடுகளை சந்திக்கத்தவறும் பட்சத்தில் விளைவிக்கும் நிதியியல் நட்டமாகும். குழுமமானது பிரதானமாக அதன் தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து கடன் இடர்நேர்கைகக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது (முதன்மையாக வர்த்தக வருமதிகள்).

பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்தின் விற்பனைகள் ச.வி.போ.ச. இன் அங்கீகாரம் பெற்ற முகவர்களினால் மேற்கொள்ளப்படுகின்றன. அத்தகைய விற்பனைகளின் கடன் இடர்நேர்கையானது பரவலான பன்முகப்படுத்தலின் காரணமாக சார்பளவில் மிகவும் சிறிதாக காணப்படுகின்றது. இந்த முகவர்களிடமிருந்தான தீர்ப்பனவுகள் ச.வி.போ.ச. இன் பயணிகள் மற்றும் சரக்கு தீர்ப்பனவு திட்டங்களின் கீழ் திரட்டப்படுகின்றது. திரட்டப்படும் நிதியானது நேரடியாக ச.வி.போ.ச. ஆல் விமான நிறுவனத்திற்கு தீர்ப்பனவு செய்யப்படுவதுடன் அத்தகைய முகவர்களது கடன் செலுத்தும் ஆற்றலை மேலும் உறுதிப்படுத்துகின்றது. பாரிய விமான நிறுவனங்களிடையேயான வருமதிகள் மற்றும் கொடுக்குமதிகள் பிரதானமாக ச.வி.போ.ச. இன் தீர்வக இல்லத்தினூடாக தீர்ப்பனவு செய்யப்படுகின்றது. வருமதிகள் மற்றும் கொடுக்குமதிகள் பொதுவாக நிகர்செய்யப்பட்டு வாராந்த இடைவெளிகளில் தீர்ப்பனவு செய்யப்படுவதால் தவறுதல் இடர்நேர்கை மிகவும் குறைக்கப்படுகின்றது. ஏனைய சேவை தொடர்புகளுக்கு சேவையின் தன்மை மற்றும் நோக்கெல்லையினைப் பொறுத்து பிணையம் தேவைப்படுகின்றது. கடன்பட்டவர்களிடமிருந்தான அத்தகைய பிணையங்கள், வங்கி உத்தரவாதங்கள் பாதுகாப்பு வைப்புகள் மற்றும் ஏனைய பொறிமுறைகள் என்பவற்றை உள்ளடக்கும்.

சந்தேகத்திற்கிடமான வருமதிகளில் இடர்நேர்கை இனங்காணப்படும்போது வலுக்குன்றல் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**மூலதன முகாமைத்துவம்**

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு 3 இல் முற்றாக விளக்கியுள்ளவாறு வணிகத் திட்டத்தின் அடிப்படையில், இலங்கை அரசாங்கமானது அரச உத்தரவாதம்/ஆறுதல் கடிதம் என்பவற்றின் மூலம் கடன் நிதியினை திரட்டுவதன் மூலம் தேவையான நிதியினை உட்புகுத்துவதற்கு கடப்பாடுடன் உள்ளது என்பதை வெளிக்காட்டியுள்ளது.

## 32. ஒப்பிடப்படும் தகவல்கள்

சிறந்த காட்சியளிப்பினை அடைவதற்காக இலாப நட்டக் கூற்று மற்றும் நிதி நிலைமைக் கூற்று என்பவற்றிலுள்ள பின்வரும் உருப்படிகள் மீள்வகைப்படுத்தப்பட்டுள்ளன.

| | குழுமம் | | | கம்பனி | | |
|---|---|---|---|---|---|---|
| | 2020 | | 2020 | 2020 | | 2020 |
| | | மீள்வகைப்படுத்தல்கள் | மீள்வகைப்படுத்தல்கள் | | மீள்வகைப்படுத்தல்கள் | மீள்வகைப்படுத்தல்கள் |
| | ரூபா மில்ல். | ரூபா மில்ல். | ரூபா மில்ல். | ரூபா மில்ல். | ரூபா மில்ல். | ரூபா மில்ல். |
| **இலாப நட்டக் கூற்று** | | | | | | |
| பெறுமானத் தேய்வு/பெறுமானக் குறைப்பு | (1,544.60) | (17,846.95) | (19,391.55) | (1,214.05) | (17,799.78) | (19,013.83) |
| விமானங்களின் குறுங்கால குத்தகைகள் மீதான வாடகை மற்றும் உதிரி என்ஜின்கள் | - | (1,393.67) | (1,393.67) | - | (1,393.67) | (1,393.67) |
| ஏனைய தொழிற்பாட்டுச் செலவுகள் | (14,906.24) | (302.45) | (15,208.69) | (13,835.87) | (291.57) | (14,127.44) |
| கடைப்பிடிப்பதன் தாக்கம் SLFRS 16 | (19,543.07) | 19,543.07 | - | (19,485.02) | 19,485.02 | - |
| | | - | | | - | |
| நிதியிடல் நடவடிக்கைகளில் முதல் தடவையாக SLFRS 16 இனது தாக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டது | (23,643.08) | 23,643.08 | - | (23,514.38) | 23,514.38 | - |
| ஏனைய நிதிச் செலவு | (17,023.79) | 17,023.79 | - | (16,876.21) | 16,876.21 | - |
| நிதிச் செலவு | - | (40,666.87) | (40,666.87) | - | (40,390.59) | (40,390.59) |
| | | - | | | - | |
| **நிதி நிலைமைக்கான கூற்று** | | | | | | |
| வர்த்தக மற்றும் ஏனைய கொடுமதிகள் | 89,801.58 | (42.46) | 89,759.12 | - | - | - |
| விடுமுறைக்கு காசு வழங்கும் பொறுப்பு | 21,990.89 | 42.46 | 22,033.35 | - | - | - |
| | | - | | | - | |

# அருஞ்சொல் விளக்கக்கோவை

**கிடைக்கத்தக்க இருக்கை கிலோமீற்றர் (கி.இ.கி.)**
விற்பனைக்கு வழங்கப்பட்ட இருக்கைகளும் அதில் அவை பயணித்த தூரத்தினதும் பெருக்கற்பலன்

**கிடைக்கத்தக்க தொன் கிலோமீற்றர் (கி.தொ.கி.)**
இது போக்குவரத்துச் சாதனங்களை அளவிடும் ஒன்றாகும்.

பறப்பொன்றின் மூலம் உருவாக்கப்பட்ட கி.தொ.கி. என்பது தொன்களில் அளவிடப்பட்ட விமானத்தின் தாங்குசுமை கொள்திறனை பறந்த தூரத்தினால் பெருக்குதலாகும்.

**வருமானப் பயணிகள் கிலோமீற்றர் (வ.ப.கி.)**
கொண்டுசெல்லப்பட்ட பயணிகளதும் அவர்கள் கொண்டுசெல்லப்பட்ட தூரத்தினதும் பெருக்கற்பலன்

**வருமான தொன் கிலோமீற்றர் (வ.தொ.கி.)**
கொண்டுசெல்லப்பட்ட பயணிகளதும் பொதிகளதும் தொன்களில் அளவிடப்பட்ட சுமையினதும் அவை கொண்டுசெல்லப்பட்ட தூரத்தினதும் பெருக்கற்பலன்.

**சுமைக் காரணி**
வழங்கப்பட்ட கொள்திறனுக்கும் வருமானச் சுமைக்கும் இடையேயான தொடர்பின் சதவீதம்.

கிடைக்கத்தக்க இருக்கை கிலோமீற்றர்களுக்கு வருமானப் பயணிகள் கிலோமீற்றர் தொடர்பிலானதாக பயணிகள் சுமைக் காரணியானது விளங்குககையில் ஒட்டுமொத்த சுமைக் காரணியானது கிடைக்கத்தக்க தொன் கிலோமீற்றர்களுக்கு வருமானத் தொன் கிலோமீற்றர் தொடர்பிலானதாக விளங்குகின்றது.

**வருமானப் பயணிகள் கிலோமீற்றர் ஒன்றிற்கான வருமானம்**
வருமானம் பயணிகள் கிலோமீற்றர் ஒன்றிற்கான வருமானமானது வருமானப் பயணிகள் கிலோமீற்றருடன் பயணிகள் வருமானம் தொடர்புபட்டதாக விளங்குகின்றது.

**அலகொன்றிற்கான செலவு**
அலகொன்றிற்கான செலவு கிடைக்கத்தக்க தொன் கிலேமீற்றருடன் மொத்த செயற்பாட்டு செலவுகள் தொடர்புபட்டதாக விளங்குகின்றது.

**ஒட்டுமொத்த விளைவு**
ஒட்டுமொத்த விளைவானது வருமான தொன் கிலோமீற்றருடன் தேறிய போக்குவரத்து வருமானம் தொடர்புபட்டதாக விளங்குகின்றது.

தேறிய போக்குவரத்து வருமானமானது பயணிகள், மிகைப் பொதிக்கட்டணம் மற்றும் அஞ்சல் வருமானம் என்பவற்றின் கூட்டுத்தொகையாகும்.

**இலாப நட்டமற்ற சுமைக் காரணி**
அட்டவணையிடப்பட்ட விமானச் செயற்பாடுகளிலிருந்தான வருமானத்தை செயற்பாட்டு செலவினங்களுடன் சமப்படுத்துவதற்கு தேவையான சுமைக் காரணி என்று பொருள்படும்.



# பத்து வருட பகுப்பாய்வு

| | | 2012 | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|---|---|
| **வருமானக் கூற்று** | | | | | |
| வருமானம் | ரூ.மில். | 92,867.93 | 119,570.90 | 121,585.83 | 131,922.13 |
| தொழிற்பாட்டுச் செலவினம் | ரூ.மில். | 111,775.88 | 146,700.24 | 150,389.46 | 145,983.35 |
| தேறிய இலாபம்/(நட்டம்) | ரூ.மில். | (19,778.03) | (26,088.57) | (32,408.34) | (16,494.66) |
| **நிதி நிலைமைக் கூற்று** | | | | | |
| பங்கு மூலதனம்/கூறபப்பட்ட மூலதனம் | ரூ.மில். | 19,432.67 | 32,032.75 | 51,617.44 | 51,617.44 |
| நடைமுறையல்லா சொத்துக்கள் | ரூ.மில். | 37,591.58 | 23,338.28 | 25,212.47 | 22,836.77 |
| நடைமுறைச் சொத்துக்கள் | ரூ.மில். | 22,072.71 | 54,905.22 | 37,154.23 | 49,721.49 |
| மொத்த சொத்துக்கள் | ரூ.மில். | 59,664.29 | 78,243.50 | 62,366.70 | 72,558.26 |
| நடைமுறை பொறுப்புக்கள் | ரூ.மில். | 64,235.43 | 71,346.64 | 88,609.07 | 103,414.31 |
| **விளைவு/அலகொன்றிற்கான செலவு** | | | | | |
| ஒட்டுமொத்த விளைவு | ரூ.தொன்.கி.மீ. | 64.47 | 74.31 | 77.26 | 80.32 |
| அலகொன்றிற்கான கிரயம் (நிதிச் செலவினம் மற்றும் பி.வை.வ. நீங்கலாக) | ரூ.தொன்.கி.மீ. | 53.26 | 63.15 | 65.00 | 62.00 |
| சமநிலை சுமைக் காரணி | % | 82.61 | 84.98 | 84.13 | 77.18 |
| வ.ப.கி. ஒன்றிற்கான வருமானம் | ரூ./வபகி | 6.6 | 7.6 | 7.8 | 8.2 |
| **உற்பத்தி** | | | | | |
| பயணிகள் தொள்திறன் | கி.இ.கி.மில். | 14,248.94 | 15,944.31 | 15,780.54 | 16,180.27 |
| ஒட்டுமொத்த கொள்திறன் | கி.தொ.கி.மில். | 1,978.33 | 2,186.96 | 2,187.18 | 2,224.87 |
| **போக்குவரத்து** | | | | | |
| கொண்டுசெல்லப்பட்ட பயணிகள் | ஆயிரங்களில் | 3,459 | 4,255 | 4,175 | 4,348 |
| கொண்டுசெல்லப்பட்ட பயணிகள் | வபகி மில். | 11,270.23 | 12,968.74 | 12,810.95 | 12,963.71 |
| பயணிகள் சுமைக் காரணி | % | 79.10 | 81.34 | 81.18 | 80.12 |
| கொண்டு செல்லப்பட்ட சரக்கு | தொன்கள் | 87,750 | 101,100 | 94,410 | 101,878 |
| கொண்டு செல்லப்பட்ட சரக்கு சுமை | வதொகி மில். | 345.67 | 377.75 | 355.59 | 373.32 |
| கொண்டுசெல்லப்பட்ட ஒட்டுமொத்த சுமை | வதொகி மில். | 1,338.30 | 1,513.70 | 1,466.74 | 1,519.93 |
| ஒட்டுமொத்த சுமைக் காரணி | % | 67.65 | 69.22 | 67.06 | 68.32 |
| **பணியாட்கள்** | | | | | |
| சராசரி பலம் | எண்ணிக்கை | 5,594 | 6,359 | 6,578 | 6,987 |
| பணியாள் ஒருவருக்கான வருமானம் | ரூபா. | 16,601,346 | 18,803,412 | 18,483,708 | 18,881,084 |
| பணியாள் ஒருவருக்கான கொள்திறன் | தொன் - கி.மீ. | 353,652 | 343,916 | 332,499 | 318,430 |
| பணியாள் ஒருவருக்கான கொண்டுசென்ற சுமை | தொன் - கி.மீ. | 239,238 | 238,041 | 222,976 | 217,537 |
| **விமானத் தொகுதி** | | | | | |
| A320-200 | எண்ணிக்கை | 7 | 8 | 8 | 6 |
| A321-200 | எண்ணிக்கை | - | - | - | 2 |
| A320 NEO | எண்ணிக்கை | - | - | - | - |
| A321 NEO | எண்ணிக்கை | - | - | - | - |
| A330-200 | எண்ணிக்கை | 7 | 7 | 7 | 7 |
| A330-300 | எண்ணிக்கை | - | - | - | 2 |
| A340-300 | எண்ணிக்கை | 6 | 6 | 6 | 4 |
| டேர்போ ஒட்டர | எண்ணிக்கை | 2 | 1 | - | - |
| வருட இறுதியில் சேவையிலுள்ள விமானம் | எண்ணிக்கை | 22 | 22 | 21 | 21 |
| விமானப் பயன்பாடு | | | | | |
| வானூர்திகள் | நாளொன்றிற்கான திரள் மணித்தியாலங்கள் | 13.48 | 12.82 | 12.76 | 12.90 |

| | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 |
|---|---|---|---|---|---|---|
| | 129,480.41 | 135,491.19 | 161,433.87 | 180,340.32 | 180,151.02 | **50,693.85** |
| | 137,311.44 | 146,760.80 | 175,883.85 | 206,344.66 | 190,321.69 | **81,405.99** |
| | (12,621.69) | (28,929.99) | (17,213.57) | (44,022.67) | (47,197.86) | **(45,231.46)** |
| | 51,617.44 | 51,617.44 | 51,617.44 | 51,617.44 | 51,617.44 | **79,352.43** |
| | 23,548.01 | 24,660.56 | 37,476.46 | 36,596.59 | 150,013.50 | **122,471.42** |
| | 26,901.02 | 26,973.07 | 30,090.50 | 40,742.41 | 31,176.10 | **31,909.99** |
| | 50,449.03 | 51,633.63 | 67,566.96 | 77,338.99 | 181,189.60 | **154,381.41** |
| | 100,334.44 | 126,302.55 | 130,358.61 | 227,081.67 | 242,821.23 | **253,218.98** |
| | 79.06 | 80.08 | 84.24 | 91.32 | 99.03 | **146.86** |
| | 58.72 | 61.61 | 65.74 | 74.31 | 74.22 | **105.23** |
| | 74.27 | 76.94 | 78.04 | 81.37 | 74.95 | **71.65** |
| | 8.2 | 8.4 | 8.6 | 9.4 | 10.2 | **21.8** |
| | 15,790.28 | 15,608.10 | 18,487.54 | 18,925.40 | 18,041.41 | **3,816.40** |
| | 2,165.21 | 2,167.92 | 2,549.88 | 2,577.53 | 2,454.30 | **794.52** |
| | 4,328 | 4,446 | 5,839 | 5,663 | 5,256 | **167** |
| | 12,727.66 | 12,455.05 | 15,280.78 | 15,689.19 | 14,547.97 | **748.13** |
| | 80.60 | 79.80 | 82.65 | 82.90 | 80.64 | **19.60** |
| | 102,082 | 116,221 | 132,958 | 125,753 | 113,971 | **56,406** |
| | 356.76 | 374.46 | 401.66 | 408.71 | 363.31 | **244.93** |
| | 1,484.77 | 1,475.29 | 1,749.14 | 1,806.58 | 1,664.49 | **312.26** |
| | 68.57 | 68.05 | 68.60 | 70.09 | 67.82 | **39.30** |
| | 6,959 | 7,021 | 7,019 | 6,794 | 6,693 | **5,965** |
| | 18,606,181 | 19,297,991 | 22,999,555 | 26,544,057 | 26,916,333 | **8,498,550** |
| | 311,139 | 308,776 | 363,283 | 379,383 | 366,697 | **133,196** |
| | 213,359 | 210,126 | 249,201 | 265,908 | 248,691 | **52,349** |
| | 6 | 6 | 5 | 5 | 5 | **5** |
| | 2 | 3 | 3 | 2 | 2 | **1** |
| | - | 2 | 2 | 2 | 2 | **2** |
| | - | - | 3 | 4 | 4 | **4** |
| | 6 | 6 | 6 | 7 | 5 | **5** |
| | 7 | 7 | 7 | 7 | 7 | **7** |
| | - | - | - | - | - | **-** |
| | - | - | - | - | - | **-** |
| | 21 | 24 | 26 | 27 | 25 | **24** |
| | 12.02 | 12.44 | 13.25 | 12.60 | 12.18 | **2.98** |

# விமானப் பயண வரைபடம்




ஸ்ரீலங்கள் எயார்லைன்ஸ் தற்போது ஐரோப்பா, மத்திய கிழக்கு, தெற்காசியா, தென் கிழக்கு ஆசியா, தூர கிழக்கு மற்றும் வட அமெரிக்கா போன்ற 55 நாடுகளில் 122 பயண இலக்குகளுக்கு சேவையாற்றுகின்றது.


Oslo
Helsinki
Stockholm
Moscow
Edinburgh
Copenhagen
Manchester
Amsterdam
Prague
Dublin
Brussels
Dusseldorf
Kyiv Boryspil
London
Frankfurt
Paris
Munich
Budapest
Geneva
Zurich
Turin
Venice
Belgrade
Milan
Sofia
Istanbul
Heydar Aliyev
Madrid
Barcelona
Rome
Thessaloniki
Palermo
Catania
Athens
Larnaca
Casablanca
Amman
Kuwait
Dammam
Bahrain
Riyadh
Doha
Dubai
Abu Dhabi
Muscat
Karachi
Lahore
Amritsar
New Delhi
Lucknow
Kathmandu
Jaipur
Patna
Guwahati
Dhaka
Bhubaneswar
Mumbai
Hyderabad
Bangalore
Chennai
Coimbatore
Tiruchirappalli
Kochi
Madurai
Trivandrum
Colombo
Malé
Gan Island
Nairobi
Johannesburg
Cape Town
Seoul
Chitose*
Tokyo (Narita)
Tokyo (Haneda)
Osaka (Itami)
Nagoya
Fukuoka*
Osaka (Kansai)
Shanghai
Guangzhou
Hong Kong
Hanoi
Yangon
Bangkok
Phnom Penh
Ho Chi Minh
Phuket
Langkawi
Penang
Kuala Lumpur
Singapore
Jakarta
Darwin
Brisbane
Perth
Sydney
Adelaide
Melbourne
Auckland

# மைல்கற்கள்

## 2011/2012

கம்பனியானது நான்கு எயார்பஸ் ஏ 320 விமானங்கள், இரண்டு எயார்பஸ் ஏ 330 அகலமான உருவமைப்புடைய விமானங்கள் மற்றும் ஒரு ஏ340 அகலமான உருவமைப்புடைய விமானம் ஆகியவற்றை ஓர் செயற்பாட்டு குத்தகை ஒப்பந்தத்தின் கீழ் விநியோகத்தினைப் பெற்றுக்கொண்டது.

விமான நிறுவனத்தினை மீள் மூலதனமளிப்பதற்காக அமைச்சரவையானது USD 500 மில்லியன் உரித்துவ முதலீட்டிற்கு அங்கீகாரமளித்தது.

## 2012/2013

எயார்பஸ் ஏ 320 விமானிகளை பயிற்றுவிப்பதற்காக இலங்கையில் முதலாவது ஏ 320 விமான பாவனையாக்கியானது ஆரம்பித்துவைக்கப்பட்டது.

கம்பனியானது ஒரு எயார்பஸ் ஏ 320 விமானத்தின் விநியோகத்தினை ஓர் செயற்பாட்டு குத்தகை ஒப்பந்தத்தின் கீழ் பெற்றுக்கொண்டது.

மத்தல சர்வதேச விமான நிலையத்திலிருந்து சர்வதேச விமானப் பயணங்களை ஆரம்பித்தமை.

மே 2012 இல் கம்பனியானது USD 175 மில்லியன் தொகைக்கான நிதியளிப்பினை பெற்றுக்கொள்வதற்காக வெளிநாட்டு வங்கிகளின் கூட்டமைப்பொன்றுடன் ஓர் நிதியளித்தல் உடன்படிக்கையில் சேர்ந்தமை.

## 2013/2014

எயார்பஸ் ஏ 330 விமானத்திற்கான விமானிகள் பயிற்சிக்காக விமான பாவனையாக்கியானது ஆரம்பித்துவைக்கப்பட்டது. டிசம்பர் 2013 இல், கம்பனியானது அமடியஸ் அல்டியாவுடன் ஓர் புதிய பயணிகள் சேவை முறைக்கு மாறியது.

மார்ச் 2014 இல், USD 150 மில்லியன் தொகைக்கான மத்திய கால கடனொன்றை பெற்றுக்கொள்வதற்காக வெளிநாட்டு வங்கிகளின் கூட்டமைப்பொன்றுடன் ஓர் நிதியளித்தல் உடன்படிக்கையில் சேர்ந்தமை.

## 2014/2015

கம்பனியானது மே 2014 இல் ஒருலகக் கூட்டணியில் இணைந்தது. ஜூன் 2014 இல் கம்பனி முதற்தடவையாக ஓர் ஐந்து வருட சர்வதேச முறியினை வழங்கியது.

கம்பனியானது அதன் விமானங்களை அகலமான உருவமைப்புடைய விமானங்களுக்கு மாற்றும் திட்டத்தின் ஓர் அங்கமாக மூன்று புத்தம் புதிய ஏ 330-300 விமானங்களின் விநியோகத்தினை முறையே ஒக்டோபர் 2014 மற்றும் மார்ச் 2015 இல் பெற்றுக்கொண்டது.

## 2015/2016

விமான நிறுவனமானது பின்வரும் நான்கு பிரசித்திபெற்ற விருதுகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டது: ஏபெக்ஸ் பயணிகள் தெரிவு விருதுகள் 2015 இல் ஆசியா மற்றும் அவுஸ்திரேலிய பிராந்தியத்தில் சிறந்தது, சிறந்த விமானத்தினுள்ளான பிரசுரிப்பு, 'சிறந்த விமானத்தினுள்ளான காணொளி' மற்றும் சிறந்த தரை அனுபவம் என்பவையாகும். இதுவே முதற்தடவையாக விமான நிறுவனம் நான்கு பிரிவுகளுக்கு பெயரிடப்பட்டது. ஏபெக்ஸ் போர்ட்லண்ட் ஒரிகன் செப்டம்பர் 2015 இல் விமான நிறுவனமானது ஆசியா மற்றும் அவுஸ்திரேலியாவில் பயணிகள் அனுபவத்திற்கான உயர்வான சாதனை விருதினை வென்றது. அதேபோல் சிங்கப்பூரில் இடம்பெற்ற எதிர்கால பிரயாண அனுபவ விருதுகள் ஆசியா 2015 இல் மத்திய மற்றும் தெற்காசியாவுக்கான சிறந்த முழுமையான சேவை விமானநிறுவன விருதினை வென்றது.

கம்பனியானது அதன் விமானங்களை அகலமான உருவமைப்புடைய விமானங்களுக்கு மாற்றும் திட்டத்தின் ஓர் அங்கமாக நான்கு புதிய ஏ 330-300 விமானங்களது விநியோகத்தினை ஆகஸ்ட் மற்றும் நவம்பரிலும் இரண்டு விமானங்களது விநியோகத்தினை டிசம்பர் 2015 இலும் பெற்றுக்கொண்டது.

## 2016/2017

பெப்ரவரி 2017 மற்றும் மார்ச் 2017 இல் இரண்டு ஏ 320 நியோ விமானங்களது அறிமுகம் - முதலாவது இரண்டு புதிய என்ஜின் தெரிவு விமானங்கள், ஸ்ரீலங்கன் விமானங்களுடன் சேர்ந்து பதினொரு கிளர்ச்சியூட்டும் புதிய பயண இலக்குகளை ஆரம்பித்தது. அவை லாஹோர், ஜக்கார்த்தா, டாக்கா, கல்கத்தா, மதுரை, வரனாசி, புத்தகாயா, மஸ்கட், பாரேன், சீசெல்ஸ் மற்றும் கேன் தீவுகள் என்பனவாகும்.

எதிர்கால பிரயாண அனுபவம் ஆசியா 2016 வைபவத்தில், தொடர்ச்சியாக இரண்டாவது வருடமாக "உயர்ந்த பிரயாண விருது", "தெற்காசியாவின் சிறந்த விமான நிறுவனம்", "மத்திய மற்றும் தெற்காசியாவின் சிறந்த முழுமையான சேவைகள் விமான நிறுவனம்" ஆகிய விருதுகளை வென்றது.

விமான நிறுவனமானது 7ஆவது ஆசிய பணிக்கொள்பவர் வணிக நாம விருதுகளில், "பயிற்றுவித்தல் தனிச்சிறப்பு விருது" மற்றும் "வணிகத்துடன் ஒத்ததான சிறந்த மனித வள மூலோபாயம்" என்பவற்றை வென்றது.

## 2017/2018

கம்பனியானது அதன் விமானங்களின் ஓர் பகுதியாக மூன்று புதிய எயார்பஸ் A321நியோ விமானங்களது விநியோகத்தினை ஜூன், ஒக்டோபர் மற்றும் டிசம்பர் 2017 இல் பெற்றுக்கொண்டது.

ஸ்ரீலங்கன் அதன் சேவைகளை நான்கு புதிய பயண இலக்குகளுக்கு ஆரம்பித்தது - மெல்போர்ன், ஐதராபாத், கோயம்புத்தூர் மற்றும் விசாகபட்டினம். விமான நிறுவன பயணிகள் அனுபவச் சங்கத்திலிருந்து (வி.ப.அ.ச.) விமான நிறுவனமானது நான்கு நட்சத்திர தரப்படுத்தல் தனிச்சிறப்பினைப் பெற்றது. அத்துடன், சிங்கப்பூரில் இடம்பெற்ற எதிர்கால பிரயாண அனுபவங்கள் விருது 2017 இல் விமான நிறுவனமானது தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டாக சிறந்த சேவைக்கான விருதினை வென்றது.

கம்பனி சிங்கப்பூரில் இடம்பெற்ற விமானத்தினுள்ளான ஆசிய பசிபிக் விருதுகள் 2017 இல் "வர்த்தக விமான நிறுவன வானறைகளிலான புத்தாக்கம்" விருதினை வென்றது.

## 2018/2019

கம்பனியானது மற்றுமோர் புத்தம் புதிய எயார்பஸ் ஏ 321 நியோ விமானத்தின் விநியோகத்தினை ஜூலை 2018 இல் பெற்றதுடன் நியோ விமானங்களின் அறிமுகத்தினை நிறைவுசெய்தது.

செப்டம்பர் 2018 இல் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் உலகின் மிகவும் நேரம் தவறாத விமான நிறுவனமாக வந்தது. இது Flightstats. com எனும் விமானத் தரவுகள் பகுப்பாய்வுக் கம்பனியினால் தரப்படுத்தப்பட்ட 'உலகளாவிய விமான நிறுவனம்' மற்றும் 'பாரிய விமான நிறுவனங்கள்' போன்ற முக்கிய பிரிவுகளிலாகும். ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் தொடர்ச்சியாக இரண்டாவது வருடமாக விமான நிறுவன பயணிகள் அனுபவங்கள் சங்கத்தின் நான்கு நட்சத்திர தரத்தினை பேணியதுடன் பல புகழ்மிக்க சர்வதேச விருதுகளையும் வென்றது.

இவை தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டாக இந்து சமுத்திரத்திற்கான உலகின் முன்னணி விமான நிறுவனம் மற்றும் ITB பேர்லினில் மூன்று தங்க சிட்டி கேட் விருதுகளையும் வென்றது.

## 2019/2020

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் 40 வருடங்கள் சேவையினை செப்டம்பர் 2019 இல் கொண்டாடியது. விமான நிறுவன பயணிகள் அனுபவச் சங்கத்திலிருந்து (வி.ப.அ.ச.) தேசிய வானூர்தியானது உலகளாவிய "சிறந்த சந்தைப்படுத்தல் புத்தாக்கம்" விருதினைப் பெற்றது. ஸ்ரீலங்கன் தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டாக பாரிய விமான நிறுவனங்கள் பிரிவில் நான்கு நட்சத்திர தரத்தினை வென்றது.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் 'இரண்டு நகரங்கள், ஒரு ஆன்மா' பிரச்சாரத்திற்காக பாட்டா தங்க விருதினையும் ITB பேர்லின் கோல்டன் சிட்டி கேட் 2019 விருதுகளில் இன்னும் மூன்று விருதுகளையும் வென்றது. ITB பேர்லின் கோல்டன் சிட்டி கேட் 2020 விருதுகளில் மூன்று பிரிவுகளில், ("சர்வதேச விமான நிறுவனம்", "சர்வதேச இசை" மற்றும் "பிரச்சாரம்") ஒரு நட்சத்திர விருதுகளைப் பெற்றுக்கொண்டது. உலக பிரயாண விருதுகள் ஆசியா மற்றும் ஓசியானாவில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் புகழ்மிக்க 'உலகின் முன்னணி விமானநிறுவனம்' மற்றும் 'இந்து சமுத்திரத்திற்கான ஆசியாவின் முன்னணி விமான நிறுவனம்' விருதினை வென்றது.

## 2020/21

கோவிட்க்குப் பிந்தைய விமானப் பயணத்தின் போது பயணிகளின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக்காக APEX ஹெல்த் சேஃப்டியால் பிளாட்டினம் தரநிலை அந்தஸ்து வழங்கப்பட்டது.

ஃபியூச்சர் டிராவல் எக்ஸ்பீரியன்ஸ் (FTE) விர்ச்சுவல் எக்ஸ்போ விருது வழங்கும் விழாவில், 2021 ஆம் ஆண்டிற்கான "மேஜர் அதிகாரப்பூர்வ விமான நிறுவனத்திற்கான நான்கு நட்சத்திர மதிப்பீடு" ஏர்லைன் பயணிகள் அனுபவ சங்கம் (APEX) வழங்கியது.

உலகளாவிய தொற்றுநோய்களின் போது இலங்கை ஏற்றுமதியாளர்களை ஆதரிப்பதற்காகவும், பயணிகளின் பயணம் குறைந்து வரும் நிலையில் மாற்று வருமான வழிகளைக் கண்டறியும் நோக்கிலும் சரக்கு விமானங்கள் முதல் முறையாக அட்டவணையில் இணைக்கப்பட்டன.

தொற்றுநோயால் எழும் எல்லை மூடல் காரணமாக வெளிநாட்டில் சிக்கித் தவிக்கும் இலங்கையர்களைத் திருப்பி அனுப்புவதற்காக சிறப்பு பயணிகள் விமானங்கள் இயக்கப்பட்டன மற்றும் அவசர மருத்துவப் பொருட்களைக் கொண்டு செல்வதற்கு சிறப்பு சரக்கு விமானங்கள் இயக்கப்பட்டன.

# கூட்டாண்மை தகவல்கள்

**கம்பனியின் பெயர்**
ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ்

**கம்பனி பதிவீட்டு இலக்கம்**
PB 67

**சட்ட வடிவம்**
பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனி

**பணிப்பாளர் சபை**
திரு. அசோக் பத்திரகே (தலைவர்)
திரு. மலிக் பர்னாந்து
திரு. மனோஹர ரத்னவிபூஷன டி சில்வா ஜ.ச
திரு. சமந்த ரத்வத்த ஜ.ச
கலாநிதி. ஸ்ரீதிர் சரிபுட்ட ஹன்ச விஜயசூரிய
திரு. சஞ்சய மொஹொட்டால
திரு. ஜோசப் ஜயந்த் மைக்கல் பெரேரா

**சபை கணக்காய்வுக் குழு**
திரு. சஞ்சய மொஹொட்டால(சார்புகால தலைவர்)
திரு. மலிக் பர்னாந்து
திரு. மனோஹர ரத்னவிபூஷன டி சில்வா ஜ.ச
திரு. சமந்த ரத்வத்த ஜ.ச
(2021 ஏப்ரல் 23 அன்று குழுவிலிருந்து விலகினார்)
கலாநிதி. ஸ்ரீதிர் சரிபுட்ட ஹன்ச விஜயசூரிய
திரு.ஜோசப் ஜயந்த் மைக்கல் பெரேரா
(2021 ஏப்ரல் 23 அன்று குழுவுக்கு நியமிக்கப்பட்டார்)

**சபை மனித வளம் மற்றும் ஊதியக் குழு**
கலாநிதி. ஸ்ரீதிர் சரிபுட்ட ஹன்ச விஜயசூரிய (தலைவர்)
திரு. மலிக் பர்னாந்து
திரு. மனோஹர ரத்னவிபூஷன டி சில்வா ஜ.ச
திரு. சமந்த ரதவத்த ஜ.ச
திரு. சஞ்சய மொஹொட்டால

**சபை இடர்நேர்கைக் குழு**
திரு. ஜோசப் ஜயந்த் மைக்கல் பெரேரா (இடர்நேர்கைக் குழுவின் தலைவர்)
திரு. மலிக் பர்னாந்து
கலாநிதி. ஸ்ரீதிர் சரிபுட்ட ஹன்ச விஜயசூரிய
திரு. சஞ்சய மொஹொட்டால
திரு. மனோஹர ரத்னவிபூஷன டி சில்வா ஜச

**கம்பனி செயலாளர்/கூட்டாண்மை செயலகத்தின் தலைவர்**
திருமதி. டெல்ரீன் திருக்குமார் (ACIS)

**வங்கியாளர்கள்**
இலங்கை வங்கி
மக்கள் வங்கி
ஸ்டான்டர்ட் சாட்டர்ட் வங்கி
சிட்டி வங்கி
சம்பத் வங்கி பி.எல்.சி.
நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பி.எல்.சி
ஹட்டன் நெஷனல் வங்கி பி.எல்.சி
கொமர்ஷல் பேங் ஒவ் சிலோன் பி.எல்.சி
அமானா பேங் பி.எல்.சி
கார்கில்ஸ் வாங்கி
கெரெடிட் சூயிஸ்

**கணக்காய்வாளர்கள்**
கணக்காய்வாளர் அதிபதி
தேசிய கணக்காய்வு காரியாலயம்
306/72 பொல்துவ வீதி
பத்தரமுல்ல.

**பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்**
விமானச்சேவை மையம்
பண்டாரநாயக்கா சர்வதேச விமானநிலையம்
கட்டுநாயக்கா
இலங்கை

**கூட்டாண்மை இணையத்தளம்**
www.srilankan.com

optima
Designing Your Year!
Designed & Produced by
Optima Designs (Pvt) Ltd.
A full service design and print company.
www.optimadesigns.lk

Printed by : Printing Section (Logistics & Properties) | SriLankan Airlines Ltd

# கூட்டம் பற்றிய அறிவித்தல்

இவ் அறிவித்தல் மூலம் கூறப்படுவது யாதெனில், வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் பங்குதாரர்களுக்கான நாற்பத்து மூன்றாவது வருடாந்த பொதுக் கூட்டம் 2022 மே 27, வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 07, இலங்கையில் அமைந்துள்ள பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் (BMICH) “மிஹிலக்க மெதுரவில்” பின்வரும் நோக்கங்களுக்காக நடைபெறும் என்பதாகும்:

1. பணிப்பாளர் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் 31 மார்ச் 2021 இல் நிறைவடைந்த நிதி ஆண்டுக்கான நிதியியல் கூற்றுக்களுடன் அவற்றிலான கணக்காய்வாளரது அறிக்கையினையும் பெற்று ஆலோசனை செய்வதற்கு.

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 (1) வது பிரிவின்படி கணக்காய்வாளர் நாயகம் நிறுவனத்தை தணிக்கை செய்ய வேண்டும்.

சபையின் கட்டளையின் பிரகாரம்,

**திருமதி டெல்ரீன் திருக்குமார்**
*குழும செயலாளர் சேவைகளின் தலைவர்/கம்பனிச் செயலாளர்*

கட்டுநாயக
2 மார்ச் 2022

# கூட்டம் பற்றிய அறிவித்தல்

**குறிப்புக்கள்:**

### 1. சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள்

சுகாதார மற்றும் உள்நாட்டு மருத்துவ சேவைகள் (சுகாதார அமைச்சு) அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள சுகாதார மற்றும் பாதுகாப்பு வழிகாட்டிகள் மற்றும் கூட்டத்திற்கு சமூகமளிக்கும் அனைவரதும் பாதுகாப்பு மற்றும் நலனை உறுதிசெய்வதற்காக நிகழ்விடத்தினால் அமுல்படுத்தப்பட்ட நியமங்கள் ஆகியவற்றிற்கு இணங்கியொழுகி இக்கூட்டம் நடைபெறும். அத்தகைய வழிகாட்டிகள் மற்றும் நியமங்களுடன் இணங்கியொழுகுவதில் பின்வருவனவற்றை கவனத்திற்கொள்ளவும்:

ஆ) அனைத்து பங்கேற்பாளர்களும் வெப்பநிலை சோதனைக்கு உட்படல் வேண்டும்.

ஆ) சுகாதார அமைச்சினால் குறித்துரைக்கப்பட்ட விதிமுறைகளுக்கு அதிகமாக வெப்பநிலையினை பதிவுசெய்யும் நபர்கள் கூட்ட மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

இ) இருமல், சளி, தொண்டை வலி உள்ளடங்களான ஏதேனும் வகையான சுவாச தொற்றுநோய் அல்லது வேறு ஏதேனும் அதனையொத்த நோய் அறிகுறிகளையுடைன நபர்கள் கூட்டம் நடைபெறும் மண்டபத்திற்குள் நுழைய அனுமதிக்கப்படமாட்டார்கள்.

ஈ) கைகுலுக்குதல் போன்ற உடல் ரீதியான தொடர்பு அனுமதிக்கப்படாததுடன் கூட்டம் நிறைவடைந்ததன் பின்னர் பங்கேற்பாளர்கள் புறப்படாமல் காலங்கடத்துவதற்கோ அல்லது தங்கியிருக்கவோ அனுமதிக்கப்படமாட்டார்கள்.

உ) முகக் கவசம் அணிந்திருத்தல் மற்றும் சமூக இடைவெளியை பேணல் போன்ற சுகாதார வழிகாட்டல்கள் மற்றும் நியமங்களை பின்பற்றாத எந்த ஒரு நபரும் கூட்டம் இடம்பெறும் மண்டபத்தில் இருந்து வெளியேற வேண்டும்.

ஊ) கூட்டத்தில் கலந்து கொள்ளும் வேளை பொருத்தமான முகக் கவசம் ஒன்றை அணிந்திருக்க வேண்டும்.

### 2. பதிலாளால் வாக்களிப்பு

எமது அங்கத்தவர்களின் சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு எமக்கு முக்கியமாதலால், பணிப்பாளர் சபையின் அங்கத்தவர் ஒருவரை, பதிலாள் மூலம் அங்கத்தவர்களை பிரதிநிதித்துவம் செய்து அவர்கள் சார்பில் வாக்களிப்பதற்கு, நியமிக்குமாறு அங்கத்தவர்கள் ஊக்குவிக்கப்படுகின்றார்கள். பதிலாள் படிவத்தின் மறுபுறத்தில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய அங்கத்தவர்கள் கூட்டத்தில் எடுக்கப்படவிருக்கும் விசேட தீர்மானங்களில் தங்களது வாக்களிப்பு விருப்பத்தேர்வுகளை மற்றும் பதிலாள் படிவத்தினை நிரப்பி அதனை கம்பனியிடம் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

### 3. கூட்டத்தில் பங்கேற்றல்

ஓர் அங்கத்தவர் நேரில் அல்லது பதிலாளாக (கம்பனியின் பணிப்பாளர் அல்லாத ஒருவர்) கூட்டத்தில் பங்கேற்க விரும்பினால் அத்தகைய அங்கத்தவர் அல்லது அவர்களது பதிலாள் பின்வருமாறு வேண்டப்படுகின்றார்கள்:

அ) பதிவு செய்வதற்கு, கட்டாய சுகாதார பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு மற்றும் தேவைப்படும் படிவங்களை நிரப்புவதற்கு மற்றும் நெருக்கமாய் கூடுவதனை தவிர்ப்பதற்காக நேரத்திற்கு முன்பாகவே வருகை தருதல்.

ஆ) கம்பனியினால் அமுல்படுத்தப்படும் சுகாதார மற்றும் பாதுகாப்பு வழிமுறைகளுடன், ஒத்துழைத்தல் இவை. கூட்டத்தில் அனைத்து பங்கேற்பவர்களது சிறந்த நலனைக் கருத்திற்கொண்டு மேற்கொள்ளப்படுகின்றன.

அங்கத்தவர்கள் மற்றும் / அல்லது அவர்களது பதிலாட்கள் சுகயீனமுற்று காணப்பட்டால், கூட்டத்திற்கு சமூகளிக்க வேண்டாம் என கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

கூட்டத்தில் பங்கேற்பவர்களது சிறந்த நலனைக் கருத்திற்கொண்டு, கூட்டம் தொடர்பாக கம்பனி ஏதேனும் மேலதிக நடவடிக்கையினை மேற்கொள்ளவேண்டி ஏற்பட்டால், அரசாங்கத்தினால் ஏதேனும் தொடர்பாடல்கள், வழிகாட்டிகள், பணிப்புரைகள் அல்லது கட்டளைகள் வழங்கப்பட்டிருப்பின், அத்தகைய நடவடிக்கையின் அறிவித்தலானது கம்பனியின் இணையத்தளம் - www. srilankan.com இலும், மற்றும் தேசிய பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்படும்.

# பதிலாள் படிவம்

வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ்

*நான்/நாங்கள,.........................................................................................................................................................இன

.............................................................................................................................................................................

வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் அங்கத்தவராக/அங்கத்தவர்களாக ..........................................................................

.........................................................................................................................................................இன்

........................................................................................................................ இத்தால் நியமிக்கின்றேன் அல்லது அவர் இல்லாவிடின் பின்வரும் பணிப்பாளர்களுள் ஒருவரை

திரு. அசோக பத்திரகே
திரு. மலிக் பர்னாந்து
திரு. மனோஹர டி சில்வா ஜ.ச.
திரு. சமந்த ரத்வத்த ஜ.ச.
கலாநிதி. ஸ்ரீதிர் சரிபுட்ட ஹன்ச விஜயசூரிய
திரு. சஞ்சய மொஹொட்டால
திரு. ஜோசப் ஜெயந் மைக்கல் பெரேரா

*எனது/எமது பதிலாளாக என்னை/எம்மை பிரதிநிதித்துவப்படுத்தி எனது/எமது சார்பில் இலங்கை, கொழும்பு 07, பவுத்தாலோக்க மாவத்தையில் அமைந்துள்ள பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் (BMICH) “மிஹிலக்க மெதுரவில்” 27 மே 2022, பிற்பகல் 3.00 மணிக்கு இடம்பெறவுள்ள வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் பங்குதாரர்களுக்கான நாற்பத்து இரண்டாவது வருடாந்த பொதுக் கூட்டத்தில் வாக்களிக்க அனுமதிப்பதுடன் மற்றும் அதிலிருந்தான ஏதேனும் ஒத்திவைப்புக்களுக்கும் அனுமதியளிக்கின்றேன் /அனுமதியளிக்கின்றோம்.

| | ஆதரவாக | எதிராக |
|---|---|---|
| 1. பணிப்பாளர் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் 31 மார்ச் 2021 இல் நிறைவடைந்த நிதி ஆண்டுக்கான நிதியியல் கூற்றுக்களுடன் அவற்றிலான கணக்காய்வாளரது அறிக்கையினையும் பெற்று ஆலோசனை செய்வதற்கு. | ☐ | ☐ |

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) வது பிரிவின்படி கணக்காய்வாளர் நாயகம் நிறுவனத்தை தணிக்கை செய்ய வேண்டும்.

இரண்டாயிரத்து இருபதாம் ஆண்டு.............................................................................................................. மாதம்

........................................................................................................ இரண்டாயிரத்து இருபத்தி இரண்டாம் ஆண்டு

............................................................
கையொப்பம்/கையொப்பங்கள்

**குறிப்பு:**
(அ) *தயவுசெய்து பொருத்தமற்ற வார்த்தைகளை நீக்கிவிடவும்
எந்த வார்த்தைகளும் நீக்கப்பட்டிருக்காவிட்டால் அல்லது பதிலாள் வைத்திருப்பவர் எவ்வாறு பதிலாள் வைத்திருப்பவர் வாக்களித்தல் வேண்டும் என்பதில் ஏதேனும் சந்தேகம் காணப்படின் (பதிலாள் படிவத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள விதத்தின் காரணமாக) பதிலாள் வைத்திருப்பவர் தனக்கு பொருத்தம் என்று தோன்றும் வழியில் வாக்களிப்பார்.

**பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்கள்:**
1. பதிலாள் படிவம் தெளிவாக உங்களின் பெயர் மற்றும் விலாசத்தை குறிப்பிட்டு நிரப்பப்பட வேண்டும். கையெழுத்திட வழங்கப்பட்டுள்ள இடத்தில் கையொப்பம் இடப்பட வேண்டும். பதிலாள் படிவமானது ‘எயார்லைன் மத்தியநிலையம்’, பண்டாரநாயக்கா சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்காவில் அமைந்துள்ள பதிவுசெய்யப்பட்ட காரியாலயத்தில் 25 மே 2022 பிற்பகல் 3.00 க்கு பிந்தாது வைப்பிலப்படுதல் வேண்டும், இது கூட்டம் இடம்பெறுவதற்கு நியமிக்கப்பட்ட நேரத்திற்கு 48 மணித்தியாலங்கள் முன்னதாகும்.
2. வதியும் / வதியாத பங்குதாரர்களைப் பொறுத்த வரை பூர்த்தி செய்யப்பட்ட பதிலாள் விண்ணப்ப படிவத்தை சமர்ப்பிக்கும் வேளை முத்திரையிடல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

சுகாதார மற்றும் பாதுகாப்பு ஒழுங்குவிதிகளுக்கு - மறுபக்கத்தினை பார்க்கவும்.

# பதிலாள் படிவம்

**குறிப்புக்கள்:**

**1. சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள்**

சுகாதார மற்றும் உள்நாட்டு மருத்துவ சேவைகள் (சுகாதார அமைச்சு) அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள சுகாதார மற்றும் பாதுகாப்பு வழிகாட்டிகள் மற்றும் கூட்டத்திற்கு சமூகமளிக்கும் அனைவரதும் பாதுகாப்பு மற்றும் நலனை உறுதிசெய்வதற்காக நிகழ்விடத்தினால் அமுல்படுத்தப்பட்ட நியமங்கள் ஆகியவற்றிற்கு இணங்கியொழுகி இக்கூட்டம் நடைபெறும். அத்தகைய வழிகாட்டிகள் மற்றும் நியமங்களுடன் இணங்கியொழுகுவதில் பின்வருவனவற்றை கவனத்திற்கொள்ளவும்:

ஆ) அனைத்து பங்கேற்பாளர்களும் வெப்பநிலை சோதனைக்கு உட்படல் வேண்டும்.

ஆ) சுகாதார அமைச்சினால் குறித்துரைக்கப்பட்ட விதிமுறைகளுக்கு அதிகமாக வெப்பநிலையினை பதிவுசெய்யும் நபர்கள் கூட்ட மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

இ) இருமல், சளி, தொண்டை வலி உள்ளடங்களான ஏதேனும் வகையான சுவாச தொற்றுநோய் அல்லது வேறு ஏதேனும் அதனையொத்த நோய் அறிகுறிகளையுடைன நபர்கள் கூட்டம் நடைபெறும் மண்டபத்திற்குள் நுழைய அனுமதிக்கப்படமாட்டார்கள்.

ஈ) கைகுலுக்குதல் போன்ற உடல் ரீதியான தொடர்பு அனுமதிக்கப்படாததுடன் கூட்டம் நிறைவடைந்ததன் பின்னர் பங்கேற்பாளர்கள் புறப்படாமல் காலங்கடத்துவதற்கோ அல்லது தங்கியிருக்கவோ அனுமதிக்கப்படமாட்டார்கள்.

உ) முகக் கவசம் அணிந்திருத்தல் மற்றும் சமூக இடைவெளியை பேணல் போன்ற சுகாதார வழிகாட்டல்கள் மற்றும் நியமங்களை பின்பற்றாத எந்த ஒரு நபரும் கூட்டம் இடம்பெறும் மண்டபத்தில் இருந்து வெளியேற வேண்டும்.

ஊ) கூட்டத்தில் கலந்து கொள்ளும் வேளை பொருத்தமான முகக் கவசம் ஒன்றை அணிந்திருக்க வேண்டும்.

**2. பதிலாளால் வாக்களிப்பு**

எமது அங்கத்தவர்களின் சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு எமக்கு முக்கியமாதலால், பணிப்பாளர் சபையின் அங்கத்தவர் ஒருவரை, பதிலாள் மூலம் அங்கத்தவர்களை பிரதிநிதித்துவம் செய்து அவர்கள் சார்பில் வாக்களிப்பதற்கு, நியமிக்குமாறு அங்கத்தவர்கள் ஊக்குவிக்கப்படுகின்றார்கள். பதிலாள் படிவத்தின் மறுபுறத்தில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய அங்கத்தவர்கள் கூட்டத்தில் எடுக்கப்படவிருக்கும் விசேட தீர்மானங்களில் தங்களது வாக்களிப்பு விருப்பத்தேர்வுகளை மற்றும் பதிலாள் படிவத்தினை நிரப்பி அதனை கம்பனியிடம் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

**3. கூட்டத்தில் பங்கேற்றல்**

ஓர் அங்கத்தவர் நேரில் அல்லது பதிலாளாக (கம்பனியின் பணிப்பாளர் அல்லாத ஒருவர்) கூட்டத்தில் பங்கேற்க விரும்பினால் அத்தகைய அங்கத்தவர் அல்லது அவர்களது பதிலாள் பின்வருமாறு வேண்டப்படுகின்றார்கள்:

அ) பதிவு செய்வதற்கு, கட்டாய சுகாதார பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு மற்றும் தேவைப்படும் படிவங்களை நிரப்புவதற்கு மற்றும் நெருக்கமாய் கூடுவதனை தவிர்ப்பதற்காக நேரத்திற்கு முன்பாகவே வருகை தருதல்.

ஆ) கம்பனியினால் அமுல்படுத்தப்படும் சுகாதார மற்றும் பாதுகாப்பு வழிமுறைகளுடன், ஒத்துழைத்தல் இவை. கூட்டத்தில் அனைத்து பங்கேற்பவர்களது சிறந்த நலனைக் கருத்திற்கொண்டு மேற்கொள்ளப்படுகின்றன.

அங்கத்தவர்கள் மற்றும் / அல்லது அவர்களது பதிலாட்கள் சுகயீனமுற்று காணப்பட்டால், கூட்டத்திற்கு சமூகளிக்க வேண்டாம் என கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

கூட்டத்தில் பங்கேற்பவர்களது சிறந்த நலனைக் கருத்திற்கொண்டு, கூட்டம் தொடர்பாக கம்பனி ஏதேனும் மேலதிக நடவடிக்கையினை மேற்கொள்ளவேண்டி ஏற்பட்டால், அரசாங்கத்தினால் ஏதேனும் தொடர்பாடல்கள், வழிகாட்டிகள், பணிப்புரைகள் அல்லது கட்டளைகள் வழங்கப்பட்டிருப்பின், அத்தகைய நடவடிக்கையின் அறிவித்தலானது கம்பனியின் இணையத்தளம் - www. srilankan.com இலும், மற்றும் தேசிய பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்படும்.

www.srilankan.com
எயர்லயின் சென்டர்,
பண்டாரநாயக இன்டர்நேஷனல் ஏர்போர்ட், கட்டுநாயக, ஸ்ரீ லங்கா.